வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வீரகேசரி ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 04 22.10.2023 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 316 பக்கங்கள் : 20



07
அனைத்து நாடுகளையும் நவீனப்படுத்தி எதிர்கால சமூகத்தை உருவாக்குவோம்!



08
எசமானரின் குரல்?



09
ஜனநாயக படிமுறைகளை இடித்தழிக்கும் அபாயம்!



11
மாறவேண்டியவர்கள் மக்களா? அரசியல் தலைவர்களா?

# 2024 இல் ஜனாதிபதித் தேர்தல் பின்னர் பாராளுமன்ற தேர்தல்!

## 2025 முற்பகுதியில் மாகாண சபைத் தேர்தல் ஐ.தே.கவின் தேசிய மாநாட்டில் ரணில் அறிவிப்பு



கொழும்பு, ஒக்ரோபர் 22

“நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தியதன் பின்னர் அரசியலமைப்பின் பிரகாரம் அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். அதன் பின்னர் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு 2025ஆம் ஆண்டின் முதற்காலாண்டில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும்”

-இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. 11

## எரிபொருள் விலை நாளாந்தம் மாறும்!

கொழும்பு, ஒக். 22

நாளாந்தம் எரிபொருள் விலையைத் தீர்மானிக்கும் விலைச் சூத்திர முறையை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் இந்த முறை அறிமுகப்படுத்தப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி. வி. சானக்க தெரிவித்தார்.

இந்த முறைப்படி எரிபொருள் விலைகள் தினமும் மாறிக் கொண்டே இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## ஐ.தே.க. தலைமையிலேயே 2024 இல் புதிய ஆட்சி வரும்!

கொழும்பு, ஒக். 22

2024 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஆட்சியே அமையும் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரான பாலித ரங்கே பண்டார தெரிவித்தார். 11

தாய் வீட்டுக்கு வாருங்கள்!

## கட்சியை விட்டு வெளியேறியோரை மீண்டும் அழைக்கின்றது ஐ.தே.க.

கொழும்பு, ஒக். 22

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறியோர் மீண்டும் தாய்வீடு திரும்ப வேண்டும் என்று அக்கட்சியின் உப தலைவரான ரவி கருணாநாயக்க அழைப்பு விடுத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட மாநாடு 11



## ஆதிவாசிகள் யாழ். வந்தனர்

கொழும்பு, ஒக். 22

மஹியங்கனையில் வசித்துவரும் ஆதிவாசிகள் முதல் தடவையாக யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்தனர்.

ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னில அத்தோ தலைமையிலான சுமார் 100 இற்கும் மேற்பட்ட ஆதிவாசிகள் குழுவினரே யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர். இவர்கள் யாழின் முக்கிய இடங்களை பார்வையிடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. 11

## தூத்துக்குடி - காங்கேசன் இடையில் விரைவில் பயணிகள் கப்பல் சேவை

சென்னை, ஒக். 22

தூத்துக்குடியில் இருந்து காங்கேசந்துறைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்தை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழக செய்திகள் தெரிவித்துள்ளன.

இதற்கமைய, மும்பையில் இடம்பெற்ற 11

## நவம்பர் 13 பட்ஜெட்!

### தேர்தலை இலக்கு வைத்து பல அறிவிப்புகள் வரலாம்

கொழும்பு, ஒக். 22

2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நவம்பர் 13ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் 11

## புதிய பொலிஸ்மா அதிபர் பதவிக்கு மூன்று மூத்த டி.ஐ.ஜிக்கள் போட்டி!

கொழும்பு, ஒக். 22

பொலிஸ்மா அதிபர் பதவிக்கு மூன்று மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர்கள் இடையே கடும் போட்டி ஏற்பட்டுள்ளதாக அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

மூன்று வாரகால சேவை நீடிப்பின் பின்னர் தற்போதைய பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவின் சேவையை நீடிப்பதில் அரசாங்கத்துக்கு எண்ணமில்லை.

சி.டிவிக்ரமரத்னவின் சேவையை மேலும் 3 வாரங்களுக்கு நீடிப்பதற்கான ஜனாதிபதியின் தீர்மானம் அரசியலமைப்பு சபையின் அங்கீகாரத்தை பெறாதமையால் பல் வேறு நெருக்கடிகள் எழுந்துள்ளன.

பதில் பொலிஸ்மா அதிபர் 11

## பலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணத்தில் நேற்று போராட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 22

“காஸா மீதான இனப்படுகொலையை எதிர்ப்போம் - ஒடுக்கப்படும் பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக ஒன்றிணைவோம்” எனும் தொனிப்பொருளில்

பலஸ்தீன மக்களுக்காக ஆதரவுக் குரல் கொடுக்கும் வகையில் யாழ்ப்பாணத்தில் நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. 11



## இப்படியும் நடக்கிறது

சீனாவிலிருந்து உற்சாகமாக நாடு திரும்பியிருக்கிறாராம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

'சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கவுள்ள கடன் வசதியின் இரண்டாம் தவணைக் கொடுப்பனவை வழங்க ஊழியர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. இதற்கமைய, 330 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி, இரண்டாம் தவணைக் கொடுப்பனவாக இலங்கைக்கு கிடைக்கவுள்ளது.'

'இலங்கையின் கடன் மீட்சிக்காக இரு தரப்பினருக்கும் பொருத்தமான இடைக்கால மற்றும் நீண்ட கால வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த சீனா முழுமையான ஆதரவை வழங்க தயாராக இருக்கிறது என்று சீன நிதி அமைச்சர் லியு குன் தெரிவித்திருக்கிறார்.'

இத்தகைய செய்திகள் வெளிவந்த நிலையிலேயே ஜனாதிபதி நாடு திரும்பியிருக்கிறார்.

ஜனாதிபதியின் நிதி விவகார ஆலோசகரும், முன்னாள் திறைசேரி செயலாளருமான கலாநிதி சமரதுங்கவுக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கொள்காட்டி, சில விடயங்களை இந்தப் பத்தியில் சில வாரங்களுக்கு முன்னர் எழுதியிருந்தோம்.

அதில் இந்த ஒக்ரோபர் மாத இறுதியில் நாட்டின் பொருளாதார நிலைமையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படும் என்று அவர் தெரிவித்திருந்ததாகவும், ஆனாலும் பொருளாதார நிலைமையில் ஏற்படுகின்ற இந்த மாற்றம் பற்றிய செய்திகளை சற்று பின்போட்டு மார்ச் மாதம் வரை நிலைமையை வெளித்தெரியாமல் இருக்கவும், பின்னர் அதனை வெற்றிகரமான மாற்றமாக காட்டி ஒரு பெரிய ஆதரவு தளத்தை ஏற்படுத்தவேண்டும் என்றும் ஜனாதிபதி யோசித்து வருவதாகவும் அந்தப் பத்தியில் தெரிவித்திருந்தோம்.

மகிந்த ராஜபக்ஷ யுத்தத்திலிருந்து நாட்டை மீட்டதுபோல பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டவர் என்ற பெயரை தனதாக்கிக்கொண்டு, தேர்தலை சந்திக்கவே ரணில் விரும்புவதாக அந்தப் பத்தியில் தெரிவித்திருந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

கடன் மறுசீரமைப்பு விடயத்தில் இலங்கையின் மிகப் பெரிய கடன் வழங்குனரான சீனா, ஒத்துழைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு அவ்வப்போது முன்வைக்கப்பட்டு வந்தது. சீனாவின் இந்த நிலைப்பாடு, மேற்குலகை குறிப்பாக அமெரிக்காவை ஆத்திரமடைய வைத்ததுடன், கடன் மறுசீரமைப்பு விடயத்தில் சீனாவின் உதவி கிடைக்காவிட்டாலும், சர்வதேச நாணய நிதியம் அதனை கண்டுகொள்ளாமலே இலங்கைக்கு இரண்டாவது கடன் உதவியை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்ததாகவும் பேசப்பட்டது.

கடன் மறுசீரமைப்பு விடயத்தில் சீனா ஒத்துழைக்காவிட்டாலும், சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு உதவும் நிலை ஏற்பட்டால், சீனாவின் முக்கியத்துவம் குறைந்துவிடும் என்பதை உணர்ந்துகொண்டதாலோ என்னவோ, சீனா இப்போது இறங்கி வந்திருப்பதாகவே அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சீனாவுக்கு சென்ற ஜனாதிபதியும் தான் நாட்டுக்கு திரும்பும்போது சீனாவிடமிருந்து ஒரு நல்ல பதிலை எடுத்து வருவது தனக்கு அரசியல் ரீதியிலும் சாதகமாக அமையலாம் என்று எண்ணி அதற்கான காய்நகர்த்தல்களை செய்திருக்கலாம். அதற்காக அவர் சீனாவுக்கு என்ன உறுதிமொழிகளை வழங்கினார் என்பதை சில நாட்களிலேயே அறியக்கூடியதாக இருக்கும்.

பொருளாதார நிலமையில் இவ்வாறான முன்னேற்றங்களை சந்தித்த அதேவேளை, நேற்றைய தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாட்டிலும் சில அதிசயங்களை காணமுடிந்தது.

கடந்த தேர்தலில் காணாமல் போன அந்தக் கட்சி, ரணில் அதிர்ஷ்டவசமாக ஜனாதிபதியானதைத் தொடர்ந்து படுக்கையிலிருந்து எழுந்து அமர்ந்திருந்தை கடந்த காலங்களில் காணமுடிந்தது.

ஆனாலும் தனது நிறைவேற்று அதிகாரத்தையும் அதன் தாற்பரியங்களையும் பயன்படுத்தி தனது கட்சியை மறுசீரமைக்கின்ற விடயத்தில் தலைவர் ரணில் அக்கறை காட்டவில்லை என்ற புகார் கட்சியினர் மட்டத்தில் தொடர்ந்து இருந்து வந்ததையும் கட்சிக்கு நெருக்கமான வட்டாரங்கள் அவ்வப்போது வெளிப்படுத்தி வந்தன.

இந்நிலையிலேயே நேற்று நடைபெற்ற கட்சி மாநாட்டில், கட்சியை வழிநடத்திக் கொண்டு செல்ல புதிதாக கட்சியில் நிர்வாகக்குழு ஒன்றை அமைப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றதாம். அதில் என்ன சிறப்பு என்று பலரும் விழித்தபோதுதான், கட்சி மட்டத்திலிருந்து கிடைத்த செய்திகள் ஆச்சரியத்தில் ஆழ்த்தின.

இந்த குழு வெறுமனே ஐக்கிய தேசியக் கட்சியினரை மாத்திரம் கொண்டதாக இல்லாமல் பல வேறு தரப்பிலிருந்தும் புத்திஜீவிகள், திறன்மிக்கவர்களை கொண்டதாக இருக்கும் என்றும் அதில் அங்கம் வகிப்பவர்கள் கட்சியின் உறுப்பினராக இருக்க வேண்டியதில்லை என்றும், அவர் வேறு கட்சியில் இருந்தாலும் இதிலும் இடம்பெறலாம் என்றும் தீமானிக்கப்பட்டிருக்கின்றதாம்.

நாட்டை நிர்வகிக்கவிருக்கும் ஒரு கட்சிக்கு அந்தக் கட்சியினர் மாத்திரமன்றி வெளியிலிருப்பவர்களும் உதவுவது நாட்டை நிர்வகிக்க பயனுள்ளதாக இருக்கும் என்று யோசனை கூறப்பட்டிருக்கின்றதாம்.

இந்தக் குழுவில் இடம்பெறுவதற்காக வடக்கு கிழக்கிலிருந்தும் சில முக்கியஸ்தர்களை கட்சி அணுகியிருக்கின்றது என்பது கூடுதல் தகவல்.!

- ஊர்க்குருவி.

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் வெள்ளி வாராந்த நிகழ்வு

வடமராட்சி, ஒக். 22

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் வெள்ளி வாராந்த நிகழ்வும் உதவி வழங்கலும் நேற்று இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் இரா. செல்வவடிவேல் ஆசிரியரின் மகாபாரதச் சொற்பொழிவும், நவராத்திரி மகிமை என்ற தொனிப்பொருளில் செல்வி அமுதாஸ் நிலாவினியின் பேச்சும் இடம்பெற்றன.

தொடர்ந்து ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வில் உதவிகள் வழங்கப்பட்டன.

47 அயிரத்து 500 ரூபா பெறுமதியான சைக்கிள் மடு, நன்னாட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவிக்கு வழங்கப்பட்டது.

மருத்துவ சிகிச்சைக்காகச் சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியை வசிப்பிடமாக வுள்ள குடும்பத்தினருக்கு 10 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

இந்த உதவிகளைச் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் வழங்கி வைத்தார்.



நவராத்திரி நிகழ்வுக்காகப் பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரிக்கு 40 ஆயிரம் ரூபா நிதியும் சிறுவர் தின நிகழ்வுக்காக 25 ஆயிரம் ரூபா நிதியும் வங்கியில் வைப்பிலிடப்பட்டது.

(அ-2)

## சிவாஜிலிங்கத்துக்கு எதிரான வழக்கு 2024 பெப்ரவரியில்!

கொழும்பு, ஒக். 22

தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினரான தியாகி திலீபன் நினைவேந்தலை, அரசியலமைப்பை மீறி ஏற்பாடு செய்ததாகக் கூறி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, 2024ஆம் ஆண்டு பெப்ரவரி 5ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதுடன், வழக்கின் 6 அரசு தரப்பு சாட்சிகளை அன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

முந்தைய சந்தர்ப்பத்தில், எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் குற்றப்பத்திரிகையை சமர்ப்பித்ததுடன், குற்றப்பத்திரி



கையை நிறைவேற்றியதைத் தொடர்ந்து, அவர் தலா ரூ.1 மில்லியன் பெறுமதியான இரண்டு காசுப் பிணையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டார்.

2020 செப்ரெம்பர் 15 ஆம் திகதி யாழ்ப்பாணம் கோண்டாவில் கோகுல வீதியில் இராசையா பார்த்தீபன் என்ற தியாகி திலீபனின் 33ஆவது நினைவு தினத்தை ஏற்பாடு செய்ததன் மூலம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றம் இழைக்கப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக 2022 பெப்ரவரி 24 அன்று சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இலங்கை அரசியலமைப்பின் 44 (2) வது சரத்தின் படி, அரசியலமைப்பை மீறியமை மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்தமை ஆகிய குற்றச்சாட்டின் கீழ் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியிருந்ததுடன், குறித்த அழைப்பாணையின் பிரகாரம் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகாததால், குற்றம் சாட்டப்பட்டவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

பிடியாணையை பெற்றுக்கொண்ட குற்றம் சாட்டப்பட்டவர் ஜனாதிபதி சட்டத்தரணி நியன்சி அரசகுலரத்ன உள்ளிட்ட சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றத்தில் ஆஜரானார்.

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட காலப்பகுதியில் சிவாஜிலிங்கம் சிகிச்சைக்காக இந்தியா சென்றிருந்தமை தொடர்பில் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட உண்மைகளை கருத்திற்கொண்டு கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் பிடியாணை வாபஸ் பெறப்பட்டது.

பதாகைகள், மெழுகுவர்த்திகள், வாழைத்தண்டுகள் போன்ற சாட்சிப் பொருட்களுடன் யாழ். நீதிமன்றத்தின் வழக்கு அறிக்கை உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் கோப்பாய் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரின் பெயர்களும் சாட்சியங்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன. (அ)

## லலித் கொத்தலாவல காலமானார்



கொழும்பு, ஒக். 22

செலிங்கோ கன்சோலிடேட்டட் நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் செலான் வங்கியின் ஸ்தாபகத் தலைவருமான தொழிலதிபர் லலித் கொத்தலாவல தனது 84 வயதில் காலமானார்.

கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் காலமானார் என தெரிவிக்கப்பட்டது. (அ)

## ஹெலியகொட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சடலமாக மீட்பு!

கொழும்பு, ஒக். 22

ஹெலியகொட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நேற்று அதிகாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் பொறுப்பதிகாரியின் சடலம் துப்பாக்கிச் சூட்டு காயத்துடன், அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தலையின் வலது பக்கத்தில் காயம் ஏற்பட்டுள்ளது.

களுத்துறையைச் சேர்ந்த பிரதம பொலிஸ் பரிசோதகர் பிரியங்கர டி சில்வா (வயது-42) இரண்டு பிள்ளைகளின் தந்தை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் தன்னைத்தானே சுட்டாரா அல்லது யாரேனும் துப்பாக்கிச் சூடு நடத்தினார்களா என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# இந்திய மீனவர் அத்துமீறலை தடுக்க ஐ.நா தலையீட்டை கோரும் இலங்கை

## கடற்றொழில் அமைச்சின் அறிக்கையில் தகவல்

கொழும்பு, ஒக். 22

**இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய கடற்தொழிலாளர்களைத் தடுத்து நிறுத்துவதற்கு ஐ.நாவின் தலையீட்டை இலங்கை அரசு கோரியுள்ளது.**

இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதியான மார்க் என்ட்ரோ பிரெஞ்சிடம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளதாக கடற்றொழில் அமைச்சால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் மன்னார், நெடுந்தீவு மற்றும் கச்சத்தீவுக்கு அருகாமையில் என மூன்று வெவ்வேறு இடங்களில் 5 இழுவைப் படகுகளுடன் 27 இந்திய கடற்தொழிலாளர்களை இலங்கை கடற்படையினர் கைதுசெய்தனர்.

குறித்த கைது நிகழ்ந்த 48 மணி நேரத்துக்குள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இது தொடர்பில் ஐ.நா. தரப்பின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய கடற்தொழிலாளர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவது ஒரு பாரிய பிரச்னையாக இருக்கிறது.

எல்லை தாண்டி அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய கடற்தொழிலாளர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்தும் வருகின்றனர்.

இவ்வாறான நிலை தொடர்வது இலங்கையின் வடக்கு கடற்பரப்பில் பதற்றமான சூழலை உருவாக்கியுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய கடற்தொழிலாளர்களின் இந்த அத்துமீறல் குறித்து புதுடில்லியின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும் என இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி மார்க் என்ட்ரோ பிரெஞ் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு உறுதியளித்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிலையான பொருளாதார கொள்கை அரசிடமில்லை

## சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 22

இலங்கை அரசாங்கத்திடம் நிலையான பொருளாதார கொள்கையில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

தர்மபுரத்திலுள்ள பாடசாலையொன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அத்துடன் மக்கள் தற்போது பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள நிலையில் எரிபொருள் எரிவாயு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தினால் தங்களது



வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்பொழுது அரசாங்கம் நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட நிதியைப் பெறுவதற்காக நாட்டு மக்களுக்கு பெரும் சுமையை கொடுத்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# கடந்த வருடத்தில் மட்டும் 5 இலட்சத்துக்கும் அதிகமானோர் இலங்கையில் வேலையிழப்பு

## ஆய்வில் வெளியானது தகவல்

கொழும்பு, ஒக். 22

இலங்கையில் ஏறக்குறைய 2000 தொழிற்சாலைகள் மற்றும் பணியிடங்கள் மூடப்பட்டதன் காரணமாக கடந்த ஆண்டு (2022) 5 இலட்சத்து 33 ஆயிரத்து 858 பேர் வேலையை இழந்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.

அதன்படி, இவ்வாறு வேலையை இழந்தவர்களுள் தொழில்துறையைச் சேர்ந்த 3 இலட்சத்து 96 ஆயிரத்து 159 பேரும் சேவைத் துறையில் 1 இலட்சத்து 37ஆயிரத்து 699 பேரும் உள்ளடங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த வருடத்தில் தனி நபர்களின் வேலை நேரங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளதாக அறிக்கைகள் சுட்டிக்காட்டுவதாக பேராசிரியர் மேலும் கூறினார்.

இளைஞர்களிடையே வேலையின்மை அதிகரிப்பு

கடந்த வருடத்தின் முதல் காலாண்டில் 66.1 வீதமானவர்கள் 40 மணித்தியாலங்கள் அல்லது அதற்கு மேல் வேலை செய்த போதிலும் அதே வருடத்தின் நான்காம் காலாண்டில் 40 மணித்தியாலங்கள் மற்றும் அதற்கு மேல் வேலை செய்தவர்களின் எண்ணிக்கை 61.7 வீதமாக குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், அதே ஆண்டில், தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 51.2 வீதத்திலிருந்து 48.9 வீதமாகக் குறைந்துள்ளதுடன் 20 முதல் 29 வயதுக்குட்பட்ட இளைஞர்களிடையே வேலையின்மை 14.2 வீதத்திலிருந்து 17.2 ஆக அதிகரித்துள்ளதாக அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

மேலும், தொழிற்சாலைகள் மூடப்பட்டமைக்கான காரணங்களாக மூலப்பொருட்களின் விலை உயர்வு, மின் கட்டணம் உயர்வு, எரிபொருள் விலை உயர்வு போன்றவற்றை நிதி அமைச்சக வட்டாரங்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# முன்னாள் படைத் தளபதிகள் மூவருக்கு தூதுவர் பதவிகள்!

கொழும்பு, ஒக். 22

முன்னாள் தளபதிகள் மூவருக்கு உயர்மட்ட இராஜதந்திர பதவிகளை வழங்க பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கான தூதுவர் பதவியே இவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

அதன்படி ஓய்வுபெற்ற படைத் தளபதிகளான ரவீந்திர சந்திரசிறி விஜேகுணரத்ன, தமித் நிஷாந்த சிறிசோம உலுகேதென்ன மற்றும் சுதர்சன் கரகொட பத்திரன ஆகியோருக்கே இந்த உயர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு முறையே, பாகிஸ்தானுக்கான புதிய தூதுவர், கியூபாவுக்கான புதிய தூதுவர் மற்றும் நேபாளத்துக்கான புதிய தூதுவர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பல நாடுகளுக்கான இராஜதந்திரிகளை இலங்கை அரசாங்கம் மாற்றிவருகின்ற பின்புலத்திலேயே இந்த மூன்று நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன. (அ)

# கல்வி அமைச்சுக்கு முன்பாக 24 ஆம் திகதி ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, ஒக். 22

கல்வி அமைச்சுக்கு முன்பாக எதிர்வரும் 24ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு ஆசிரிய - அதிபர் தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த சபை தீர்மானித்துள்ளது.

அதன் பிரதி இணைப்பாளர் ஜோசப் ஸ்டாலின் இதனைக் குறிப்பிட்டார்.

பாடசாலைச் செயற்பாடுகளுக்கு போதுமான நிதியை வழங்குதல் உள்ளிட்ட சில காரணங்களை முன்னிறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

30 தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஆசிரிய - அதிபர் தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த சபையின் பிரதி இணைப்பாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். (அ)

# ஜனாதிபதி வேட்பாளர்களுக்கான வைப்புப்பணம் அதிகரிக்கப்படும்

கொழும்பு, ஒக். 22

ஜனாதிபதி தேர்தலுக்காக போட்டியிடும் வேட்பாளர்களுக்கான வைப்புப் பணத் தொகையை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது

அதன்படி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றில் இருந்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளருக்கு 50 ஆயிரம் ரூபாய் என்ற வைப்புத் தொகையை 26 இலட்சம் ரூபாயாக அதிகரிப்பதற்கான யோசனையொன்று முன்மொழியப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளருக்கான வைப்புத் தொகையை 75 ஆயிரம் ரூபாயிலிருந்து 31 லட்சம் ரூபாயாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி வேட்பாளர் வைப்புச் செய்யக்கூடிய தொகையில் 25 லட்சம் ரூபாயை திரும்பப் பெறக்கூடிய தொகையாகவும், எஞ்சிய ஒரு லட்சம் ரூபாயை திருப்பிச் செலுத்த முடியாத வைப்புத் தொகையாகவும் செலுத்தவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், சுயேச்சை வேட்பாளரின் வைப்புத் தொகையில், 30 லட்சத்தை மீளப் பெற்றுக் கொள்ள முடியும் என அந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# அபேக்ஷா தமிழ் நாடகத் திருவிழா முதற்தடவையாக யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 22

கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற டவர் மண்டப அரங்க மன்றத்தின் ஏற்பாட்டில் அபேக்ஷா தமிழ் நாடகத் திருவிழா முதற்தடவையாக இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ளது.

யாழ். வலிகாமம் வலயத்திற்குட்பட்ட யூனியன் கல்லூரியில் எதிர்வரும் 25, 26, 27 ஆம் திகதிகளில் தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் நாடகத் திருவிழாவில் அனைவரையும் கலந்து கொள் ளுமாறு கலாசார அமைச்சின் நாடக மத்திய நிலையமாக விளங்கும் டவர் மண்டபத்தின் தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளர் கலாநிதி சண்முகசர்மா ஜெய பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கலைத்துறையின் மேம்பாட்டிற்காகவும் கலைஞர்களின் கௌரவத்திற்காகவுமே டவர் மண்டப அரங்க மன்றம் செயற்பட்டு வருகின்றது.

கொழும்பில் எல்பிஸ்டன் மற்றும் டவர் அரங்கில் வருடந்தோறும் நடைபெறுகிற நாடக திருவிழாவானது டவர் மண்டப அரங்க மன்றத்தின் ஏற்பாட்டில் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடத்த உள்ளோம்.

இங்குள்ள பாடசாலை மாணவர்களின் நாடகத் திறமைகளையும் நாடகக் கலையையும் வளர்ப்பதற்காகவும் அபேக்ஷா யாழ் தமிழ் நாடகத் திருவிழா எனும் தொனிப் பொருளில் முதற்தடவையாக இவ் நாடக விழா இம் மாதம் எதிர்வரும் 25, 26, 27 ஆகிய மூன்று தினங்கள் காலை 9 மணிமுதல் மதியம் 12 மணி வரை யாழ் யூனியன் கல்லூரியில் நடைபெற இருக்கின்றது.

இதில் யாழ்ப்பாணத்திலுள்ள கல்வி வலயங்களில் நாடகமும் அரங்கியல்துறை ஆசிரிய ஆலோசகர்களையும், இப் பாடத்தினை கற்பிக்கின்ற ஆசிரியர்களையும், உயர்தரம் மற்றும் சாதாரண தரத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்தினைக் கற்கும் மாணவர்களை உட்பட துறைசார்ந்த அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கிறோம்.

இங்கு தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறவுள்ள நாடகத் திருவிழாவில் டவர் மண்டப அரங்க மன்ற பாடசாலை மாணவர்களின் நாடகங்களும் வலிகாமம் பிரதேசத்தை முதன்மைப்படுத்துகின்ற நாடக ஆசிரியர்களின் நாடகங்கள் உட்பட நாடக ஆளுமைகள் பலரதும் பல்வேறு நாடகங்கள் அரங்கேற்றப்பட இருக்கின்றன.

இங்குள்ளவர்ளிற்காகவே டவர் மண்டப அரங்க மன்றம் தமிழ் மொழி மூலமான நாடக விழாவை முதற் தடவையாக யாழில் நடாத்துகிற போது அதற்கு அனைவரும் ஆதரவை வழங்கி நிகழ்விலும் கலந்து கொள்ளவேண்டும் - என்றார்.

# யாழ்.விமான நிலையத்துக்கு செல்வோர் மர நிழலில் காத்திருக்கவேண்டிய நிலை!

## போதிய வசதிகள் இல்லை எனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 22

**யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு நான்கு வருடங்கள் கடந்துள்ளபோதிலும் உட்கட்டமைப்பு வசதிகள், அடிப்படை வசதிகள் பெரியளவில் ஏற்படுத்தப்படவில்லை எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக இந்தியா மற்றும் கொழும்புக்கு இடையேயான பயணிகள் விமான சேவைகள் இடம்பெற்று வருகின்றன. பெருமளவானவர்கள் அதனைப் பயன்படுத்தி வருகின்றனர்.

யாழ்.விமான நிலையத்தில் பயணிகளை அழைத்துச் செல்ல மற்றும் வழியனுப்ப காத்திருப்பவர்களுக்கான இடம் மர நிழல் ஒன்றிலேயே அமைந்துள்ளது.

மரங்களுக்கு கீழே அமைக்கப்பட்டுள்ள கல்லாசனங்களிலேயே பயணிகளும், உடன் வந்தவர்களும் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது.

கோடை காலத்தில் அவை பாதிப்பை ஏற்படுத்தாது என்ற போதிலும் மழை காலங்களில் கல்லாசனங்களில் அமர முடியாது பெரும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர்.

குறிப்பாக பயணிகள் குடிவரவு - குடியகல்வு செயற்பாடுகளை முடித்துவிட்டு காத்திருப்பிற்கான போதிய இடம் இன்மையால் அவர்களும் இதே பிரச்னையை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதுடன், தென்னிந்திய பிரபலங்கள் அதிகம் பேர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்றனர்.

இவ்வாறான நிலையில் சில உட்கட்டுமான அடிப்படை வசதிகளையாவது ஏற்படுத்துவது பயணிகள் மற்றும் விமான நிலையத்துக்கு வருபவர்களுக்கு சௌகரியத்தை ஏற்படுத்தும்.

குறித்த விடயம் தொடர்பில் உள்ளூர் அரசியல்வாதிகள் முதல் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனம், இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை ஆகியவற்றின் கவனத்திற்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என கோரப்பட்டுள்ளது. (அ)

# போலி விசாவில் பிரித்தானியா செல்ல முயன்ற ஒருவர் கைது!

கொழும்பு, ஒக். 22

போலி விசாவை பயன்படுத்தி பிரித்தானியா செல்ல முயன்ற ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் நேற்று முன்தினம் கட்டார் விமான சேவையின் ஊடாக டோஹா நோக்கி செல்வதற்கு கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு பிரவேசித்திருந்த சந்தர்ப்பத்திலேயே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த 23 வயதுடையவர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

# காஸாவில் உள்ள இலங்கையர்களை விடுவிக்க இராஜதந்திர மட்ட முயற்சி

கொழும்பு, ஒக். 22

காஸா பகுதியில் சிக்கியுள்ள இலங்கையர்களை விடுவிக்க இராஜதந்திர மட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாக பலஸ்தீனத்தில் உள்ள இலங்கைப் பிரதிநிதிகள் அலுவலகத்தின் தலைவர் பேர்னாட் குரே தெரிவித்தார்.

எகிப்து மற்றும் இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதரகங்கள் ஊடாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

இஸ்ரேல் - ஹமாஸ் மோதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தற்போது 4,000ஐ கடந்துள்ளது.

அவர்களில் இலங்கைப் பெண்ணும் அடங்குவார்.

இதேவேளை, அனுலா ரத்நாயக்க என்ற பெண்ணின் சடலம் கூடிய விரைவில் அவரது குடும்ப உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்படும் என இஸ்ரேலுக்கான இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

# வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்

கொழும்பு, ஒக். 22

தென்மேற்கு வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழமுக்கம் அடுத்த 24 மணி நேரத்தில் காற்றழுத்த தீவிரமடைந்து தாழ் அமுக்கமாக மாற வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று சனிக்கிழமை மாலை எச்சரிக்கை விடுத்துள்ளது.

காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறிய பின்னர், இலங்கையில் இருந்து வடகிழக்கு திசையில் வங்கக்கடலை நோக்கி நகரும்.

40 முதல் 45 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசும். வங்காள விரிகுடாவின் தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு கடல் பிராந்தியங்களுக்கு மேலாக 50 முதல் 55 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசும்.

மேற்குறிப்பிட்ட கடற்பரப்புகளில் பலத்த மழை அல்லது இடியுடன் கூடிய மழை மற்றும் மிகவும் கொந்தளிப்பான அல்லது கொந்தளிப்பான கடற்பரப்புகளை எதிர்பார்க்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டை சூழ உள்ள கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் குறிப்பாக மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

ஆகையினால் மீனவர்களும் கடல்சார் ஊழியர்களும் அடுத்துவரும் 24 மணித்தியாலங்களுக்கு குறிப்பிட்ட கடல் பிராந்தியங்களுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர். (அ)

# உலகின் சிறந்த விஞ்ஞானிகள் தர வரிசையில் யாழ்.பல்கலையைச் சேர்ந்த இருவருக்கு இடம்!

கொழும்பு, ஒக். 22

அமெரிக்காவின் ஸ்டான்போர்ட் பல்கலைக் கழகமும் எல்செவியர் (Elsevier) நிறுவனமும் இணைந்து வெளியிட்டுள்ள உலகின் சிறந்த 2 வீத விஞ்ஞானிகளின் தரவரிசையில் முப்பத்தெட்டு இலங்கை விஞ்ஞானிகளும் ஆய்வாளர்களும் இடம்பெற்றுள்ளனர்.

இந்தப் பட்டியலில் இலங்கையிலிருந்து உள்ளடக்கப் பட்டிருப்போரில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்களான பேராசிரியர் நவரட்ணராஜா சதிபரன், கலாநிதி ரி.மதனரஞ்சன் ஆகிய இருவரும் இடம் பெற்றிருக்கின்றமை குறிப் பிடத்தக்கது.




பணிநாள் மற்றும் வருடாந்த அடிப்படையில் விஞ்ஞானிகளைப் பல்வேறு காரணிகளைக் கொண்டு தர வரிசைப்படுத்தி இந்தப் பட்டியல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

22 அறிவியல் துறைகள் மற்றும் 176 துணைத் துறைகளில் இருந்து விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பட்டியலில் இணைக்கப்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# வெள்ளத்தில் மூழ்கும் கொழும்பு; தடுப்பு நடவடிக்கைக்கு பரிந்துரை

கொழும்பு, ஒக். 22

கொழும்பு மாநகரம் மழைநீரால் வெள்ளத்தில் மூழ்குவதைத் தடுப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் குறித்த திட்டத்தை முன்வைக்குமாறு கொழும்பு மாநகர சபைக்கு வழிகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான குழு பரிந்துரை செய்துள்ளது.

சமீபத்தில், பாராளுமன்றத்தில் கூடிய பேதே வழிகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான குழு , இந்த பரிந்துரையை வழங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக கொழும்பு நகரின் பல இடங்கள் உடனடியாக நீரில் மூழ்கியிருந்ததை காணக் கூடியதாக இருந்தது. இதனால், வெள்ள அபாய நிலை ஏற்பட்டதுடன் போக்குவரத்தும் பாதிக் கப்பட்டது. மேலும், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் அவதியடைந்தனர்.

இதன்படி, நகரவாசிகள் மற்றும் நாளாந்தம் நகருக்கு வரும் இலட்சக் கணக்கான மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் பாராளுமன்றத்தின் வழிகள் மற்றும் வழிமுறைகள் குழுவின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அங்கு கொழும்பு மாநகரம் மழை நீரில் மூழ்குவதைத் தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த திட்டத்தை சமர்ப்பிக்குமாறு கொழும்பு மாநகர சபைக்கு குழு பரிந்துரைத்தது. (அ)

# காணாமற்போன மாணவர்கள் மீட்பு

கொழும்பு, ஒக். 22

15 வயதுடைய மாணவர்கள் இருவர், காணாமல் போன நிலையில் குருநாகல்-புத்தளம் வீதியிலுள்ள வீடொன்றில் தங்கியிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

நாத்தாண்டிய பிரதேசத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் இவர்கள் புகையிலை மற்றும் சுண்ணாம்பு வைத்திருந்த நிலையில் பாடசாலை அதிபர் கண்டித்த நிலையிலேயே இருவரும் காணாமல் போயிருந்தனர்.

காணாமல்போன மாணவர் ஒருவரின் உறவினர் வீட்டிலேயே குறித்த மாணவர்கள் இருவரும் தங்கியிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இரண்டு மாணவர்களும் காணாமல்போனமை தொடர்பாக, ஒரு மாணவனின் தாயும் மற்றைய மாணவனின் தந்தையும் மாரவில தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். மீட்கப்பட்ட மாணவர்களை பெற்றோரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# நிதி அமைச்சின் நிறுவனங்களுக்கு ஊழியர் இணைத்துக் கொள்ளும் முறையில் மாற்றம்!



கொழும்பு, ஒக். 22

நிதியமைச்சுக்கு கீழுள்ள நிறுவனங்களுக்கு பணியாளர்களை இணைத்துக் கொள்ளும் முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

தெரணியகல பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நிதி பற்றிய ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கூறினார். (அ)

ஈழநாடு
Eelanadu
22.10.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 05

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# முஸ்லிம் அரசியல்வாதிகளின் சந்தர்ப்பவாத முகம்

காட்டுச் சட்டங்களால் இஸ்ரேல் ஆளப்படுவதாகவும், பலஸ்தீன மக்களின் இருப்பை மறுத்து, அவர்களை கொல்வதாகவும் ரிசாட் பதியுதீன் என்னும் முஸ்லிம் அரசியல்வாதி நாடாளுமன்றத்தில் பேசியிருக்கின்றார். இதே போன்று கடந்த சில நாட்களாக பலரும் பலஸ்தீன மக்களுக்காக பேசிவரும் வேடிக்கையை காண முடிகின்றது.

ஆனால் இதே முஸ்லிம் அரசியல்வாதிகளும் பலஸ்தீனத்திற்காக பேசும் சிங்கள அரசியல்வாதிகளும் முள்ளிவாய்க்கால் பொறிக்குள் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் சிக்குப்பட்டு, அழிவை எதிர்கொண்டிருந்த போது, அது தொடர்பில், சிறிலங்கா அரசாங்கத்தை கண்டித்து, ஒரு வார்தையேனும் பேசாதவர்களாவர். இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்றதாக நம்பப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியவை தொடர்பில் ஒரு போதுமே தமிழ் மக்களின் பக்கமாக நிற்காதவர்கள். ஆனால், அவர்களோ பலஸ்தீனத்திற்காக குரல் கொடுகின்றனர்.

இதேபோன்று, பலஸ்தீன மக்களுக்காக குரல் கொடுப்பதாக கூறும், இஸ்ரேலை கண்டிக்கும் தென்னிலங்கை அரசியல்வாதிகளும் உண்டு. ஆனால் தங்களுக்கு அருகில் ஒரு மக்கள் கூட்டம் இரண்டாம் தரமாக நடத்தப்படுவது பற்றி அக்கறைகொள்ளாத இவர்களோ, பலஸ்தீனத்திற்காக சத்தமிடுகின்றனர்.


தமிழ் மக்களின் ஆயுதப் போராட்ட காலத்தில் தமிழ் – முஸ்லிம் உறவில் விரிசல் ஏற்படும் வகையில் சில சம்பவங்கள் இடம்பெற்றிருப்பது உண்மைதான். ஆனால் அதனை ஒரு சாட்டாக முன்வைத்து, இறுதி யுத்தத்தின் போது, பாரபட்சமில்லாமல் அனைத்து முஸ்லிம் அரசியல்வாதிகளுமே, ராஜபக்ஷக்களின் பக்கமாகவே இருந்தனர். ராஜபக்ஷக்களின் அனைத்து அத்துமீறல்களுக்கும் துணை நின்றனர். அவ்வாறானவர்களுக்கு இஸ்ரேல் தொடர்பில் பேசுவதற்கு என்ன தகுதியுண்டு. இந்தக் கேள்வியின் அடிப்படையில் ஒவ்வொரு முஸ்லிம் அரசியல்வாதிகளும் தங்களது அரசியல் நேர்மையை நிறுத்துப் பார்க்க வேண்டும்.

இதிலுள்ள அடுத்த முரண்பாடு. இஸ்ரேலை கண்டிக்கும் முஸ்லிம் அரசியல்வாதிகள் பயங்கரவாத அமைப்பான ஹமாஸின், அப்பாவி மக்கள் மீதான கொடூர தாக்குல்களை கண்டிக்கவில்லை. ஒரு வகையில் இஸ்ரேலை கண்டிப்பதன் மூலம் மறைமுகமாக, ஹமாஸை ஆதரிக்கின்றனர். ஹமாஸை ஆதரிக்கும் அரசியல்வாதிகள் மறுபுறம் தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தின் அடிப்படையிலான அரசியலை ஆதரிக்க மறுக்கின்றனர்.

இஸ்ரேலோ அல்லது வேறு எந்தவொரு நாடோ, அவர்களது நடவடிக்கைகளால் அப்பாவி மக்கள் கொல்லப்படும் போது, மனித குலத்தின் மீதான நமது கரிசனையை நாம் வெளிப்படுத்தத்தான் வேண்டும். அதில் முரண்பட ஒன்றுமில்லை. ஆனால் அதனை தங்களின் மதவாதத்துக்குள் குறுக்கிக் கொள்ளும்போதுதான் அது மோசமானது. முஸ்லிம் அரசியல்வாதிகளின் இஸ்ரேல் மீதான கண்டனம், இஸ்லாமிய சகோதரத்துவ கருத்தியலுக்குட்பட்டது – நிச்சயமாக மனித குலத்தின் மீதான கரிசனையின் வெளிப்பாடல்ல.

# வாழ்வதற்கான போராட்டத்தில் இலங்கையர்!

## எல்லே குணவன்ஸ தேரர் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக். 22

“உலகில் நடைபெறும் சமர்களில் வாழ்வதற்கான சமர் - போராட்டமே பாரதூரமானது - பயங்கரமானது, அந்த சமரிலேயே இலங்கை மக்கள் தற்போது ஈடுபட்டுவருகின்றனர்.” - என்று எல்லே குணவன்ஸ தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

இலங்கை மக்களுக்கு யோசிப்பதற்கு நேரமில்லை, வலி சுமந்த வாழ்க்கையையே வாழ்கின்றனர், பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. ஆக வாழ்வதற்காகவும் போராட வேண்டியுள்ளது. இனவாத சமர், குல சமர், நாடுகளுக்கிடையிலான சமர் என இவ்வுலகில் சம சமர்கள் உள்ளன, ஆனால் இவற்றையெல்லாம் விடவும் வாழ்வதற்கான சமரே - போராட்டமே பயங்கரமானது. அந்த போராட்டத்தில்தான் நாம் ஈடுபட்டுவருகின்றோம்.

தற்போதைய அரசியல் வெறுத்துவிட்டது, மக்கள் கண்ணீர் சிந்தாமல் வாழக்கூடிய யுகமே எமக்கு வேண்டும். நான் மக்கள் பக்கமே நிற்கின்றேன்.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களிக்குமாறு நான் எந்தவொரு இடத்திலும் கோரியதில்லை - என்றார்.

# மலையக மக்களின் பிரச்னைகள் குறித்து ஐ.நாவிடம் விளக்கினார் அமைச்சர் ஜீவன்

ஜெனிவா, ஒக். 22

மலையக மக்கள் எதிர்நோக்கியுள்ள உரிமை ரீதியான பிரச்சினைகள், பெருந்தோட்ட நிறுவனங்களின் அடக்குமுறைகள், உழைப்பு சுரண்டல்கள் மற்றும் மலையக மக்களுக்காக நாம் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகப் பிரதானிகளிடம் தெளிவுப்படுத்தியுள்ளார்.



அத்துடன், மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு தமது தொழிற்சங்கத்தின் முழு ஆதரவு வழங்கப்படும் எனவும் அமைச்சர் உறுதியளித்தார்.

ஜெனிவாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள அமைச்சர் ஜீவன் தொண்டமான், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக பிரதானிகளுடன் சந்திப்பில் ஈடுபட்டார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் பிரதானி செட்யா ஜெனிங்ஸ், இலங்கை தொடர்பான இலங்கைக்கான மனித உரிமை பிரிவின் தலைம அதிகாரி எலினா செங் ஆகியோர் சந்திப்பில் பங்கேற்றனர்.

அமைச்சருடன், இ.தொ.காவின் உப தலைவரும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி, அமைச்சின் ஆலோசகர் ஹரித்த விக்கிரமசிங்க ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

பெருந்தோட்ட தொழிலாளர்கள் கடந்த 200 வருடங்களாக கடந்துவந்த பாதை குறித்தும், அவர்கள் எதிர்நோக்கிய சவால்கள் மற்றும் மனித உரிமை ரீதியான பிரச்சினைகள் தொடர்பிலும் அமைச்சர் தலைமையிலான குழுவினர் எடுத்துரைத்தனர்.

2021 ஆம் ஆண்டு இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் டொமொயோ ஒகோடோவா , மலையக பெருந்தோட்ட சமூகத்தின் நிலை குறித்து அறிக்கை தாக்கல் செய்திருந்தார்.

மீண்டும் ஒருமுறை மனித உரிமை ஆணையாளர் அலுவலகத் தூதுக்குழு இலங்கைக்கும் பெருந்தோட்ட பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொள்ள வரவேண்டும் என்ற அழைப்பையும் அமைச்சர் விடுத்துள்ளார் என்பது குறிப்பிடதக்கது.

(அ)

# மேலும் 9 தனியார் பல்கலைக்கழகங்கள்?

கொழும்பு, ஒக். 22


மேலும் 9 தனியார் பல்கலைக்கழகங்களை நிர்மாணிப்பதற்கான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள பல்வேறு பிரச்சினைகள் காரணமாக இரண்டு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ரி. சுரேன் ராகவன் தெரிவித்தார்.

குறித்த பல்கலைக்கழகங்கள் வழங்கும் பட்டங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார்.

(அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பகிர்வு -100

# அதிகாரப் போட்டிக்கு இரையாகப்போகிறதா, ஓர் இனத்தின் அடையாளம்?

கணபதி சர்வானந்தா

யாழ். பல்கலைக்கழகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியானது சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த நினைவுத்தூபியை அமைப்பதற்கு அனுமதி வழங்கிய நிர்வாகத்தின் மீது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெற்கிலிருந்து வெளிவருகிற ஆங்கில நாளிதள் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. மேலும் குறித்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி செயலகம், பொலிஸ் திணைக்களம், இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான ஆணைக்குழு ஆகியவை இணைந்து பல்வேறு பல்கலைக்கழக அலுவலர்களிடம் இருந்து அறிக்கைகளை பதிவு செய்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வாசித்துவிட்டு இலகுவில் கடந்து சென்றுவிட முடியாத செய்தி இது. வடக்கில் பிறந்து வளர்ந்து யுத்த காலத்தில் கல்வி கற்று அதே நிலத்தில் வாழ்ந்து வருகிற இந்த நாட்டின் பிரஜை என்கிற வகையில் மேற்குறித்த செய்தி அதிக கவனத்திற்கு உரியதாகிறது. போரிலே உயிர் நீத்தவர்களின் நினைவாக நடுகல் அமைத்து வழிபடுகிற மரபு காலம் காலமாக நம்மிடம் இருந்து வருகிறது. சங்க காலத்தின் வழி தொடர்ந்து வருகிற இம்மரபை ஒட்டியே கிராமியத் தெய்வ வழிபாடுகள் தோற்றம் பெற்றன என்கிறார்கள் மானுடவியலாளர்கள். இப் பின்னணியில் யாழ் பல்கலைக்கழகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள தற்போதைய நினைவுத் தூபியானது முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள சின்னமாகும். இது இத்தூபியின் பின்னே இந்த நிலத்தின் வரலாறும் உளவியலும் வலுவான சமூக இருப்பின் அடையாளமும் பொதிந்து உள்ளது என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய வலுவான உண்மையாகும். வலிமையான மாணவ சமூகத்திற்கு இந்த நிலத்தின் கதைகளை எதிர்வரும் காலத்திலும் எடுத்துச் சொல்லுகிற சின்னமாகும். எனவே இதற்கு எதிராக நிகழ்த்தப்படுகிற திட்டமிட்ட அழித்தல் செயற்பாடுகளை உரிய முறையில் முறியடிக்க வேண்டியது பல்கலைக்கழக சமூகத்தினது மட்டுமன்றி புத்திஜீவிகள் ஒவ்வொருவரினதும் கடமையாகும். இன அழித்தல் என்பது வெறுமனவே ஒரு சமூகத்தின் மனிதர்களை அழிப்பது மட்டுமல்ல, மாறாக அந்த இனக்குழு சார்ந்திருக்கக் கூடிய அடையாளங்களை மெல்ல மெல்ல அழித்து இனத்தின் இருப்பினை சிதைப்பதுமாகும், இதனையே காலம் காலமாக நிகழ்த்திவருகிறது இலங்கை அரசு. ஒருபுறம் தமிழ் மக்களின் உணர்வுகளில் பதியக்கூடிய எச்சங்களை சிதைப்பது, வரலாற்றின் கதைகளை திரிபுபடுத்துவது, வரலாற்று எச்சங்களை மாற்றி அமைப்பது மற்றும் இளைய சமூகத்தினுடைய போக்குகளை மாற்றக்கூடிய நிகழ்ச்சி நிரல்களை அரங்கேற்றுவது என்று தொடர்கின்றன நிகழ்ச்சி நிரல்கள். தெரிந்தோ தெரியாமலோ இத்தகைய செயற்பாடுகளுக்கு நமது சமூகமும் பங்குதாரர்களாகி விடுகிறது என்பதுதான் வேதனை. - என முகநூல் பதிவொன்றை இட்டிருக்கிறார் சர்மிளா. அதே பொருட்பட மற்றுமொரு செய்தியை 19 ஒக்ரோபர் 2023 அன்று தமிழ் கார்டியன் என்ற இணையத்தளமும் பதிவு செய்திருக் கிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியானது இன்னும் ஒரு முறை அகற்றப்படலாம்! என்ற தலைப்போடு அச் செய்தி பிரசுரமாகியிருக்கிறது. மற்றுமொரு பிராந்தியப் பத்திரிகைச் செய்தியை மேற்கோள் காட்டியே அச் செய்தி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

அச்செய்தியில், புனரமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை அகற்றுவதற்கான முயற்சிகள் குறித்து விசாரணை நடத்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் குழுவொன்றை நியமித்துள்ளதாக அந்த நாளிதழில் வெளியான கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு ஆயுதப் போரின் முடிவில் இனப்படுகொலைத் தாக்குதலில் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்த நினைவுச்சின்னம் முதலில் 2019 இல் நிறுவப்பட்டது. இருப்பினும், 2021 ஜனவரி 8 அன்று ஆள் அரவம் அற்ற இரவு வேளையில் பலத்த இராணுவம் மற்றும் பொலிஸ் பிரசன்னத்துடன் அச் சின்னம் அழிக்கப்பட்டது. சர்வதேச கண்டனங்களைத் தொடர்ந்து, ஒரு மாற்று நினைவுச்சின்னம் நிறுவப்பட்டது. எவ்வாறாயினும், வடக்கு - கிழக்கில் உள்ள பல ஈழத் தமிழர் நினைவுச்சின்னங்களை அழித்ததைப் போல, சிறிலங்கா அரசும் பாதுகாப்புப் படையினரும் நினைவுச்சின்னத்தை அழிக்கத் தொடர்ந்து முயற்சித்து வருகின்றனர் என்ற அச்சம் இன்னும் இருக்கிறது. விசாரணைகள் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், அறிக்கைகளை மேலும் ஆராய்வதற் காக விரிவுரையாளர் மற்றும் விசுவமடு மற்றும் கட்டுடை, மானிப்பாய் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இருவர் என மூவர் அடங்கிய குழுவொன்றை பல்கலைக்கழகம் நியமித்துள்ளது. - என்ற கருத்துப்பட எழுதிய தமிழ் காடியனின் பதிவு முற்றுப் பெறுகிறது.

ஒரு சமூகத்தின் விருப்பு வெறுப்பு என்ற வகைக்குள்ளேயே நினைவுச் சின்ன நிர்மாணத்தையும் அடக்கலாம். இனங்களுக்கிடையே இணக்கத்தைக் காணலாம், ஓர் அமைதியான இலங்கையை உருவாக்கலாம், ஒரு சுபீட்சத்தை நோக்கி நகரலாம் என முயற்சி எடுக்க நினைக்கும் தேசப்பற்றாளர்களின் நல்லெண்ண முயற்சியைப் புறந்தள்ளுவதாகவே இது போன்ற அரசியல் பின்புலங் கொண்ட நடவடிக்கைகள் இருக்கும் என்பது பலரது ஆதங்கம்.

யுத்தம் ஒன்று நடைபெறுகிறபோது அதிலே பங்குபெறுபவர்களில் ஒருவர் வெற்றி கொண்டால் மற்றவர் தோல்வியடைவார் என்பது பொது நியதி. ஆனால் அவர்கள் இருவருக்கும் தமக்காகப் போராடி மரணித்தவர்களை நினைவுகூருவதற்கும், இது போன்ற நினைவுத் தூபியை அமைத்து அவர்களுக்கான மரியாதையைச் செலுத்துவதற்கும் உரிமையும் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை.

இது ஒரு தனிமனிதனின் ஆசை அபிலாஷைகளுக்குட்பட்ட விடயம் அல்ல. ஓர் இனத்தின் வேட்கையும் எதிர்பார்ப்புமாகக் காணப்படும் ஒன்றுக்காக அமைக்கப்படும் இது போன்ற விடயங்களை முதன்மைப்படுத்தி முன் செல்வதே ஒரு ஜனநாயக அரசின் நோக்கமாக இருக்க வேண்டும்.

போலித் தொன்மங்களை அடையாளப்படுத்தி அதற்கென ஒரு வரலாற்றைப் புனைகின்றவர்களிடத்தே அறத்தையும் அது சார்ந்த சிந்தனைகளையும் எதிர்பார்ப்பதென்பது மடமை.

அது மட்டுமல்லாமல் தமிழ் இனத்துக்கு எதிராக அண்மையில் நடைபெற்ற இது போன்ற அரச நடவடிக்கைகளுக்குப் பின்புலத்தில் எம்மவர் சிலரும் உண்டு என்ற பதிவுகளையும் ஆங்காங்கே கண்டேன். சொந்த நலன்களை நிலைநிறுத்துவதற்காக அவர்கள் அதற்குத் துணைபோவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.அது உண்மையானால் அவர்களால் நாம் எமது அடையாளங்களை இழக்கப் போகிறோம் என்பதுதான் உண்மை. அதனை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்?

# இந்தவார ராசிபலன் 22.10.2023 - 27.10.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - ஐப்பசி 05
நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : பிரதமை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

குடும்பத்தில் உற்சாகம் கூடும். விருந்தினர்கள் இல்லம் தேடி வருவார்கள். தொழிலைச் சிறப்பாக நடத்துவீர்கள். பணவரவுகளைப் பக்குவமாகக் கையாளுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் புத்திசாலித்தனத்தால் அலுவலகத்தில் நற்பெயர் எடுப்பார்கள். வியாபாரிகளுக்கு வியாபாரம் விருத்தி அடையும். விவசாயிகளுக்கு கால்நடைகளால் எதிர்பார்த்த வருவாய் கிடைக்கும். அரசியல்வாதிகள் பிறருக்கு உதவி செய்வார்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

சொத்துகளை வாங்க முயற்சிப்பீர்கள். புதிய பொருள்களை உற்பத்தி செய்வீர்கள். வழக்குகளில் சாதகமான நிலை உண்டாகும். குடும்பத்துடன் விருந்துகளில் பங்கேற்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் சக ஊழியர்களின் நட்பைத் தக்க வைத்துகொள்வீர்கள். வியாபாரிகள் கடன் கொடுக்க வேண்டாம். விவசாயிகள் கறுப்பு நிறப் பயிர்களால் லாபம் அடைவார்கள். அரசியல்வாதிகள் எதிர்ப்புகளை எதிர்கொள்வார்கள். கலைத் துறையினர் பிறரிடம் அன்புடன் நடப்பீர்கள். பெண்கள் சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள். மாணவர்கள் நன்கு படிப்பார்கள்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

தொழிலில் புதிய வாய்ப்புகளைப் பெறுவீர்கள். தாய்க்கு உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும். வெளியூர் செல்லும் யோகம் உண்டாகும். கடன்கள் வசூலாகும். உத்தியோகஸ்தர்கள் சக ஊழியர்களிடம் கவனமாகப் பழகவும். வியாபாரிகளுக்கு இருந்த எதிர்ப்பு விலகும். விவசாயிகளுக்கு கொள்முதலில் லாபம் உயரத் தொடங்கும். அரசியல்வாதிகள் எதிரிகளை நண்பர்களாக்கிக் கொள்வார்கள். கலைத் துறையினர் தெளிவுடன் காரியங்களை மேற்கொள்வார்கள். மாணவர்கள் விளையாட்டுகளைக் கற்பார்கள்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

தர்மச் சிந்தனைகள் உண்டாகும். பெரிய திட்டங்களைச் செயல்படுத்துவீர்கள். தர்மசங்கடமான சூழ்நிலைகளைத் தவிர்ப்பீர்கள். எந்த விஷயத்திலும் வாக்கு கொடுக்க வேண்டாம். உத்தியோகஸ்தர்கள் புதிய நுணுக்கங்களைக் கற்பார்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். விவசாயிகள் புதிய குத்தகைகளை எடுப்பார்கள். அரசியல்வாதிகள் வளர்ச்சியை நோக்கிப் பயணிப்பார்கள். கலைத் துறையினருக்கு புது ஒப்பந்தங்கள் கிடைக்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

உடனுக்குடன் முடிவெடுத்து வெற்றி பெறுவீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். ஆரோக்கியம் குன்றியோருக்கு மருத்துவ உதவிகளைச் செய்வீர்கள். இல்லத்துக்கு நவீன உபகரணங்களை வாங்குவீர்கள். உத்தியோகஸ்தர்கள் சுறுசுறுப்புடன் பணியாற்றுவார்கள். வியாபாரிகளுக்கு நல்ல நண்பர்கள் துணைபுரிவார்கள். விவசாயிகள் குத்தகை பாக்கிகளை முடிப்பார்கள். அரசியல்வாதிகளின் புகழ் உயரும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

உழைப்புக்கு இரட்டிப்புப் பலன் கிடைக்கும். பெற்றோருக்கு உதவிகளைச் செய்வீர்கள். குழந்தைகளைத் திருத்துவீர்கள். உபரி வருவாயை சரியாக முதலீடு செய்வீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளிடமிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரிகள் புதுயுக்திகளால் வியாபாரத்தைப் பெருக்குவார்கள். விவசாயிகள் நவீன உபகரணங்களை வாங்குவார்கள். அரசியல்வாதிகள் சிந்தித்து செயல்படுவார்கள். கலைத் துறையினருக்கு பிறரின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் பிறரை அனுசரித்து நடப்பார்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குழந்தைகளைப் பற்றிய கவலைகளில் இருந்து விடுபடுவீர்கள். பொருளாதாரம் சிறக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு இருந்த இடையூறுகள் விலகும். வியாபாரிகள் புதிய வியாபாரத்தைத் தொடங்குவீர்கள். விவசாயிகள் பிறரிடம் அனுசரித்து நடப்பீர்கள். அரசியல்வாதிகள் எதிரிகளிடம் நல்ல பாடம் கற்பீர்கள். பெண்களை குடும்பத்தினர் பாராட்டுவார்கள்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

தொழிலில் முன்னேற்றம் உண்டு. பிறருக்கு பண உதவிகளைச் செய்வீர்கள். பணம் கைக்கு வர தாமதமாகும். அரசு அலுவலர்களிடம் நற்பெயர் எடுப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் மீது மேலதிகாரிகள் வைத்துள்ள நம்பிக்கை அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு கொடுக்கல் - வாங்கலில் சாதகமான சூழல் நிலவும். விவசாயிகளுக்கு எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். அரசியல்வாதிகள் உற்சாகத்துடன் கட்சிப் பணியாற்றுவார்கள்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தவறான வழிகாட்டுதலை ஏற்க மாட்டீர்கள். பிறருக்கு உதவுவீர்கள். தொழிலை மேம்படுத்தும் முயற்சி வெற்றி பெறும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் அலுவலக விஷயங்களை பிறரிடம் பகிர வேண்டாம். வியாபாரிகள் எச்சரிக்கையாக இருக்கவும். விவசாயிகளுக்கு மகசூல் பெருகும். அரசியல்வாதிகளுக்கு பொதுச் சேவையில் சுபிட்சம் உண்டாகும். மாணவர்களின் திறமை பளிச்சிடும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளை நடத்துவீர்கள். குழந்தைகளை கண்காணிப்பீர்கள். மனப் பயம் விலகும். அனைவரையும் மதித்து நடப்பீர்கள். உத்தியோகஸ்தர்களுக்குப் பாராட்டுகள் கிடைக்கும். வியாபாரிகள் கூட்டாளிகளை குறைத்து மதிப்பிட வேண்டாம். விவசாயிகள் உரங்களைப் பயன்படுத்துவீர்கள். அரசியல்வாதிகள் சில காரியங்களைச் சாதிப்பீர்கள். கலைத் துறையினருக்கு நல்ல செய்திகள் வந்து சேரும். பெண்கள் புதிய வீடு வாங்கத் திட்டமிடுவீர்கள். மாணவர்கள் பெற்றோரின் ஆதரவைப் பெறுவீர்கள்.


### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கடின சூழலில் இருந்து விடுபடுவீர்கள். புதிய தொழில் தொடங்க திட்டமிடுவீர்கள். பெற்றோரிடம் அனுசரித்து நடப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் தனிப்பட்ட விருப்பங்களைப் பூர்த்தி செய்வீர்கள். வியாபாரிகளுக்கு வருமானம் சீராகவே இருக்கும். விவசாயிகள் கொள்முதலில் லாபத்தைக் காண்பீர்கள். அரசியல்வாதிகள் பிறரிடம் சுமுக உறவை மேற்கொள்வீர்கள் கலைத் துறையினர் தனித்திறமையை வெளிப்படுத்துவீர்கள். பெண்கள் புனிதத் திருத்தலங்களுக்குச் சென்று வருவீர்கள்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். கடன்கள் வசூலாகும். புதிய கடன்களை யாருக்கும் தர வேண்டாம். உடல் ஆரோக்கியம், மனவளம் மேம்படும். உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். விவசாயிகள் புதிய தானியங்களைப் பயிரிட்டு லாபம் அடைவீர்கள். அரசியல்வாதிகள் நிதானமாக காரியங்களைச் சாதிப்பீர்கள். கலைத் துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். பெண்கள் புதிய ஆடை, அணிகலன்களை வாங்குவீர்கள். மாணவர்கள் பெரியோரின் அறிவுரைகளை கேட்பீர்கள்.

# “அனைத்து நாடுகளையும் நவீனப்படுத்தி எதிர்கால சமூகத்தை கூட்டாக உருவாக்குவோம்!”



சென்னை மடல்
-பகவான் சிங்-


மனமார்ந்த வாழ்த்துகள். ஒக்ரோபர் 16 அன்று அதிபர் ரணில் விக்கிரமசிங்க தனது துணைவியாருடன் பீஜிங் சென்று சேர்ந்ததிலிருந்து சில நல்ல செய்திகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. ஒக்ரோபர் 17, 18 தேதிகளில் திட்டமிடப்பட்டிருந்த ‘சர்வதேச ஒத்துழைப்புக்கான பெல்ட் மற்றும் சாலைத் திட்டத்தின்’ (BRFIC) மூன்றாவது மன்றத்தில் கலந்துகொள்வது மட்டுமல்லாமல், சீன அதிபர் ஷீ ஜின்பிங்கிடம் இலங்கைக்கான கடன் மறு சீரமைப்பு குறித்துக் கோரிக்கை வைப்பதும் ரணிலின் முன்னுரிமைகளில் முக்கியமானதாக இருந்தது. இச்சிறுதீவு தேசத்திற்கு அதிக கடன் வழங்கு நாடான சீனாவின் இந்த நடவடிக்கை மூலமே, சர்வதேச செலாவணி நிதியத்திடமிருந்து (IMF) இலங்கை உதவித் தொகை பெற முடியும். இந்தக் கடன் மறு சீரமைப்புக்கான ஒப்புதலை வழங்கும் முன்னர், ஷீ, தனது விருந்தினராக வந்திருந்த இலங்கையைக் கசக்கிப் பிழிந்து விட்டார் என்பதைக் கூறவும் வேண்டுமோ? இந்தியா, ஜப்பான் மற்றும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் சிறு நாடுகளுக்கு உதவும் நோக்கில் அமைக்கப்பட்ட பல ஐரோப்பிய நாடுகளின் கூட்டமைப்பான பாரிஸ் கிளப் ஆகியன, இலங்கைக்கான கடன் மறுசீரமைப்புக்கு ஒப்புதல் அளித்துவிட்டன என்பதை இங்கு குறிப்பிட வேண்டியதும் முக்கியமானதாகிறது. இந்த இழுபறி நிலைமையை சீனா தொடர்ந்ததன் காரணம்,

இந்துமாகடல் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், தான் முன் வைக்கும் குறுகிய கால மற்றும் நீண்ட காலத் திட்டங்களுக்கு ரணிலைப் பணிய வைப்பதே என்று செய்திகள் பரவலாக வெளியாயின. இது மறைமுகமாக, இந்திய நலன்களுக்கு எதிரான திட்டம் என்பதும் தெளிவு. தென்சீனக் கடல் மட்டுமல்லாமல், இந்து மாகடல் பிராந்தியம் முழுமையிலும் சீனாவின் ஆதிக்கத்துக்கு எதிராக, அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் அடங்கிய “க்வாட்” கூட்டமைப்பின் நடவடிக்கைகளை முறியடிப்பதே சீனாவின் நோக்கம் என்பதே இதன் பொருள். பீஜிங்கில் சீன அதிபருடனான தனது சந்திப்பின் பலனாக, ரணிலின் அரசு வியாழனன்று கொழும்பில் நடந்த ஐ எம் எப் குழுவின் முதல் ஆய்வின் முடிவில் ஒரு முக்கிய ஒப்பந்தத்தை எட்டியது. சுதந்திரத்துக்குப் பிறகான முதல் மோசமான நிதி நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்கும் 330 மில்லியன் அமெரிக்க டொலர் உதவித் தொகை பெறுவதின் முதல் படியாக இது பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு மார்ச் மாதம் சர்வதேச செலாவணி நிதியம், கொழும்பின் கோரிக்கையை ஏற்று 2.9 பில்லியன் நிதியுதவி அளிக்க ஒப்புக்கொண்டது நினைவிருக்கலாம்.

ஐ எம் எப்-இன் இந்த நிதியுதவியானது, மூழ்கிக் கொண்டிருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தைக் கரைசேர்க்கக் கைகொடுக்கும் நான்காண்டுத் திட்டமாகும். வரி அமைப்புகள் மற்றும் தேவையில்லாத செலவுகளைக் கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட அரசின் நிதி

## ரோஜாவை பரிசளித்தால் நம் கையும் மணக்கும் அல்லவா?

நிர்வாகத்தைக் கட்டுக்குள் வைத்திருக்கும் நடவடிக்கைகள் எடுப்பதாக ரணில் அளித்த வாக்குறுதியின் அடிப்படையில்தான் இந்த உதவி வழங்கப்படுகிறது. இலங்கைக்குக் கடன் கொடுத்துள்ள நாடுகள் தங்கள் கடனை மறு சீரமைத்து, ஐ எம் எப் நிதியுதவியை இந்தக் கடன்கள் கபளீகரம் செய்து விடாத படி வழி வகை செய்து தரவேண்டும் என்பதும் அவ்வமைப்பு வைத்த முக்கிய நிபந்தனையாகும். கடன் மறுசீரமைப்பு வாக்குறுதியை சீனா இழுத்தடித்து வந்த நிலையில், ரணிலின் சீனப் பயணம் எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை இப்போது புரிந்துகொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். இந்த ஒப்புதலுக்குப் பதில் நன்றியாக நமது அதிபர், சீன அதிபரின் நிபந்தனைகளுக்கு எந்த அளவுக்குப் பணிந்திருப்பார் என்பதையும் புரிந்து கொண்டிருப்பீர்கள். நான் குறையாகச் சொல்லவில்லை, நிச்சயமாக இல்லை. பீஜிங்கின் ‘மக்களின் மாபெரும் மன்ற’த்தில் (Great Hall of the People) நடந்த பிஆர்எப்ஐசி மாநாட்டில், குறிப்பாக ஒக்ரோபர் 18 அன்று அதிபர் ஷீயின் உரையைக் குறித்து வெளியான சில செய்திகளைப் படித்த பிறகு, இந்த மிகச் சாதுர்யமான உரையைக் கேட்டுப் பிரமித்துப்போனேன், ஒரு ரசிகனும் ஆனேன். பெல்ட் அண்ட் ரோடு ஒத்துழைப்பு என்பது யூரேஷியன் கண்டம் தொட்டு, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகள் வரை பரவியுள்ளது. பத்து ஆண்டுகளுக்கு முன் தன்னால் தொடங்கப்பட்ட இந்த பெல்ட் அண்ட் ரோடு ஒத்துழைப்பு ஆவணங்களில் 150இற்கும் அதிகமான நாடுகள் மற்றும் 30இற்கும் மேற்பட்ட சர்வதேச அமைப்புகள் கையெழுத்திட்டுள்ளதாக, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் மற்றும் பல உலக நாடுகளின் தலைவர்கள் வீற்றிருந்த அந்த அவையில் ஷீ தெரிவித்திருக்கிறார். இந்த மாநாட்டில் பங்கு பெற 4000இற்கும் அதிகமான பிரமுகர்கள் பதிவு செய்து கொண்டதாக நாம் அறிகிறோம். “பெல்ட் அண்ட் ரோடு ஒத்துழைப்பு என்பது, ‘ஒன்றாகத் திட்டமிட்டு, ஒன்றாகக் கட்டமைத்து, ஒன்றாகப் பலனடைவது’ என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்தது. நாகரிகங்கள், கலாசாரங்கள், சமூக அமைப்புகள் மற்றும் வளர்ச்சிக் கட்டங்கள் ஆகிய வேறுபாடுகளைக் கடந்தது. நாடுகளுக்கிடையிலான பரிமாற்றங்களுக்குப் புதுப் பாதையைத் திறந்துவிடுவதுடன், சர்வதேச ஒத்துழைப்புக்கான புதிய கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. அனைவருக்குமான வளர்ச்சியை நோக்கிய மனித இனத்தின் கூட்டு முயற்சியை பி ஆர் ஐ குறிக்கிறது” என்று சீன அதிபர் கூறியுள்ளார். அவரது யதார்த்தவாதம், நேர்மை, உலக வளர்ச்சிக்



## “நான் சீன அதிபரின் ரசிகனானேன்!”

கான உறுதி என்னை மிகவும் ஈர்த்துள்ளன. அவரது அந்த உரையிலிருந்து உதிர்ந்த சில முத்துகளை இங்கு குறிப்பிடுகிறேன். நான் ஏன் அவரது அபிமானியானேன் என்பதை நீங்கள் அறிய. “நாம் அனைவரும் ஒருவரையொருவர் நண்பர்களாகவும் கூட்டாளிகளாகவும் நடத்தி, மரியாதையும் ஆதரவும் பரஸ்பரம் வெளிப்படுத்தி வெற்றிக்கு உதவவேண்டும். அடுத்தவர்களுக்கு நீங்கள் ரோஜாக்களைப் பரிசளித்தால், அதன் மணம் உங்கள் கைகளிலும் நீடிக்கும். அதாவது அடுத்தவருக்கு உதவுவதன் மூலம் நமக்கு நாமே உதவிக்கொள்கிறோம். அடுத்தவரின் வளர்ச்சியை அச்சுறுத்தலாகவும் பரஸ்பர பொருளாதாரச் சார்பு நிலையை ஓர் அபாயமாகவும் கருதுவதால், ஒருவரின் வாழ்வு வளர்ச்சிப் பாதையில் முன்னேற முடியாமல் தேக்க நிலையை அடையும். அனைத்து நாடுகளையும் நவீனப்படுத்தி, வெளிப்படையான, அனைவரையும் உள்ளடக்கிய, இணைக்கப்பட்ட உலகை உருவாக்கி, பொதுவான வளர்ச்சிக்கு வழிவகுத்து, மனித இனத்துக்கான எதிர்காலத்தைப் பகிர்ந்து உய்யும் சமூகத்தைக் கூட்டாக உருவாக்குவோம்.” என்றார் ஷீ. உண்மையை ஒத்துக்கொள்ளுங்கள். இது உங்களையும் ஈர்க்கவில்லையா?

வெள்ளியன்று நடந்த ஷீ மற்றும் ரணில் இடையிலான சந்திப்பு குறித்து ஒக்ரோபர் 20 அன்று ‘சைனா டெய்லி’ நாளிதழில் வெளியான செய்தியை நான் உங்களுடன் பகிர விரும்புகிறேன். பி ஆர் ஐ திட்டத்தில் இணைந்த முதல் நாடுகளில் இலங்கையும் ஒன்று என்று குறிப்பிட்ட ஷீ, சீனா-இலங்கை இடையிலான உத்தி ரீதியிலான ஒத்துழைப்புக் கூட்டாளித்துவத்தை மேம்படுத்தி, உண்மையான பரஸ்பர உதவி மற்றும் நீடித்த நட்புக்கும் உயர்தர பெல்ட் அண்ட் ரோடு ஒத்துழைப்புக்கும் இலங்கையுடன் இணைந்து பணியாற்ற சீனா தயாராக இருப்பதாக உறுதியளித்தார். உயர்தர சிறப்புத் தயாரிப்புகளை இலங்கையிடமிருந்து இறக்குமதி செய்யவும் சீன நிறுவனங்கள் இலங்கையில் முதலீடு செய்து வர்த்தகத்தை மேம்படுத்தி, இலங்கையின் பொருளாதாரத்தை உயர்த்தி, நீடித்த வளர்ச்சியை எட்ட ஊக்குவிக்கவும் சீனா தயாராக இருப்பதாக ஷீ குறிப்பிட்டார். மேலும், இலங்கைக்கான சீன உதவிக்கு எந்த அரசியல் உள் நோக்கங்களும் இருக்காது என்ற முக்கியத்துவம் வாய்ந்த உறுதியையும் அவர் அளித்துள்ளார்.

இந்துமாகடலில் இலங்கை ஒரு வர்த்தக மையமாக உருவெடுத்து வருவது குறித்த தனது மகிழ்ச்சியையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார். மிகப்பெரிய கடன் வழங்கு நாடாக சீனாவும் கடன்பெறும் வறிய நாடாக இலங்கையும் இருக்கும் இந்தச் சூழலில், இந்து மாகடல் பிராந்தியத்தில் இந்தத் தீவு தேசத்தைத் தனது உத்தி ரீதியான அடித்தளமாக அமைக்கும் சீனாவின் முயற்சி திருப்திகரமான நிலையில் இருப்பதைத்தான் அவர் குறிப்பிடுகிறார் என்பதுதான் உண்மை.

அந்த நிகழ்வில் ரணில் ஆற்றிய உரையில் ஷீ நிச்சயம் மகிழ்ந்திருக்க வேண்டும். பெல்ட் அண்ட் ரோடு ஒத்துழைப்புத் திட்டத்தில் “தொடக்கம் முதலே, அதன் ஆற்றல் மற்றும் வாய்ப்புகளில் ஆழ்ந்த நம்பிக்கையுடன்” இலங்கை அதிக முக்கியத்துவம் கொடுத்துப் பங்கெடுத்து வந்ததாக ரணில் வலியுறுத்தினார். இந்து மாகடலில் வெளிப்படைத்தன்மை குறித்தும் சுட்டிக் காட்டிய அவர், பிராந்திய விவகாரங்களிலும் வளரும் நாடுகளிடையேயான ஆதரவு மற்றும் ஒத்துழைப்பை வளர்க்கவும் சீனாவுடன் அதிக ஈடுபாட்டுடன் செயல்படுவதாகவும் உறுதியளித்தார். இந்த இணக்கமான போக்கு இந்தியாவை எரிச்சலடையச் செய்திருக்கும். ஆனால், நான் ஏற்கெனவே “ஈழநாடு” கட்டுரைகளில் கூறியுள்ளதுபோல், இந்த நிலைக்கு ரணிலைக் குறை சொல்வதைக் காட்டிலும், இந்தியா தன்னைத் தானே தான் நொந்துகொள்ள வேண்டும். தன் மிக நெருங்கிய அண்டை நாடான இலங்கையில் போர் முடிவுக்குப் பின், ஒரு விரிவான பெரும் திட்டத்தை முன்னெடுத்திருக்கவேண்டிய இந்தியா, அந்தத் தீவு தேசத்தை அரசியல் மற்றும் பொருளாதார பேரிடர்களில் சிக்கி, சீனாவின் மடியில் தஞ்சம் புகும் நிலையை உருவாக்கி விட்டது. உலகின் எந்தத் தலைவரும் ரணிலின் இந்தப் பரிதாபகரமான நிலையை விரும்ப முடியாது. மிக மோசமான நிதி நெருக்கடியை நாடு சந்தித்துக்கொண்டிருந்த நிலையில் ஆட்சியில் அமர்ந்த அவரது கட்சி, நாடாளுமன்றத்தில் சற்றும் பலமில்லாத நிலையில் தத்தளிக்கிறது. வெளி உதவியாளர்களின், குறிப்பாக சீனாவின் கருணையினால் மட்டுமே அவர் இன்னும் ஆட்சியைத் தக்கவைத்துக்கொண்டிருக்கிறார்.

வார இறுதி நாளில் குடும்பத்துடன் நீங்கள் இனிதாகப் பொழுதைக் கழிக்கும் வண்ணம் நான் உங்களிடமிருந்து விடை பெறும்முன், கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் உலக வங்கியின் தலைவர் டேவிட் மல்பாஸ், சாம்பியாவிற்கான கடன் மறுசீரமைப்பு செயல்முறையைத் தாமதப்படுத்துவதாகச் சீனாவைக் குற்றம் சாட்டியதை உங்கள் கவனத்துக்குக் கொண்டு விரும்புகிறேன். மேலும், சீனாவுக்கான அந்நாட்டின் கடன் தொகை எவ்வளவு என்பது குறித்த வெளிப்படைத் தன்மையின்மை குறித்தும் அவர் கவலை தெரிவித்து, வளரும் நாடுகளின் கடன் சுமைகளை மறுசீரமைப்பதற்கான புதிய செயல்முறைக்கான அறைகூவலும் விடுத்தார். ”அனேகமாக, கடன் ஒப்பந்தங்களில் வெளிப்படுத்தப்படாத பிரிவுகள் இருப்பதாகவும் அதனால், சீனாவுக்குச் செலுத்தப்பட்ட தொகை குறித்த தெளிவில்லாமை நிலவுவதாகவும் கூறிய அவர், வளரும் நாடுகளுக்கு அனுப்பப்படும் உதவித் தொகை சீனாவுக்கான கடனை அடைக்கச் செலவழிக்கப்படுவதைத் தவிர்க்கவே நாங்கள் முனைகிறோம்” என்று அவர் கூறினார். நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நாடுகள், கடன் வழங்கும் நாடுகளிடம் இருந்து அதிகப்படியான தாமதங்களை எதிர்கொள்வது போன்ற பிரச்னைகளை பட்டியலிடுகையில், ”இலங்கை விஷயத்தில், உணவுக்கே பணமில்லை என்ற நெருக்கடி வரும்வரை இந்தத் தாமதங்கள் தொடர்ந்ததாக அவர் குறிப்பிட்டார். மேலும், வறிய நாடுகள், செலுத்தவேண்டிய கடன் தொகைக்கும் வெளிநாடுகளிலிருந்து வரும் நிதியுதவித் தொகைக்கும் இடையில் உள்ள சமநிலையின்மை குறித்தும் அவர் கவலை தெரிவித்தார்.

கடந்த ஆண்டு சுமார் 35 பில்லியன் டொலர் கடன் நிலுவைத் தொகை இந் நாடுகளுக்கு இருந்தது குறிப்பிடத்தக்கது. இதெல்லாம் உங்களுக்கு என்ன விதத்தில் பொருள் படுகின்றன என்பதைப் புரிந்து கொள்ள முயலுங்கள், நண்பர்களே. இன்றோ நாளையோ இல்லாவிட்டாலும், இன்றிலிருந்து ஒரு தசாப்த காலத்துக்குள்ளாகவாவது, இந்தப் பிராந்தியத்தில் இலங்கை, இன்னொரு சிங்கப்பூராக உருவெடுக்க ஏன் முடியாது என்று விவாதியுங்கள். நாம் உண்மையிலேயே முயன்றால் அது முடியும்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# எசமானரின் குரல்?



வீரகத்தி
தனபாலசிங்கம்

பாராளுமன்ற தேர்தல் முறையை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வைத்த யோசனை பல்வேறு வகையான விமர்சனங்கள் கிளம்புவதற்கு வழிவகுத்தது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்துவிட்டு நிறைவேற்று அதிகார பிரதமரைக் கொண்ட பாராளுமன்ற ஆட்சிமுறை மீண்டும் கொண்டுவரப்பட வேண்டுமா இல்லையா என்பதைத் தீர்மானிக்க சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு வழிவகுக்கக்கூடிய ஒரு முயற்சியின் அங்கமாகவே பாராளுமன்ற தேர்தல் முறையில் மாற்றம் செய்வதற்கான யோசனை அடங்கிய அமைச்சரவைப் பத்திரத்தை நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச சமர்ப்பித்ததாகவும் இது தொடர்பில் ஆராய்வதற்கு அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்படும் என்று அவர் கூறியதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இது தேசிய தேர்தல்களை ஒத்திவைக்கும் அரசியல் உள்நோக்கத்துடன் முன்வைக்கப்படும் ஒரு யோசனை என்று கண்டனம் செய்த எதிரணி கட்சிகள் ஒரு போதும் அதற்கு ஒத்துழைக்கப் போவதில்லை என்று அறிவித்தன. ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாக இருந்தால் 2025 பாராளுமன்ற தேர்தலுக்கு பிறகு மக்களின் புதிய ஆணையுடன் பதவிக்கு வரக்கூடிய அரசாங்கமே அதற்கான முயற்சியை முன்னெடுக்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி மாத்திரமல்ல ஆளும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவும் கூட கூறியிருந்தன.

ஆனால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது என்பது சிக்கல்கள் நிறைந்த கடினமான ஒரு பணி என்பதால் அத்தகைய முயற்சி எதையும் முன்னெடுக்கும் உத்தேசம் அரசாங்கத்துக்கு இல்லை என்றும் தற்போதைய பாராளுமன்றத்தின் ஊடாக அதைச் செய்வதற்கு வழியே இல்லை என்றும் விஜேதாச ராஜபக்ச கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

ஊடகங்களில் வெளியான செய்திகளும் அவை தொடர்பில் பொதுவெளியில் கிளம்பிய விமர்சனங்களும் அரசாங்கத்துக்கு பெரும் சங்கடத்தை கொடுத்த காரணத்தினால்தான் அந்த அறிவிப்பை அவர் சபையில் அவசரமாக செய்ய வேண்டிவந்தது என்பதில் சந்தேகமில்லை.

பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கு புதிய தேர்தல் முறையை அறிமுகப் படுத்துவதற்கான யோசனையை முன்வைத்ததை நீதியமைச்சர் ஒத்துக்கொண்டார்.

தங்களது யோசனையின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர்கள் 160 பேர் தொகுதி அடிப்படையிலும் எஞ்சிய 65 பேரும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை மற்றும் தேசியப் பட்டியல் மூலமாகவும் தெரிவு செய்யப்படுவர் என்று கூறிய அவர் தொகுதி அடிப்படையில் தெரிவாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 150 ஆக குறைக்கவேண்டும் என்று சிலரும் 140 ஆக குறைக்க வேண்டும் என்று வேறு சிலரும் விரும்புகிறார்கள். மக்கள் மாற்றத்தை விரும்புவதால் மாற்றம் ஒன்று நிச்சயம் தேவை. அது குறித்து கலந்தாலோசனைகளை நடத்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்றும் தெரிவித்தார்.

அதேவேளை, அந்த தேர்தல் சீர்திருத்தம் குறித்து ஆராய்வதற்கு பிரதமர் தினேஷ் குணவர்தன புதன்கிழமை பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் நடத்திய சந்திப்பு எதிர்க்கட்சிகள் அந்த யோசனையை நிராகரித்த காரணத்தால் தீர்மானம் எதுவும் இன்றி முடிவடைந்தது. இரு வாரங்களில் மீண்டும் கட்சிகளின் தலைவர்களின் கூட்டமொன்றை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

உள்ளூராட்சி தேர்தல்களையும் மாகாணசபை தேர்தல்களையும் காலவரையறையின்றி ஒத்திவைத்திருக்கும் அரசாங்கம் ஜனாதிபதி தேர்தலையும் பாராளுமன்ற தேர்தலையும் ஒத்திவைக்கும் சூழ்ச்சித்தனமான நோக்கத்துடனேயே தற்போதைய தருணத்தில் தேர்தல் சீர்திருத்தம் குறித்து பேசுகிறது என்று எவருக்கும் வலுவான சந்தேகம் எழுவது தவிர்க்கமுடியாதது.

தேர்தல்களுக்கு முகங்கொடுப்பதை தவிர்ப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அரசாங்கமும் எத்தகைய ஜனநாயக விரோத செயன்முறைகளிலும் இறங்கத் தயங்க மாட்டார்கள் என்பது உள்ளூராட்சி தேர்தல்கள் விடயத்தில் அதுவும் உயர்நீதிமன்ற உத்தரவையும் கூட அலட்சியம் செய்து அவர்கள் நடந்துகொண்ட முறையின் மூலம் தெளிவாக தெரிந்தது.

வேறு எந்த தேர்தலையும் விரும்பாத ஜனாதிபதி விக்கிரமசிங்கவும் அவரது ஐக்கிய தேசிய கட்சியும் ஜனாதிபதி தேர்தலை பற்றி அடிக்கடி பேசிவந்திருக்கின்றனர்.

அடுத்த வருடம் நவம்பர் மாதத்துக்கு முன்னதாக நடத்தவேண்டியிருக்கும் ஜனாதிபதி தேர்தலை உரிய காலத்துக்கு முன்கூட்டியே அதாவது அடுத்த வருட முற்பகுதியில் நடத்துவதற்கு ஜனாதிபதி விரும்பியதாகவும் அதற்காக அரசியலமைப்பில் திருத்தம் ஒன்றை கொண்டு வருவது குறித்து அவர் யோசித்ததாகவும் கதைகள் அடிபட்டபோதிலும், அது இதுவரையில் சாத்தியமாகவில்லை. இனிமேலும் சாத்தியமாகும் அறிகுறிகள் இல்லை என்றே தோன்றுகிறது.

சுமார் மூன்று தசாப்தங்களாக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக இருந்து வரும் விக்கிரமசிங்க தனக்கு வசப்படாமல் இருந்து வந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை அடைவதற்கு கடந்த வருடத்தைய மக்கள் கிளர்ச்சியின் விளைவான அசாதாரண சூழ்நிலைகள் உதவின. பாராளுமன்ற வாக்கெடுப்பின் மூலம் தெரிவான முதல் இலங்கை ஜனாதிபதி என்ற " பெருமையை" பெற்ற அவர் தேர்தலில் வெற்றிபெற்று மக்கள் ஆணையுடன் ஜனாதிபதியாக அதிகாரத்துக்கு வரவேண்டும் என்று விரும்புகிறார் என்று தெரிகிறது.

தனது கட்சி படுமோசமாக பலவீனமடைந்திருக்கின்ற போதிலும் வங்குரோத்து நிலையடைந்த பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு தனது அரசாங்கம் முன்னெடுத்து வரும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் மீண்டும் செல்வாக்கை கட்டியெழுப்ப உதவும் என்று அவர் நம்புகிறார். தற்போதைக்கு மீளக்கட்டியழுப்ப முடியாத அளவுக்கு ஐக்கிய தேசிய கட்சியின் நிலை இருக்கிறது என்பது விக்கிரமசிங்கவுக்கு தெரியும். அதனால் தான் பரந்தளவிலான கூட்டணியொன்றை அமைக்கும் வியூகங்களில் அவர் ஈடுபட்டிருக்கிறார்

ஆனால், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதாக அவர் இதுவரையில் வெளிப்படையாக அறிவிக்கவில்லை. ஆனால், அவரின் பேச்சும் செயலும் அவரின் விருப்பத்தை தெளிவாக வெளிக் காட்டுகின்றன.

> நாட்டு மக்கள் என்ன நினைப்பார்கள் என்பதை பொருட்படுத்தாமல் அபத்தமான கருத்துக்களை கூறும் ஒருவர்தான் இன்று நாட்டின் பழம் பெரும் கட்சியின் தவிசாளராக இருக்கிறார். அவரை எசமானரின் குரல் என்பதை தவிர வேறு எவ்வாறு அழைக்கமுடியும்?

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவும் ஜே.வி.பி. - தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசாநாயக்கவுமே இதுவரையில் தங்களை ஜனாதிபதி வேட்பாளர்களாக பிரகடனம் செய்திருக்கிறார்கள். பொதுஜன பெரமுன ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளரை களமிறக்கப் போவதாக அடிக்கடி கூறுகின்ற போதிலும் பெயரை வெளியிடுவதில் தயக்கம் காட்டுகிறது.

ஒரு ராஜபக்சவை தவிர அந்த கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக வேறு எவரும் நியமிக்கப்படக் கூடியது பெரும்பாலும் சாத்தியமில்லை. அவ்வாறு தான் நியமிக்கப்பட்டாலும் கூட அந்த வேட்பாளர் அடுத்துவரும் காலத்தில் தாங்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்கான சூழ்நிலை உறுதிசெய்வதற்கு உதவக்கூடியவர் என்று ராஜபக்சாக்கள் உறுதியாக நம்புகின்ற ஒருவராகத்தான் இருக்கமுடியும்.

தாங்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வரவேண்டும் அல்லது கடந்தகாலத் தவறுகளுக்காக தங்களைப் பொறுப்புக்கூற வைக்காத ஒரு அரசாங்கம் பதவிக்கு வருவதை உறுதிசெய்வதே ராஜபக்சாக்களின் நோக்கமாக இருக்கிறது. இந்த நோக்கம் குறித்து நாட்டு மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதே முக்கியமானது.

ராஜபக்சாக்களுக்கு நெருக்கமான தொழிலதிபரும் பாராளுமன்ற உறுப்பினருமான தம்மிக்க பெரேரா சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் வைபவம் ஒன்றில் உரையாற்றியபோது அரசியல் கட்சிகள் தனக்கு 51 சதவீத வாக்குகளை உத்தரவாதம் செய்தால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு தயாராக இருப்பதாக அறிவித்தார். கட்சிகளின் பெயர்களை அவர் கூறவில்லை. ஆனால், அவரின் அறிவிப்பு குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவாசம், தம்மிக்க பெரேராவை தங்களது கட்சியின் பெறுமதி மிக்க உறுப்பினர் என்று மாத்திரம் கூறினார்.

அண்மையில் மௌபிம ஜனதா கட்சியின் அலுவலகத்தை கொழும்பில் திறந்துவைத்த அதன் தலைவரான பல ஊடக நிறுவனங்களின் உரிமையாளர் திலித் ஜயவீரவிடம் 2024 ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்கும் சாத்தியம் குறித்து கேட்டபோது முதலில் புதிய கட்சியை நாடுபூராவும் மக்கள் ஆதரவைக்கொண்ட அரசியல் இயக்கமாக வளர்ப்பதற்கு காலம் தேவை. அதற்கு பிறகு அரசியல் பதவிகளுக்கு போட்டியிடுவது குறித்து தீர்மானிக்கலாம் என்று பதிலளித்தார். இவர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு மிகவும் நெருக்கமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசியல் நிகழ்வுப் போக்குகள் இவ்வாறாக இருக்கையில், ஜனாதிபதி வேட்பாளர்கள் யார்யார் என்பதை விடவும் இன்னும் ஒரு வருடத்துக்கும் குறைவான காலத்திற்குள் நடத்தப்பட வேண்டியிருக்கும் அந்த தேர்தல் நடக்குமா என்பதைப் பற்றி சிந்திப்பதே முக்கியமானது என்று தோன்றுகிறது.

அரசாங்கத்தின் பேச்சாளர் போன்று நடந்துகொள்ளும் ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரான பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன கடந்த வாரம் செய்தியாளர்கள் சந்திப்பொன்றில் உரையாற்றியபோது நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு அடுத்த ஜனாதிபதி தேர்தலில் எவரும் போட்டியிடக் கூடாது என்று தெரிவித்தார்.

"ஜனாதிபதி தேர்தலில் எவரும் போட்டியிட முன்வராமல் இருந்தால் மிகவும் நன்றாக இருக்கும். அது நாட்டை நிலையுறுதிப்படுத்த உதவும். அவ்வாறு ஒரு சூழ்நிலை ஏற்படுமாக இருந்தால் தற்போதைய ஜனாதிபதி பதவியில் தொடர்ந்து இருக்கவும் நாட்டின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும். தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்காக நிதியைச் செலவிடுவது விவேகமானதா என்று யோசிக்க வேண்டியிருக்கிறது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தேர்தலில் விக்கிரமசிங்கவை எதிர்த்து எவரும் போட்டியிட முன்வராவிட்டால் அவர் போட்டியின்றி தெரிவாகக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்ற அர்த்தத்தில் தான் அபேவர்தன அவ்வாறு கூறியிருக்கிறார் போலும்.

வேறு எவரும் போட்டியிடக் கூடாது என்ற அவரின் கோரிக்கை தான் புதியதே தவிர மற்றும்படி ஜனாதிபதி தேர்தலுக்கு நிதி செலவிடவிடுவது சாத்தியமில்லை

(14ஆம் பக்கம் பார்க்க)



பனங்காட்டான்

# நீதிமறுப்பும் சட்டமீறலும் அரசமைப்பு ஒழுங்கீனமும்


# ஜனநாயக படிமுறைகளை இடித்தழிக்கும் அபாயம்!



நீதிபதி சரவணராஜா பிரச்சனைக்கான போராட்டத்தைத் தவிர தமிழர்களுக்கான தொடர் போராட்டங்களாக காணி அபகரிப்புகளுக்கு எதிரானதும் காணாமலாக்கப்பட்டோருக்குமானவை அமைந்துள்ளன. இவ்விரண்டுக்குமான போராட்டங்கள் நிரந்தரமானவையாகத் தொடரும் நிலைமையே பெரிதும் காணப்படுகிறது.

தீராத அல்லது தீர்க்கப்பட விரும்பாத பிரச்சினைகளாக ரணில் அரசு இவற்றைக் கையாண்டு வருகிறது. நாடாளுமன்ற அமர்வுகளில் தமிழ் எம்.பிக்களின் பெரும்பாலான உரைகள் இவ்விடயங்களை ஒட்டியதாகவே இடம்பெற்று வருகின்றன.

வடக்கு கிழக்குக்கு விஜயம் மேற்கொள்ளும் வெளிநாடுகளின் தூதுவர்களிடமும் ராஜதந்திரிகளிடமும் இவை தொடர்பாக முறைப்பாடுகள் செய்யப்படுகின்றன. ஆவணங்கள் கையளிக்கப்படுகின்றன. இவற்றினால் பயனேதும் கிடைக்குமோ என்பது தெரியவில்லை.



இது போதாதென்று, இந்திய பிரதமர் மோடியை சந்திக்க வேண்டுமென தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் கூடிக் கலைந்து, மீண்டும் கூடி ஆராய்ந்து வருகின்றன. மோடிக்கு ஏற்கனவே தமிழ்க் கட்சிகள் இணைந்து அனுப்பிய கடித விவகாரம் முன்னாள் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும் அவரது சட்டக் கல்லூரி மாணவன் எம்.ஏ.சுமந்திரனுக்குமிடையில் விவாத அரங்காக மாறியுள்ளது.

முன்னைய கடிதம் மோடிக்குக் கிடைத்ததா இல்லையா என்பது கேள்விக்குறியாகியுள்ள நிலையில், அதற்குப் பதில் வந்ததா இல்லையா என ஆராய்வதில் பயனில்லை. வடமாகாண முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரன் இப்போது சகல விவ காரங்களிலும் தம்மை முதன்மைப் படுத்தி நிற்க முனைவதை அவதானிக்க முடிகிறது. ஆனால், இவரால் எதையும் ஒப்பேற்ற முடியாதிருப்பதையும் காணலாம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தனிப்பட்ட தொடர்பை ஏற்படுத்தி (நல்லாட்சிக் காலத்தில் சுமந்திரன் செய்தது போன்று) அதனூடாக பல காரியங்களை நிறைவேற்ற முடியுமென இவர் எடுத்த எந்த முயற்சியும் இதுவரை காரியமாகவில்லை. வடமாகாண ஆளுநரை ரணில் விக்கிரமசிங்க விரைவில் பதவி நீக்குவாரென ஊடகங்களுக்கு பிரத்தியேக செய்தி ஒன்றை இவர் கொடுத்திருந்தார். ரணில் தம்மிடம் கூறினார் என்பதை நம்பி அந்த அறுந்த கயிற்றில் தொங்கும் நிலை இவருக்கு ஏற்பட்டது. மாகாண சபைக்கான ஆலோசனைச் சபை யோசனையையும் ரணில் ஏற்றுக் கொண்டதாக இவர் நம்பினார். ரணில் தம்மை ஏமாற்றி விட்டாரென்று பகிரங்கமாகக் கூறும் வழிப்போக்கனாக விக்னேஸ்வரன் இன்று காணப்படுகிறார்.

இதுபோன்று, இந்தியப் பிரதமர் மோடியை சந்திக்க எடுக்கும் முயற்சியும் தோல்வியடையலாம். இந்தியா செல்வதற்கு மோடியின் அழைப்புக்காக காத்திருக்கிறோம் என்று தமிழரசின் மூத்த தலைவர் சம்பந்தன் சொல்லி ஒரு வருடமாகிறது என்பதை விக்னேஸ்வரன் நினைவிற் கொள்ள வேண்டும். நீதிச் சேவையில் நிரம்பக் கற்றுக் கொண்டவராக விக்னேஸ்வரன் இருப்பினும், அரசியலில் இன்னும் போதிய அனுபவத்தை அவர் பெறவில்லையென்பது தெரிகிறது. அதனாற்தான் போலும் எல்லா விடயங்களிலும் மூக்கை நுழைத்து அவமானங்களைச் சுமக்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார்.

அரசியலில் பழம் தின்று விதை போட்ட ரணில் விக்கிரமசிங்க ஒவ்வொருவராக அனைவரின் தலைகளையும் கழுவி வருகிறார். இது போதாதென்று பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், நிகழ்நிலை காப்புச் சட்டம் என்பவைகளை உருவாக்கி அதனூடாக அரசியல் கட்சிகளையும் சமூக அமைப்புகளையும் ஒடித்திரிய வைத்துள்ளார்.

உருவாக்கப்பட்டுள்ள இரண்டு சட்ட வரைபுகளும் அரசதுறை அதிகாரிகளுக்கு அதிகாரங்களை வழங்குவதாகவும், மனித உரிமை சட்டத்துக்கு இணங்காமல் மனித உரிமைகள் மீது கட்டுப்பாடுகளை ஏற்படுத்தக்கூடியவை என்றும் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது. இரண்டு சட்ட மூலங்களும் தெளிவற்ற வரையறைகளைக் கொண்டுள்ளனவென்றும் பேரவை குறிப்பிட்டுள்ளது.

**ஜனநாயகம் என்பது ஐந்து அடுக்குகளைக் கொண்டது. சமூக ஜனநாயகம், கட்சி ஜனநாயகம், அரசியல் ஜனநாயகம், நிர்வாக ஜனநாயகம் என்பவை நேர்த்தியாக அமைந்தால் மட்டுமே நாட்டில் ஆட்சி ஜனநாயகம் என்ற இயந்திரம் சீராக இயங்க முடியும். இலங்கையில் எந்த அடுக்கிலாவது ஜனநாயகத்தைக் காணமுடிகிறதா?**

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், சட்டமுறையான ஆட்சிக்கு முற்றிலும் மாறுபட்டது என்று தெரிவித்துள்ள ஐ.நா.வின் நிபுணர் குழு, நடைமுறையிலுள்ள மிக மோசமான பயங்கரவாத தடைச்சட்டத்தின் குறைபாடுகளை புதியது நிவர்த்தி செய்யவில்லையென்றும் சுட்டியுள்ளது.

சர்வதேசம் இவ்வாறு கருத்துகளையும் கவலைகளையும் வெளியிட்டு வரும் வேளையில், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரணை செய்வதில்லை என்று உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. இந்தச் சட்டமூலம் நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலிலிருந்து வாபஸ் பெறப்பட்டதே இதற்கான காரணம். இவ்வாறு அறிவிக்கப்பட்டிருப்பதால் சர்வதேசத்தின் அதிருப்திக்கு இலங்கை அரசு சார்பு நிலை எடுத்ததாகவோ, புதிய வரைபில் உலகம் எதிர்பார்க்கும் மாற்றங் கள் இடம்பெறும் என்றோ எதிர்பார்க்க முடியாது.

பிரச்சனைக்குரியதான நிகழ்நிலை காப்புச் சட்ட வரைபு திருத்தப்படுமென சட்ட மாஅதிபர் திணைக்களம் உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளமையையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். இந்தச் சட்டமூலத்துக்கு எதிராக நாற்பத்தைந்து மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. பொது



அமைப்பு கள், ஊடக அமைப்புகள், தனியார், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் என்போரால் இந்த மனுக்கள் தாக்கலாகி யிருந்தன.

மோதகத்தை கொழுக்கட்டையாகவும், கொழுக்கட்டையை மோதகமாக மாற்றுவதும் போன்று இரண்டு சட்ட வரைபுகளையும் ரணிலின் அரசு திருத்தம்(?) செய்து புது வடிவத்தில் மீளச் சமர்ப்பிக்கவுள்ளது. இதுகூட சர்வதேசத்தையும் மனித உரிமை அமைப்புகளையும் எத்தி விளையாடும் ஓர் உத்திதான். இதற்கான அடிப்படைக் காரணம் ஜனநாயகம் என்பது நாட்டில் இறந்துபோன ஒன்றாகிவிட்டது.

இதற்கான நிகழ்கால உதாரணமாக பொலிஸ் மாஅதிபரின் பணி நீடிப்பைப் பார்க்கலாம். வழமையாக ஒரு பொலிஸ் மாஅதிபர் ஓய்வு பெறுவதற்கு முன்னராகவே அடுத்தவர் யாரென்பது தெரிய வந்துவிடும். பணிக்கால வரிசையில் மூத்த பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ஒருவரே பதவி உயர்வு பெற்று பொலிஸ் மாஅதிபராவார். இதுவே முப்படைகளின் தளபதிகள் நியமனத்திலும் கடைப்பிடிக்கப்படும் நடைமுறை.

ஆனால், தற்போதைய பொலிஸ் மாஅதிபர் சி.டி.விக்கிரமரத்தினவின் சேவை நீடிப்பு முற்றுமுழுதாக அரசியல் கலப்பானதாகவும் ஜனநாயக விழுமியங்க ளுக்கு முரணானதாகவும் அமைந்துள்ளது. பதவியிலிருந்து ஓய்வு பெற்ற இவருக்கு ஏற்கனவே இரு தடவைகள் பணி நீடிப்பு வழங்கப்பட்டது. புதிதாக பொலிஸ் மாஅதிபர் ஒருவரை தெரிவு செய்யும் பொறுப்பானது அரசியலமைப்புச் சபை சம்பந்தப்பட்டது. இச்சபையின் தலைவர் நாடாளுமன்ற சபாநாயகர். மொத்தம் பத்து அங்கத்தவர்களில் பிரதமரும், எதிர்க் கட்சித் தலைவரும் அடங்குவர்.

இச்சபை அதிகாரபூர்வமாகக் கூடி சி.டி.விக்கிரமரத்தினவுக்கு பணி நீடிப்பு வழங்குவதில்லையென்று தீர்மானித்தது. அடுத்த ஓரிரு மணித்தியாலங்களுக்குள் அவருக்கு அடுத்த மூன்று வாரங்களுக்கு சேவை நீடிப்பை வழங்கிவிட்டு ரணில் விக்கிரமசிங்க வெளிநாடு சென்று விட்டார். அதாவது அரசியலமைப்புச் சபையின் முடிவை புறந்தள்ளிவிட்டு இந்தப் பணி நீடிப்பு வழங்கப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டபோது அதற்கு சபாநாயகர் பதிலளித்தார். அரசியலமைப்புச் சபை இப்பதவிக்கு ஒருவரை பரிந்துரை செய்யலாம். ஆனால், தாம் விரும்பும் ஒருவரை நியமனம் செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்குண்டு என்பது சபாநாயகரின் பதில். ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்ற முடியாததைத் தவிர மற்றெல்லா அதிகாரங்களும் ஜனாதிபதிக்குண்டென்று ஜே.ஆர்.ஜெயவர்த்தன பதவியேற்ற வேளையில் தெரிவித்த கூற்றை அடியொற்றி ரணில் செயற்படுவது தெரிகிறது.

ரணில் நாடு திரும்பியதும் புதிய பொலிஸ் மாஅதிபராக அவரது விருப்புக்குரிய பிரதிப் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோன் நியமனம் பெறுவாரென்ற தகவல் கசிய விடப்பட்டுள்ளது. இதுதான் உண்மையென்றால் புதிய நியமனங்கள், பதவி உயர்வுகள் ஆகியவைகளைத் தீர்மானிப்பதற்கு அரசியலமைப்புச் சபையொன்று தேவையா என்ற கேள்வி எழுகிறது.

உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டு வேட்புமனுக்களும் தாக்கல் செய்யப்பட்டு, தேர்தல் நடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்ட பின்னரும் அது நடத்தப்படவில்லை. அடுத்தாண்டு நடைபெற வேண்டிய ஜனாதிபதித் தேர்தலையும் பிற்போட அரசாங்கம் எடுக்கும் செயற்பாடுகள் அம்பலமாகியுள்ளன. (இன்னொரு வாரப் பத்தியில் இதனை அலசலாம்). தேர்தல்கள் உட்பட ஜனநாயக வழிமுறைச் செயற்பாடுகளில் ஜனாதிபதி தலையிடக் கூடாதென்று இலங்கை சட்டத்தரணிகள் ஒன்றியம் ஒன்றிணைந்த அமைப்பு பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளது. அத்துடன், தேர்தலை பின்போடும் நோக்கில் மறுசீரமைப்புக் குழுவை நியமித்துள்ளமையையும் இந்த அமைப்பு கண்டித்துள்ளது.

இந்த நிலையில் நாடாளுமன்றம் எதற்காக என்று நாடாளுமன்ற அமர்விலேயே கேள்வி எழுப்பியுள்ளார் ஒரு எம்.பி. இந்தக் கேள்வி நியாயமானது என்பதை சட்டத்தரணிகள் ஒன்றியத்தின் அறிவிப்பு நிரூபிக்கிறது.

ஜனநாயகம் என்பது ஐந்து அடுக்குகளைக் கொண்டது. சமூக ஜனநாயகம், கட்சி ஜனநாயகம், அரசியல் ஜனநாயகம், நிர்வாக ஜனநாயகம் என்பவை நேர்த்தியாக அமைந்தால் மட்டுமே நாட்டில் ஆட்சி ஜனநாயகம் என்ற இயந்திரம் சீராக இயங்க முடியும். இலங்கையில் எந்த அடுக்கிலாவது ஜனநாயகத்தைக் காணமுடிகிறதா? ●

# இஸ்ரேல் - பலஸ்தீன அனுபவம்!

**அனந்த பாகிட்ணர்**

இலங்கையிலுள்ள இஸ்ரேலிய கவுன்ஸில் ஜெனரல் விக்கி விக்கிரமதுங்க எனது நல்ல நண்பர். கொழும்பு சண்டே ஒப்ஸோவர் பத்திரிகையில் பணியாற்ற ஆரம்பித்த 1989ம் ஆண்டு முதல் மிக நெருங்கிய நண்பர்களானோம். அவர் ஒரு விவசாயத்துறை பட்டதாரி. அத்துடன் இலங்கையின் சகல அரசியல் தரப்பினருடனும் மிக நெருக்கமான தொடர்பை பேணிய ராஜதந்திரி;. இஸ்ரேல் இலங்கையோடு இராஜதந்திர உறவுகளை மேம்படுத்திய காலம் முதல் அவர் இஸ்ரேலின் கவுன்ஸில் ஜெனரலாக கொழும்பில் பணியாற்றி வருகின்றார். ஏனைய நாடுகளுக்கு இஸ்ரேல் தனது நாட்டினரையே தூதுவராக நியமிப்பது வழக்கம். ஆனால் இந்தியாவில் இஸ்ரேலிய தூதுவர் இருந்தமையால் அவருக்கு துணையாக கொழும்பில் விக்கி விகிரமதுங்கவை இஸ்ரேலிய கவுன்ஸில் ஜெனரலாக ரெல் அவிவ் நியமித்திருந்தது.

சண்டே ஒப்ஸோவர் பத்திரிகை பேட்டிகள் பலவற்றை இலங்கை வருகின்ற இஸ்ரேலிய ராஜதந்திரிகள் பலருடனும் எடுத்துக்கொள்வதற்கு விக்கி விக்கிரமதுங்க உதவுவார். பேட்டிகளும் நல்ல முறையிலே வெளிவரும்.

2011-ம் ஆண்டு இஸ்ரேல் செல்வதற்கான வாய்ப்பை விக்கி விக்கிரமதுங்கவின் சிபார்சு மூலமாக இஸ்ரேலிய வெளியுறவு துறை எனக்கு வழங்கியிருந்தது.

2011-ம் ஆண்டு டிசம்பர் மாத முற்பகுதியில் இஸ்ரேல் பயணமானேன். அப்பயணம் டிசம்பர் மாதத்தில் கிடைத்தது மிக மகிழ்ச்சியைத்தந்தது. ஏனெனில் ஜெருசலத்தில் உள்ள பெத்லஹெம் சென்று இயேசு நாதர் அவதரித்த தற்போது தேவாலயமாக இருக்கின்ற இடத்தை தரிசிக்கலாம். பின்னர் கொழும்பு வந்து டிசம்பர் நத்தார் பண்டிகைக் காலத்தில் அதுபற்றி எழுதலாம் என்ற எண்ணம் கூட இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தந்தது.

இஸ்ரேலுக்கு நான் சென்ற விமானம் முதலில் ஜோர்தான் சென்றடைந்தது. அதன் பின்னரே மற்றொரு விமானம் மூலமாக ரெல் அவிவ் சென்றடைந்தேன். விமான நிலையத்தில் என்னை வரவேற்க மொஸே என்ற பெயருடைய இஸ்ரேலிய சாரதி ஒருவர் நியமிக்கப்பட்டார். ரெல் அவிவ் விமான நிலையத்தில் வந்திறங்கியதும் இஸ்ரேல் தனது பாதுகாப்பு குறித்து கொண்டுள்ள மிகுந்த அக்கறையை என்னால் காண முடிந்தது. இடுப்பிலே கைத்துப்பாக்கியுடனும் வெளியிடங்களில் Uzi sub machine gun என்றழைக்கப்படுகின்ற சிறிய ரக துப்பாக்கியுடனும் இஸ்ரேலிய பாதுகாப்பதிகாரிகள் காணப்பட்டனர். விமான நிலையத்தில் மட்டுமல்ல. இஸ்ரேலின் சகல கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர் மட்டுமல்ல. அவர்களுக்கு உதவியாக துணைப்படையினரும் காணப்பட்டனர். அடிக்கடி இஸ்ரேலுக்குள் பாலஸ்தீன தீவிரவாதிகள் ஊடுருவி தாக்குதல் நடத்துவதனால் தற்பாதுகாப்பிற்காகவே எவ்வேளையிலும் துப்பாக்கி ஏந்திய பாதுகாப்பதிகாரிகள் நிற்பதை காண முடிந்தது.

ரெல் அவிவ்வில் எனது சந்திப்புகள் முடிவடைந்ததும் ஜெருசலம் ஊடாக பெத்லஹெம் செல்ல தீர்மானித்தேன். எனது சாரதி மொஸே அதற்கான ஏற்பாட்டை பாலஸ்தீன பகுதிக்குள் உள்ள அவரது நண்பர் மூலமாகச்செய்தார்.

நத்தார் தினம் அப்போது நெருங்கி வந்து கொண்டிருந்த காரணத்தினால் ஜெருசலம் மற்றும் பெத்லஹெம் ஆகியவை நல்ல முறையில் அவற்றின் பக்திமயமான தன்மை மாறாது அலங்கரிக்கப்பட்டிருந்தன.

ஜெருசலத்தினூடாக இஸ்ரேலுக்குள் பாலஸ்தீனர்கள் வருகை தந்து இஸ்ரேலில்



உள்ள தொழிலகங்களில் பணியாற்றுவதையும் வழக்கமாக கொண்டிருந்தனர். அதேசமயம் இஸ்ரேலிய பெரும்பான்மை சாதாரண யூத இனமக்களுக்கும் பாலஸ் தீன மக்களுக்குமிடையே காரசாமான முறையில் பகைமை காணப்படவில்லை. இலங்கையில் பெரும்பான்மை சிங்கள வர்களும் தமிழர்களும் அரசியல் வேறு பாடுகளுக்கப்பால் புரிந்துணர்வோடு வாழ்வது போலவே இஸ்ரேல்-பாலஸ்தீன மக்களும் இருக்கின்றனர். ஆயினும் தத்தமது தனித்துவங்களை பேணுவதில் உறுதியாக இருக்கின்றனர். இதுவிடயத் தில் ஹமாஸ் தீவிரவாதிகள் மூர்க்கமா கவே இருக்கின்றனர். அதன் விளைவா கவே இஸ்ரேலியர்களுக்கும், பாலஸ்தீ னர்களுக்குமிடையே அடிக்கடி மோதல் கள் வெடித்த வண்ணமுள்ளன.

ஜெருசலத்தையும் பாலஸ்தீன பகுதியையும் பிரித்து வைத்துள்ள எல்லைப்புற பாதுகாப்பு சோதனைச்சாவடி பலமான பாதுகாப்பை கொண்டு விளங்குகின்றது. இதனூடாகவே பாலஸ்தீன பகுதிக்குள் நுழைந்தேன். ஏற்கனவே என்னை கூட்டிச்சென்று பெத்தலஹெம் தேவாலயத்தை காண்பிக்க மொஸே ஏற்பாடு செய்திருந்த பாலஸ்தீன வழிகாட்டி ஆயத்தமாக நின்று என்னை வரவேற்றார். அவரது பெயர் அக்தார். மிக நல்ல மனிதர். பொதுவாகவே உல்லாச பயண வழிகாட்டிகள் நட்புறவோடு பழகுவார்கள். ஆனால் அகதார் என்னோடு ஒரு சகோதரத்துவ மனப்பாங்கோடு பழகினார். என்னை கூட்டிச்சென்று பெத்லஹெம் தேவாலயத்துக்குள் விட்டுவிட்டு எனக்கு வேண்டிய தகவல்களைத்தந்த பின்னர் அவர் என்னிடமிருந்து விடை பெற்று சென்று விட்டார். அன்று நத்தார் காலம் நெருங்கி வந்ததால் ஏராளமான சுற்றுலா பயணிகள் பெத்லஹெம் வருகை தந்த வண்ணமிருந்தனர். எனவே அவர்களுடன் அவருக்கு பணியாற்ற வேண்டியிருந்தது. எனக்கு வேண்டிய அனைத்து வழிகாட்டல்களையும் தந்து விட்டே அக்தார் என்னிமிருந்து விடைபெற்றார்.

பெத்தலஹெம் தேவாலயத்தினுள் நுழைந்தபோது ஒரு புனிதரின் அதாவது தெய்வ மகன் இயேசு அவதரித்த இடம் என்ற உணர்வு என்னை மிக ஆழமாகவே ஆட்கொண்டது.

அவர் பிறந்த மாட்டுத்தொழுவம் தற்சமயம் அதனுடைய தன்மையை உணரும் விதத்தில் ஒரு தேவாலயமாக அமைந்திருந்தது. உலகில் கிறிஸ்தவ-கத்தோலிக்க தேவாலயங்கள் மிக பிரமாண்டமான முறையில் அமைவுற்றுள்ளன. ஆனால் இயேசு பிரான் அவதரித்த இடத்தில் அமைந்துள்ள Nativity Church அதன் மகிமை குன்றாது ஏதோ ஒரு வகையில் தெய்வ மகனின் எளிமையான பிறப்பை



பிரதிபலிப்பதாகவே இருந்தது.

இயேசு பிரான் கூட ஒரு பாலஸ்தீனர் என்பது குறிப்பிடத்தக்கது. சிறிது நேரம் அத்திருமகன் அவதரித்த இடத்தில் ஓரமாக அமர்ந்து பிரார்த்தனை செய்தேன். அப்போது தெய்வீக அதிர்வலை என்னை இதமாக தழுவிச்செல்வதையும் நான் உணர்ந்தேன்.

இதன்பின்னர் வெளியே வந்து பெத்லஹெம் தேவாலயத்தை அண்டியிருந்த வழிபாட்டுச்சின்னங்களை விற்பனை செய்யும் கடைத்தெருப்பக்கமாக காலாற நடந்து திரிந்தேன். சில சின்னங்களை நண்பர்கள் உறவினர்களுக்காக வாங்கினேன்.

அச்சமயம் என்னிடம் பாலஸ்தீன வழிகாட்டியான அக்தார் மீண்டும் வந்து விட்டார். பரிவோடு என்னை அழைத்துச் சென்று வேறு பல இடங்களையும் காண்பித்தார். சிறுவயதில் வெளியிடங்களில் கிறிஸ்தவ பாடசாலைகளில் படித்திருந்தேன். அப்போது விவிலிய வேதத்தை பின்னணியாக கொண்ட திரைப்படங்களுக்கு பாடசாலைகள் மூலமாகச்செல்வேன். அப்போது திரைப்படங்களில் பார்த்த கட்டிடங்கள் மற்றும் மலைகள் என்பவற்றை அன்று பாலஸ்தீன மண்ணில் கண்டேன். இஸ்லாமியர்களே பெரும்பான்மையானவர்களாக வாழும் பாலஸ்தீனத்தில் பெத்லஹெம் பக்திமயமாக பாதுகாக்கப்படுகின்றது.

இதன்பின்னர் மீண்டும் ரெல் அவிவ் செல்வதற்காக ஜெருசலத்தின் பாலஸ்தீனம் பக்கமாகவுள்ள சோதனைச்சாவடி நோக்கி நடந்தேன்.

அச்சமயம் சிறிதாக மழைதூற ஆரம்பித்தது. அப்போது அக்தார் "பாலைவன மண்ணில் மழை பெய்வது ஓர் ஆசீர்வாதமே. இன்று நீங்கள் இங்கே நிற்கும் போது மழைவருவது உங்களுக்கும் ஓர் ஆசீர் வாதமே" என்று கூறினார். பின்னர் ஏற்ற இறக்கமாக இருந்த பெத்லஹெம் பாதையில் மழை நீரும் ஓடிக்கொண்டிருந்ததால் அடிமேல் அடி எடுத்து வைத்து மெதுவாக நடந்தேன். அப்படியிருந்த போதிலும் ஓரிடத்தில் கால் இடறி நிலத்தில் வீழ்ந்தேன். அச்சமயத்தில் பாலஸ்தீனரான அக்தார் லாவகமாக அதேசமயம் சகோதர உணர்வொடு தனது இரு கைகளாலும் என்னை தூக்கி விட்டார். அது மட்டுமல்ல. எனது சட்டையில் படிந்த நீரையும் கூடவே விழுந்த போது எனது மேலாடையில் பட்ட சில தூசுப் படிவங்களையும் அவர் துடைத்து விட்டார்.

அச்சமயம் அவரிடம் "பல்வேறு நாடுகளுக்கு நான் சென்றுள்ளேன். பலதரப்பட்டவர்களையும் சந்தித்துள்ளேன். தற்போது பாலஸ்தீனர் ஒருவரோடு உறவாடியதை ஒரு நல்ல அனுபவமாக நினைக்கிறேன்" என்று கூறிய போது அதனை ஆமோதிப்பவராக அக்தார் அன்போடு தலையசைத்தார்.

இருவரும் விடைபெறும் நேரம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் புலவர் கனியன் பூங்குன்றனார் 'யாதுமுரே யாவரும் கேளிர்' அதாவது சகல ஊர்களும் நம் ஊர்களே. அத்துடன் சகல மக்களும் நம் உறவினரே' என்று கூறிய மகாவாக்கியமே என் மனதில் நிழலாடியது. என்னை கட்டியணைத்து கன்னமிரண்டிலும் பாலஸ்தீன பாணியல் முத்தமிட்டு அக்தார் விடைபெற்றார். நானும் அவருக்கு வாழ்த்து கூறி மீளவும் ஜெருசலம் சோதனைச்சாவடிக்கு வந்தேன். அப்போது அங்கே பல பாலஸ்தீன வயோதிப பெண்கள் இஸ்ரேலுக்குள் செல்வதற்கு காத்திருந்தனர். ஏறத்தாள யுத்த காலத்தில் தாண்டிக்குளம் வாயிலாக போய் வருவது போன்ற நிலமை. இஸ்ரே லிய படையினர் சிரித்து சிரித்தவாறே சாதுரியமாக அந்த வயோதிப பெண்களை அவர்களது நேரம் வரும் வரை காத்திருக்க வைத்தனர். அப்போது சில பாலஸ்தீன பெண்கள் பொறுமையிழந்தவர்களாக சத்தமிட்டனர். இளம் இஸ்ரேலிய ஆண், பெண் இராணுவ சிப்பாய்கள் அவர்களை வேடிக்கை பார்த்தனர்.

பின்னர் எனது இஸ்ரேலிய சாரதி எனக்காக ஏற்கனவே வெளியே காத்து நின்றார். வெளியே வந்ததும் கையடக்க தொலைபேசி மூலமாக அவர் பாலஸ்தீனரான தனது நண்பர் அக்தாருக்கு நன்றி கூறினார். இதன்பின்னர் அவரது காரில் ஏறி ரெல் அவிவ்வில் உள்ள எனது ஹோட்டலை வந்தடைந்தேன்.

அன்று மாலை எனக்கு பழக்கமான ஒரு சிங்கள இலங்கை பெண்மணியான ரமணி என்னை பார்க்க ஹோட்டலுக்கு வந்திருந்தார். அவர் அங்கு பணிப்பெண்ணாக ஒரு வீட்டில் பணிபுரிபவர். எனது இஸ்ரேல் நடவடிக்கைகளைப்பற்றி கேட்டறிந்தார். அப்போது மொஸே மற்றும் பாலஸ்தீனரான அக்தார் ஆகியோர் பற்றியும் கூறினேன். அப்போது அவர் சிரித்தவாறே " அனந்த் இஸ்ரேல் ஒரு பாதுகாப்பு கூடிய நாடு . அனைவரையும் சந்தேகக்கண்ணோடு பார்ப்பார்கள். யார் கண்டது நீர் சந்தித்த மொஸே மற்றும் அக்தார் ஆகியோர் கூட இஸ்ரேலிய புலனாய்வு நிறுவனமான மொசாட்டை சேர்ந்தவர்களாக இருக்கலாம்" என்று கூறினார்.

"எனக்கும் அப்படி ஒர் உணர்வு உள்ளூர இருந்தது. ஆனால் நான் பத்திரிகையாளன். அனைவரையும் புத்திசாலித்தனமாக கையாள வேண்டியதே எனது கடமை" என்றேன்.

அதைக்கேட்டு அவரும் என்னை ஆரத்தழுவி முத்தமிட்டு மகிழ்ச்சியோடு விடைபெற்றுச்சென்றார். ●

# மாறவேண்டியவர்கள் மக்களா? அரசியல் தலைவர்களா?

கந்தையா அருந்தவபாலன்



மாற்றமடைந்துவரும் புறச்சூழ்நிலைக்கேற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்ளாத எந்த உயிரினமும் நீண்ட காலத்துக்கு நிலைத்து வாழ முடியாது என்பது விதி. இவ்விதி உயிரிகளுக்கு மட்டுமன்றி ஒருநிறுவனம் என்ற வகையில் அரசியல் கட்சிகளுக்கும் பொருந்தும். இதனை உணர்ந்து அறிவார்ந்த தீர்மானங்களை எடுத்து வழிநடத்தும் கட்சித் தலைவர்களாலேயே மக்களின் நம்பிக்கையை கட்டிவளர்க்க முடியும் என்பதுடன் அதனை முன்னோக்கி நகர்த்தவும் முடியும். இதனை இன்றுள்ள தமிழ் அரசியல்கட்சித் தலைவர்கள் உணர்ந்து தமது அரசியல் முன்னெடுப்புகளை மேற்கொள்வதில்லை என்ற கருத்தும் அதிருப்தியும் தமிழ் மக்களிடையே அதிகரித்து வருவதை காணமுடிகிறது. மக்களின் இந்த நிலைப்பாட்டை அண்மையில் தமிழ்த் தேசியக் கட்சிகளால் முன்னெடுக்கப்பட்ட மனிதச் சங்கிலிப் போராட்டமும் கடையடைப்புப் போராட்டமும் மேலும் வலுப்படுத்தியுள்ளதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இப்போராட்டங்களில் அக்கட்சிகள் எதிர்பார்த்ததுக்கு மாறாக மக்களின் பங்குபற்றல் மிகவும் கீழ்மட்டத்தில் இருந்ததுடன் எதிர்மறையான கருத்துக்கள் உயர்ந்த மட்டத்தில் நிலவின. குறிப்பாக சென்ற வெள்ளிக்கிழமைக்கு அழைப்பு விடுக்கப்பட்ட கடையடைப்புத் தொடர்பாக தீவிர தமிழ் உணர்வாளர்களிடத்தே கூட அதிகளவு வரவேற்புக் கிடைக்கவில்லை என்பது கசப்பான உண்மை. இக்கடையடைப்பில் பங்கெடுத்தவர்களில் பெரும்பாலானோர் மனப்பூர்வமான ஆதரவுக்குப் பதிலாகத் தமிழ்த்தேசிய நோக்கில் முன்னெடுக்கப்படுகின்ற போராட்டத்துக்குத் தடையாகத் தாம் இருக்கக் கூடாது என்ற ஒரே நோக்கத்துக்காகவே பங்கெடுத்தனர் என்பதுதான் யதார்த்தம். இவ்வாறு ஒரு எதிர்மறையான நிலைமை விருத்தியடைந்து வருவது எதிர்காலத்தில் தமிழ்த்தேசிய அரசியலில் பின்னடைவுக்கே வழிவகுக்கும்.

அரசியல் உரிமைகளுக்காக போராடும் ஓரினத்தில் மக்களை எப்போதும் விழிப்புடனும் கொதிநிலையிலும் வைத்திருக்க வேண்டும் என்பதிலும் அதனை அரசியல் கட்சிகளும் சமூக நிறுவனங்களும் முன்னெடுக்க வேண்டும் என்பதிலும் மாற்றுக் கருத்துகள் இருக்க முடியாது. அதேபோல அவ்வாறான போராட்டங்கள் மூலம் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களும் தவிர்க்கப்பட முடியாதவை. ஆனால் அதற்காக முன்னெடுக்கப்படும் பொதுமக்கள் போராட்டங்கள் வினைத்திறனுடனும் பயனுறுதி வாய்ந்ததாகவும் அமையவேண்டும். வெறுமனே கட்சிகளின் இருப்புக்காகவும் அதன் தலைவர்களின் சுய விளம்பரத்துக்காகவும் ஆனதாக மக்களால் கருதப்படுமானால் எதிர்மாறான விளைவுகளையே தோற்றுவிக்கும். மக்கள் போராட்டமொன்றைத் திட்டமிடும்போது முக்கியமான சில விடயங்களில் கவனம் செலுத்துவது அவசியம். ஒன்று அப்போராட்டத்தில் மக்களின் தன்னூக்கமான பங்கு பற்றல். இரண்டாவது அப்போராட்டத்தின் மூலம் கிடைக்கும் விளைவு. அதாவது குறித்த போராட்டம் அதன் இலக்குத் தொடர்பாகத் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் ஏற்படுத்தக்கூடிய சாதகமான தாக்கத்தின் அளவு. இதைத் திட்டமிடுவதிலும் தவிர்க்க முடியாத வகையில் செலவு - நன்மை ஆய்வு முக்கியம் பெறுகிறது. அதாவது அரசியல் கட்சிகளின் நிதி மற்றும் உழைப்பு என்பவற்றுடன் குறித்த போராட்டத்தினால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய வருமான இழப்புகளும் சமூக நலன் பாதிப்புகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். மக்களின் இழப்புகளை இயன்றவரை குறைத்து சாதகமான விளைவுகளைப் பன்மடங்கு உயர்த்தும் போராட்ட வடிவங்களே வெற்றி தரும். இதில் காலமும், தேசிய, சர்வதேசிய நிலைமைகளும் கூடக்கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது அவசியம். இவை எல்லாவற்றுக்கும் மேலாகப் போராட்டத்தை முன்னெடுக்கும் அரசியல் கட்சிகள் மீதும் அதன் தலைவர்களின் மீதும் பொதுமக்களின் நன்மதிப்பும் நம்பிக்கையும் இருக்க வேண்டியது அடிப்படையாகும். கட்சிகள் மீதும் அதன் தலைவர்கள் மீதும் நம்பிக்கையீனம் நிலவுமானால் அவற்றினால் முன்னெடுக்கப்படும் எந்தப் போராட்டமும் எதிர்பார்க்கும் வெற்றியைத் தரப்போவதில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சித் தலைவர்கள் மீதான நம்பிக்கையும் நன்மதிப்பும் நாளுக்கு நாள் கீழிறங்கிக் கொண்டு செல்வதை பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அவதானிக்க முடிகிறது. இத்தலைவர்கள் தங்கள் அரசியல் இருப்புக்காகவும் பதவிகளுக்காகவும் மட்டுமே செயற்படுகிறார்கள் என்ற எண்ணம் மக்களிடையே படிப்படியாக வலுப்பெற்று வருகிறது. இவ்வாறானதொரு எண்ணம் மக்கள் மத்தியில் வலுப்பெறுவதற்கு அத்தலைவர்களின் கடந்தகால, நிகழ்கால செயற்பாடுகளே காரணமாகின்றன. ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்ததன் பின்னர் தமிழ்மக்களுக்கான உரிமைப் போராட்டங்களை ஜனநாயக வழியில் ஒற்றுமையுடன் முன்னெடுத்துச்செல்ல வேண்டிய பொறுப்பைக் கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற மக்களுக்கான அரசியல் இயக்கத்தை தங்கள் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக சிதைக்கத் தொடங்கியதிலிருந்தே இத்தலைவர்கள் மீதான மக்களது நம்பிக்கையும் நன்மதிப்பும் கரையத் தொடங்கி விட்டது. பின்னர் காலத்துக்குக் காலம் தேர்தல் வரும்போது இத்தலைவர்களின் பேச்சுகளும் செயற்பாடுகளும் அந்த நம்பிக்கையை மென்மேலும் அழித்ததே அன்றி வளர்ப்பதற்கு எள்ளளவும் உதவவில்லை. தலைவர்களின் நல்ல காலம் உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதால் பரப்புரைகள் இடம்பெறவில்லை. அது இடம்பெற்றிருந்தால் அத்தலைவர்கள் ஒவ்வொருவரையும் மற்றவர் சந்தி சிரிக்கும்படி செய்திருப்பார்கள். தலைவர்கள் முதலில் தாம் ஒன்று படுவதற்கான வழிவகைகளைத் தேடுவதை விடுத்து மற்றையவரை இழிவு படுத்துவதன் மூலம் தமது இருப்பைத் தக்கவைக்கவே ஒவ்வொருவரும் முயல்கிறார்கள். இது கட்சிகளுக்களுக்கிடையே மட்டுமல்ல ஒரே கட்சிக்குள்ளேயும் இடம்பெற்றே வருகிறது. இவ்வாறு தலைவர்கள் கட்சிகளுக்காகவும் பதவிகளுக்காகவும் அடிபிடிப்பட்டுக் கொண்டு “மக்களே ஒன்றுபடுங்கள்” என்று கூறுவதை மக்கள் ஏளனமாகத்தான் பார்ப்பார்கள். இதற்கு மேலாக தலைவர்கள் தமது தேவைகளை நிறைவேற்ற ஒருநேரத்தில் சிங்களத் தலைவர்களையும் அரசையும் புகழ்ந்து துதிபாடிவிட்டு இன்னொரு நேரத்தில் அவர்களுக்கு எதிரான கருத்துகளை மக்கள் முன்வைக்கும் தலைவர்களை நம்புவதற்கு மக்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்லவே. இதற்கு மேலாக முன்னர் இந்திய, சிறிலங்கா அரசுகளுடன் இணைந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் பொது மக்களின் நலன்களுக்கெதிராவும் இயங்கிய போராளிக்குழுக்களின் தலைவர்கள் தொடர்பாகத் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் இன்றும் நம்பிக்கையற்றே உள்ளனர் என்பதும் மறுக்க முடியாத உண்மை. இத்தகைய உள்முரண்பாடுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் தலைவர்கள் போலியாக ஒரு மேசையில் அமர்ந்து முடிவெடுப்பதாலோ ஊடகச் சந்திப்புகளை நடத்துவதாலோ மட்டும் மக்கள் போராட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியாது.

> **அரசியல் கட்சிகளின்மீதும் அதன் தலைவர்கள் மீதும் மக்கள் நம்பிக்கை இழந்துவரும் இன்றைய நிலையில் அம்மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு ஒரே தெரிவு கட்சி சாராத குடிசார் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது மட்டுமே.**

போராட்ட வடிவங்கள் காலத்துக்கு ஏற்றவகையிலும், மக்களிடத்தும் வெளியிலும் எதிர்பார்க்கும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் தெரிவு செய்யப்படுதல் அவசியம். அதற்கு மேலாக அப்போராட்டங்களில் மக்கள் தன்னியல்பாகவே கலந்து கொள்ளவும், அது தொடர்பான நேர்மறைக் கருத்துகளைத் தாமாகவே பரப்புரை செய்வதற்கும் வழிவகுக்க வேண்டும். அண்மைக் காலத்தில் பெருமளவு வெற்றியைத் தந்த பி2பி மக்கள் போராட்டத்தைப் போல அல்லது அதனைவிட மேலான பயனை தரக்கூடிய வகையில் போராட்டங்கள் ஒழுங்கமைக்கப்படுதல் அவசியம். போராட்டங்கள் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கட்சிகளிடத்து நடைமுறைக்கு ஒவ்வாத இரு வேறு அணுகு முறைகள் காணப்படுவது போல் தெரிகிறது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணித் தலைவர்கள் விடுதலைப்புலிகளின் கால மனநிலையில் இருந்து போராட்டங்கள் பற்றிச் சிந்திக்கும் அதேவேளை ஏனைய கட்சித் தலைவர்கள் தந்தை செல்வா கால மனநிலையில் இருந்து சிந்திப்பது போலத் தென்படுகிறது. எதுவாயினும் மக்கள் எழுச்சியை ஏற்படுத்தாத எந்தப் போராட்டமும் வெற்றியைத் தரப்போவதில்லை. காலத்திற்கும் புறச்சூழ்நிலைகளுக்கும் ஏற்ற போராட்ட வடிவங்களே இன்றைய தேவை. அண்மையில் முன்னெடுக்கப்பட்ட மனித சங்கிலிப் போராட்டம் பொருத்தமான, பயன்தரக்கூடிய ஒரு போராட்ட வடிவமாகும். ஆனால் அது ஏன் எதிர்பாரக்கப்பட்ட வெற்றியைத் தரவில்லை என்று மதிப்பிடப்பட வேண்டும். இப்போராட்டத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உட்பட அனைத்துக் கட்சிகளும் ஆதரவைத் தெரிவித்ததுடன் பங்குபற்றியும் இருந்தன. ஆனால் அது மக்கள் போராட்டமாக இல்லாது கட்சிகளின் ஆதரவாளர்களின் போராட்டமாகச் சுருங்கியதுடன் மனிதச் சங்கிலி அறுந்து நாலைந்து பேரின் ஊர்வலமாகவும் திருச்சபை மன்றாட்ட வடிவமாகவும் மாறியதுதான் மிச்சம். ஒரு போராட்டம் வெற்றியடையும்போது அடுத்த போராட் டத்துக்கு தாமாகவே மக்கள் திரள்வர் அதுவே பிசுபிசுத்துப்போனால் அடுத்த போராட்டத்துக்கு மக்களைத் திரட்டுவது இன்னும் கடினமாகிவிடும். இப்போராட்டத்தின் தோல்வியையும் எதிர்மறையான விமர்சனங்களையும் மறைப்பதற்காகத்தான் கடையடைப்பு போராட்ட உத்தி கையாளப்பட்டது என்ற விமர்சனங்களும் உண்டு. உண்மையில் போராடங்கள் மக்கள் வீதிக்கு இறங்கி போராடுவதற்கு வழிவகுக்க வேண்டுமேயன்றி வீட்டுக்குள் உறங்குவதற்கு வழிவகுப்பதால் எந்தப் பயனும் விளையப் போவதில்லை. மாறாக அவை மக்களுக்கு தேவையற்ற கஷ்டங்களையும் போராட்டங்கள் மீதும் தலைவர்கள் மீதும்வெறுப்பையுமே உண்டாக்கும் என்பதைத் தலைவர்கள் உணரவேண்டும்.

போராட்டங்கள் வெற்றியடைய வேண்டுமானால் அப்போராட்டங்கள் மீதும் அதனை முன்னெடுக்கும் அமைப்புகள் மீதும் மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் அவசியமாகும். அரசியல் கட்சிகளின்மீதும் அதன் தலைவர்கள் மீதும் மக்கள் நம்பிக்கை இழந்துவரும் இன்றைய நிலையில் அம்மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு ஒரே தெரிவு கட்சி சாராத குடிசார் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது மட்டுமே. கட்சி, தேர்தல், பதவிகள் என்பவற்றுக்கு அப்பால் நின்று நேர்மையாகவும் அர்ப்பணிப்புடனும் செயற்படக் கூடிய சமூகத் தலைவர்களால் வழிநடத்துக்கூடிய மக்கள் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப் படவேண்டியது காலத்தின் கட்டாயம். சமூகத்தின் பல்வேறு துறைசார்ந்த தலைவர்களைப் போல அரசியல் தலைவர்களையும் ஒரு அங்கமாகக் கொண்டு இக்கட்டமைப்பு உருவாக்கப் படுவதுடன் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்மானங்கள் மட்டுமன்றி அவர்களின் வெளியுறவு, பொருளாதாரம், சமூகநலன்கள் உட்பட அனைத்து விடயங்களுக்கும் வகைகூறக் கூடிய ஒருசமூகக் கட்டமைப்பு விரைவாக உருவாக்கப்பட வேண்டும். இதற்கு அனைவரும் ஒன்றுபட்டு முயற்சி எடுக்கவேண்டியது அவசியம். இதிலிருந்து நாம் தவறுவோமானால் போராடுவதற்கு எதிர்காலத்தில் இங்கு மக்களோ மண்ணோ இருக்கப் போவதில்லை.

# கனடாவில் கிழக்கும் மேற்கும் இணைந்த இம்மாத நிகழ்வுகள்

**குரு அரவிந்தன்**

இந்த மாதம் கனடாவில் வழமை போல வித்தியாசமான இரண்டு நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. அவை என்னவென்று நீங்கள் யோசிக்கலாம், ஒன்று 15 ஆம் திகதி ஆரம்பமான நவராத்திரி விழா, மற்றது கலோவீன் விழா. தமிழர்கள் அதிக அளவில் கனடா நாட்டிற்குப் புலம் பெயர்ந்ததால், அவர்களில் இந்துக்கள் தங்கள் பாரம்பரிய கொண்டாட்டமான நவராத்திரி விழாவை தாங்கள் வாழும் பகுதிகளில் விமர்சையாகக் கொண்டாடுகின்றார்கள். தொடக்கத்தில் வேலைவாய்ப்பு, பொருளாதார நெருக்கடி போன்றவற்றால் அவதிப்பட்டாலும், கடந்த 40 வருடங்களாக அவர்களது கடின உழைப்பு அவர்களைப் பொருளாதார ரீதியாக



ஓரளவு முன் னேற வைத்திருக்கின்றது. தமிழ் இனத் தின் புதிய தலைமுறை ஒன்றும் இங்கே உருவாக்கப்பட்டு அவர்களும் கல்வி கற்று, மொழியை மறக்காது நல்ல நிலை யில் இருப்பது பெருமைப்பட வேண்டிய விடயமே.

அதே சமயம் மேற்கத்திய கொண்டாட்டமான கலோவீன் கொண்டாட்டமும் இம்மாதம் 31 ஆம் திகதி தமிழர்கள் மத்தியில் விமர்சையாக இங்கே இடம் பெற இருக்கின்றது. பல்கலாச்சார நிகழ்வுகளையும் தமிழர்கள் ஏற்றுக் கொண்டு, ஐரிஸ் மக்கள் 19 ஆம் நூற்றாண்டில் கனடாவில் அறிமுகம் செய்து வைத்த கலோவீன் போன்ற நிகழ்வுகளிலும் ஏனைய இன மக்களுடன் இணைந்து பங்குபற்றிக் கொண்டாடுகின்றார்கள். நவராத்திரியைக் கொண்டாட வணக்கத்திற்குரிய பொம்மை வடிவங்கள் வீட்டின் உள்ளே உள்ள கொலுவிலும், அதே போல 31 ஆம் திகதி கலோவீனைக் கொண்டாட வீட்டு வாசலில் பூசணிக்காய், சிலந்தி, ஔவால், எலும்புக்கூடுகள், கறுப்புப்பூனை, போய், பிசாசு என்று உருவப் பொம்மைகள் அடங்கிய கொலு வைக்கப்பட்டிருப்பதையும் சில தமிழர் வீடுகளில் காணமுடிந்தது.

முதலில் கலோவீன் நிகழ்வு பற்றிப் பார்ப்போம். கோவிட் பெரும் தொற்றுக் காரணமாக கடந்த சில வருடங்களாகக் கலோவீன் நிகழ்வுகள் பெரிய அளவில் இங்கு இடம் பெறவில்லை. பிறந்த மண்ணில் இருக்கும் போது, எப்படி பேய், பிசாசு, கொள்ளிவால் பிசாசு, முனி என்றெல்லாம் சொல்லிப் பெரியவர்கள் எங்களுக்குப் பயம் காட்டினார்களோ, அதே போன்ற நம்பிக்கை உள்ளவர்கள் இங்கேயும் இருக்கின்றார்கள். வாசலில் உள்ள கொலுவைப் பார்க்கும் போது 'கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்' என்று மாணிக்கவாசக சுவாமிகள் குறிப்பிட்டது நினைவுக்கு வந்தது. இவர்களுடைய பலவீனத்தை வர்த்தகர்களும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, அதற்கு ஏற்றமாதிரிப் பொருட்களைத் தயாரித்து விற்பனைக்கு விட்டிருக்கிறார்கள்.




கலோவீன் தினத்தன்று சிறிய பிள்ளைகள் மட்டுமன்றி பெரிய பிள்ளைகளும்



அயலில் உள்ள ஒவ்வொரு வீட்டுக் கதவைத் தட்டிச் சாக்லட் வாங்குவது வேடிக்கையாக இருக்கும். இதில் இன்னுமொரு விடயம் என்ன வென்றால் தங்களுடைய நெருங்கிய ஆண், பெண் சினேகிதர்களுடன் இரவில் சுதந்திரமாகச் சுற்றித் திரிவதற்கும் இத்தினத்தைப் பயன்படுத்திக் கொள் வார்கள். பாடசாலைகளில் அந்த வாரம் இதைப்பற்றிக் கதைகள் சொல்வது, ஓவியங்கள் வரைவது, முகமூடி போன்ற வற்றைச் செய்வது, கலோவீன் சொல் தேடும் பயிற்சிகள் செய்வது போன்ற நிகழ்வுகளும் இடம் பெறும்.

இங்கே கோயில்களிலும், கல்வி மற்றும் கலையகங்களிலும் சிறப்பாக நவராத்திரி விழாவைக் கொண்டாடுகின்றார்கள். இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள் தினமும் இடம் பெறுகின்றன. ரொறன்ரோ கல்விச் சபையில் உள்ள எனது மாணவர்கள் இங்கே பிறந்த தலைமுறையினர் என்பதால், தாயகத்தில் எப்படி நவராத்திரி விழாவை நாங்கள் கொண்டாடினோம் என்ற கதைகளையும் எனது வகுப்பில் சொல்வதுண்டு. இங்கே பொதுப் பாடசாலைகளில் சமயக் கல்விக்கு அனுமதி இல்லை என்பதால், அறிவியல் சார்ந்து இங்குள்ள மாணவர்கள் இருப்பதால், அதற்கேற்ற மாதிரி அவர்களுக்கு விளக்கங்களும் கொடுத்தால் அதை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

---

# வியுக்தியார் பதில்கள்



**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**நடராஜா விஸ்வா,**
**கோயில்குளம், வவுனியா.**

**கேள்வி:** ஏழு தமிழ் கட்சிகள் கூட்டாக அழைப்பு விடுத்த ஹர்த்தல் வெற்றிபெற்றதா இல்லையா? ஒரு வரியில் பதில் சொல்லுங்கள்.

**வியுக்தியார்:** ஒப்பரேசன் சக்சஸ், ஆனால் நோயாளி இறந்துவிட்டார்.

---

**கந்தசாமி நிதர்சன்**
**தவசிகுளம், கொடிகாமம்.**

**கேள்வி:** நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்பதற்கு முயற்சி எடுக்கப்படுமானால் அதற்கு நாம் முழுமையாக ஆதரவு வழங்குவோம் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கிறாரே. அப்படி நீக்கப்படுவது தமிழர்களுக்கு நல்லது என்பதாலா?.

**வியுக்தியார்:** அது அவரிடம்தான் கேட்கப்பட வேண்டியது. அவர் விரும்புகின்ற ஒருவர் ஜனாதிபதியாக வருவது கடினம் என்று அவர் நம்புகின்றார் என்பது மாத்திரம் எனக்குப் புரிகின்றது.

---

**எஸ். சிவராமகிருஸ்ணன்,**
**வெள்ளவத்தை, கொழும்பு 6.**

**கேள்வி:** இந்தியாவின் நாகபட்டினத்திற்கும் இலங்கையின் காங்கேசன்துறைக்கும் இடையிலான கப்பல் சேவை நீண்ட இழுபறியின் பின்னர் அண்மையில் தொடங்கப்பட்டது. ஆனால் இரண்டு தடவைகள் கப்பல் வந்து போனதுடன் சேவை இடைநிறுத்தப்பட்டு விட்டதே?. தொடங்கும் போதே கடலில் காலநிலை பற்றி தெரியாமலா தொடங்கினார்கள்.?

**வியுக்தியார்:** யாழ்ப்படணத்திற்கும் கொழும்பிற்குமிடையே யுத்தகாலத்தில் கப்பல் சேவையை நடத்தியவர்கள் முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனின் சகோதரர்கள். இந்த கப்பல் சேவை தொடங்கியபோதே அவர்களுடன் பேசியபோது அவர்கள் சொன்னார்கள், இந்தக் கப்பல் அந்தக் கடலுக்கு பொருத்தமில்லாதது என்று. கேரளாவில் ஏரிகளில் ஓடுகின்ற கப்பல்போல ஒரு கப்பலை இந்தக் கடலில் ஓடமுடியாது. ஒரு நாள் வந்து போன பின்னர்தான் அவர்களுக்கு அது புரியவரும். நிறுத்திவிடுவார்கள் பாருங்கள் என்று. அவர்கள் சொன்னதுபோலவே நடந்திருக்கின்றது.

---

**தி. துஷியந்தன், இருபாலை, கோப்பாய்.**

**கேள்வி:** இஸ்ரேல்-பலஸ்தீன் பிரச்சினையில் இலங்கை அரசு இஸ்ரேலுக்கு சார்பான வகையிலேயே அறிக்கை வெளியிட்டுள்ளது என்றும், பலஸ்தீனத்தின் மக்கள் தொடர்பில் எதனையும் கூறவில்லை என்றும் தெரிவித்துள்ள எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல, தற்போது அங்கு இடம் பெறுவது போர்க்குற்றமே என தெரிவித்திருக்கிறாரே?.

**வியுக்தியார்:** அங்கே நடைபெறுவதுதானே பதின் நான்கு வருடங்களுக்கு முன்னர் இங்கும் நடந்தது. ஆனால் இங்கே நடந்தது போர்க்குற்றம் இல்லை என்றும் அவர்களும் தான் வாதிடுகின்றார்களே. இஸ்ரேலுக்கு ஆதரவாக அரசு இருக்கிறது என்பதற்காக பாலஸ்தீனத்திற்கு ஆதவாக இவர்கள் குரல்கொடுக்கிறார்களா? அல்லது உண்மையிலேயே நீதிக்காக குரல்கொடுக்கிறார்களா என்பது நமக்கு தெரிந்ததுதானே.

---

**எம். விபூசன், காரைதீவு,**
**அம்பாறை.**

**கேள்வி:** தேசிய மின்சார அமைப்பிற்கு தினசரி 6.5 சதவீத புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை வழங்கும் திட்டம் 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் வட மாகாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், அதற்காக சூரிய சக்தி மின் அமைப்பு ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதாமே. இத்திட்டத்திற்காக தனியார் நிறுவனம் ஒன்றினால் 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படும் என்றும் கூறப்படுகின்றது. வடக்கில் இதுபோன்ற திட்டங்கள் வருவது நல்லது தானே?

**வியுக்தியார்:** நீங்கள் இப்படி கேட்கின்றபோது வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இயங்கிய போது நடந்த சம்பவம் ஒன்றுதான் ஞாபகத்திற்கு வருகின்றது. அப்போது வரதராஜப்பெருமாள் இணைந்த மாகாணசபையின் முதலமைச்சராக இருந்தார். அருகேயுள்ள வடமத்திய மாகாண முதலமைச்சரிடமிருந்து அவர்களுக்கு ஒரு கடிதம் வந்ததாம். அதாவது தமது மாகாணத்திலிருந்து வடகிழக்கு மாகணத்திற்குள் வரும் மகாவலி நீருக்கு பணம் செலுத்துமாறு கேட்டிருந்தாராம் வடமத்திய மாகண முதலமைச்சர். அதற்கு வரதராஜப் பெருமாள், 'உங்கள் தண்ணீர் எமக்கு வேண்டாம். எமது மாகாணத்திற்குள் தண்ணீரை இனி விட்டால் அதற்காக நீங்கள் எமக்கு கட்டணம் செலுத்தவேண்டும்" என்று பதிலளித்திருந்தாராம். அதாவது நமது பகுதியில் நமக்கு பயன்படுவதற்காக கிடைக்கும் சூரிய ஒளியிலிருந்து தயாரிக்கப்படும் மின்சாரத்திற்காக வடக்கு மாகாணசபைக்கு மின்சாரசபை கட்டணம் செலுத்த வேண்டும், அல்லது அதற்காக முதலிடும் நிறுவனத்தின் வருமானத்தில் ஒருபகுதியை மாகாண சபைக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுப்பெற்றால் மாத்திரமே அதனால் நமக்கு பயன்கிடைக்கும். இந்த திட்டம் வடக்கு மாகாணத்தில் வருவதால் ஒருவருக்கு கூட வேலை வாய்ப்புக் கிடைக்கப்போவதுமில்லையே.

# ஊடகங்கள் மீதான இஸ்ரேலின் போர்: ஜெருசலேமில் அல்ஜஸீராவுக்கு தடை! ரொய்ட்டர்ஸ் நிருபர் தாக்குதலில் பலி !

ஐங்கரன் விக்கினேஸ்வரா



தற்போதய இஸ்ரேல் பாலஸ்தீன மோதல் ஆரம்பித்தது முதல் 14 ஊடகவியலாளர்கள் அந்தப் பிராந்தியத்தில் கொல்லப்பட்டுள்ளனர் என்று "பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கின்ற சர்வதேசக் குழு" தெரிவித்துள்ளது.

உலகின் ஒருகோடியில் நடைபெறும் ஒரு நிகழ்வை மறுகோடியில் வசிப்பவர்களால் உடனுக்குடன் அறியவும் அது குறித்து பேசவும் முடிகிறதெனில் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையம் ஆகிய ஊடகங்களின் மூலமே இது சாத்தியமாகிறது. உலகெங்கும் பரந்து வாழும் பலதரப்பட்ட மக்களிடம் தகவல்களைக் கொண்டு சேர்ப்பதில் ஊடகங்களின் பணி மகத்தானது.

ஆயினும் இன்றைய நவீன யுகத்தில் ஊடகங்கள் பக்கச்சார்பு மட்டுமின்றி, வேண்டுமென்றே பொய்யான தகவல்களை வழங்குவதில் முன்னிற்கின்றன. தற்போதய இஸ்ரேல்- பாலஸ்தீன மோதல்களில் மேற்கத்திய ஊடகங்களின் பொய்மையை இலகுவாக யாராலும் புரியலாம்.

**அல்ஜசீரா செய்தி நிறுவனத்திற்கு தடை:**

மத்திய கிழக்கின் உண்மைகளை கூறும் அல்ஜசீரா செய்தி நிறுவனத்தின்கு இஸ்ரேல் தற்போது தடை போட்டுள்ளது. பாலஸ்தீனிய மக்கள் மீது இஸ்ரேல் நடத்தும் மனித நேயத்திற்கு எதிரான போரின் உண்மையை வெளிப்படுத்துவதால் அந்த ஊடகத்திற்கு இஸ்ரேலில் தடை விதித்துள்ளது.

இதனால் அல்ஜசீரா தொலைக்காட்சி மற்றும் இணையம் மற்றும் சமூக ஊடகங்களை இஸ்ரேலில் பார்வையிட முடியாது. இஸ்ரேலுக்கு எதிரான பரப்புரை ஊடகமாக இருப்பதால் அதை தடை செய்வதாக இஸ்ரேல் ஒரு பொய்யான விளக்கத்தை அளித்துள்ளது.

குறிப்பாக பாலஸ்தீனிய மக்கள் மீது இஸ்ரேல் ஏவிவிடும் மானுட நேயத்திற்கு எதிரான போர்க் குற்றங்களை நியாயப்படுத்துவதில் மேற்கு ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன. இஸ்ரேலும் தங்களது செயற்பாடுகளை உலகம் அங்கீகரிக்க வேண்டும் என்ற நிலையில் பரப்புரைகளை செய்கிறது.

இந்நிலையில் அல்ஜசீரா ஊடகம் பாலஸ்தீனத்தில் என்ன நடக்கிறது என்ற உண்மைகளைப் போட்டு உடைப்பதால் இஸ்ரேலுக்கு இது பெரும் தர்மசங்கடமாக உள்ளது.



நடுநிலைமை என்று கூறிக்கொண்டு பி.பி.சி , சி.என்.என், ரொயிற்றர், ஏபி, யூரோ நியூஸ், பிரான்ஸ் 24 என பல ஊடகங்கள் மேற்கு நாடுகளையும் இஸ்ரேலையும் எவ்வாறு ஆதரிக்கிறதோ அதேபோன்று அல் ஜசீரா தொலைக்காட்சியும் அரபு தேசத்தின் ஊடகமாக இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அல்ஜசீரா செய்தி நிறுவனத்தின் ஜெருசலேம் அலுவலகத்தை மூட இஸ்ரேல் உத்தரவு என்பது ஏதோச்சகார அரசுகளின் கொடுமையை மூடிமறைக்கும் திட்டங்களில் ஒன்றாகும். பாலஸ்தீன ஹமாஸ் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவான செய்திகளை அல்ஜசீரா செய்தி நிறுவனம் வெளியிடுவதாக இஸ்ரேலிய தொடர்பு அமைச்சர் ஷ்லோமோ கார்ஹி கூறியுள்ளார். இதனால் இஸ்ரேல் அரசு அல்ஜசீரா ஊடகத்திற்கு தடை விதித்துள்ளது.

அல்ஜசீரா செய்தி நிறுவனம் ஹமாஸ் கிளர்ச்சியாளர்களை ஆதரிக்கும் விதமான தகவல்களை வெளியிடுவதாகவும் அத்தகவல்களால் இஸ்ரேலியத் துருப்பினர்கள் காஸாவைச் சேர்ந்த தாக்குதல்காரர்களுக்கு இலக்காக நேரிடும் என்றும் இஸ்ரேலிய தொடர்பு அமைச்சர் கூறினார்.

அல்ஜசீரா தொலைக்காட்சி, சினமூட்டும் தகவல்களை வெளியிடுகிறது. காஸாவிற்கு வெளியே துருப்பினரைப் படமெடுத்து வெளியிடுகிறது. இஸ்ரேலியக் குடிமக்களுக்கு எதிரான தகவல்களை வெளியிடும் ஒரு பிரசார ஊடகமாகச் செயல்படுகிறது என்றும் இஸ்ரேலிய ராணுவ வானொலி நிலையத்திடம் திரு கார்ஹி கூறியுள்ளார்.




**இஸ்ரேல் தாக்குதலில் ரொய்ட்டர்ஸ் நிருபர் பலி:**

பாலஸ்தீன காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதுடன், அயல்நாடு லெபனான் எல்லையிலும் இஸ்ரேல் குண்டு வீச்சு தாக்குதல் நடத்திகிறது. இதன் போது தெற்கு லெபனானில் நடைபெறும் தாக்குதல் குறித்து செய்தி சேகரிப்பதற்காக பத்திரிகையாளர்கள் சென்றிருந்தனர். இஸ்ரேல் நடத்திய கோரமான ஏவுகணை தாக்குதலில் ரொய்ட்டர்ஸ் நிறுவன வீடியோகிராபர் இஸ்ஸாம் அப்தல்லா உயிரிழந்தார்.

> **இஸ்ரேல் பாலஸ்தீன மோதல் ஆரம்பித்தது முதல் 14 ஊடகவியலாளர்கள் அந்தப் பிராந்தியத்தில் கொல்லப்பட்டுள்ளனர். மத்திய கிழக்கின் உண்மைகளை கூறும் அல்ஜசீரா செய்தி நிறுவனத்திற்கு இஸ்ரேல் தற்போது தடையும், போர் முனையில் ரொய்ட்டர்ஸ் நிருபர் லெபனானில் பலியாகி உள்ளார்.**

ரொய்ட்டர் சர்வதேச செய்தி நிறுவனத்துக்காக லெபனானில் இருந்து செயற்பட்ட செய்தியாளர் இஸ்ஸாம் அப்துல்லா இஸ்ரேல் படைகளது குண்டு வீச்சில் சிக்கி உயிரிழந்தார். அல்ஜசீரா, ஏ.எவ்.பி நிறுவனங்களைச் சேர்ந்த வேறு சில செய்தியாளர்கள், படப்பிடிப்பாளர்கள் உட்பட ஆறு பேர் காய மடைந்தனர்.

அவர்கள் பயணம் செய்த வாகனம் செய்தியாளர்களுடையது என்று தெளிவாக அடையாளப்படுத்தப் பட்டிருந்த நிலையிலும் இஸ்ரேல் படைகளின் நேரடியான ரொக்கெற் வீச்சுக்கு இலக்கானதாகச் சொல்லப்படுகிறது. லெபனானின் தென் பகுதியில் இஸ்ரேல் எல்லையோரம் இந்தத் தாக்குதல் நடைபெற்றி ருக்கிறது.

குண்டு வீச்சுக்கள் ஆரம்பித்தது முதல் அங்குள்ள நிலைவரங்களை அறிவதற்காக ரொய்ட்டர் நிறுவனத்தினால் தெற்கு லெபனானுக்கு அனுப்பப்பட்ட அணி ஒன்றில் இஸ்ஸாம் அப்துல்லா வீடியோப் படப்பிடிப்பாளராக இணைந்திருந்தார். அவர் கொல்லப்பட்டிருப்பது ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தியி ருப்பதாக ரொய்ட்டர் நிறுவனம் ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

லெபனானில் நடந்த இறுதி நிகழ்வில் இஸ்ஸாம் அப்துல்லாவின் உடலுக்கு ஆயிரக்கணக்கான பொது மக்களும் பத்திரிகையாளர்களும் திரண்டு அஞ்சலி செலுத்திய காட்சிகளை ரொய்ட்டர் வெளியிட்டிருக்கிறது.

இந்நிலையில் இந்த தாக்குதல் இஸ்ரேல் ராணுவத்தின் திட்டமிட்ட தாக்குதல் எனவும், இது குறித்து ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலிடம் முறையான புகார் அளிக்கவுள்ளதாகவும் லெபனான் வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

தற்போது பாலஸ்தீன மக்கள் தங்கள் சொந்த மண்ணில் இஸ்ரேலால் விரட்டியடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இஸ்ரேல் ஊடகங்கள் மட்டுமன்றி, மேற்கத்திய ஊடகங்களும் திட்டமிட்டு பாலஸ்தீன விடயத்தில் பொய்களையே வெளியிடுகின்றன. அது மாத்திரமன்றி பெரும்பாலன மேற்குலக ஊடகங்கள் பாலஸ்தீனர்களுக்கு எதிராக என்றும் செயல்பட்டு வருகின்றன. வரலாறு நெடுகிலும் பாலஸ்தீனர்களுக்கு எதிராக இவ்வாறான ஊடகப் போர்களை நடாத்தி வருகின்றன.

**ஈராக் போரில் அமெரிக்க ஊடக திரிபு:**

மேற்கத்தய ஊடகப் போருக்கு சான்றாக ஈராக் போர் ஒன்றே சாட்சியமாகிறது. ஈராக்கின் பெட்ரோல் வளத்திற்காகவும், இரசாயன அணு ஆயுதங்களை ஈராக் பதுக்கி வைத்திருக்கின்றது என கூறியும், ஈராக்கை பயங்கரவாத நாடு என்று தன் ஆதரவு செய்தி ஊடகங்களான




பி.பி.ஸி மற்றும் சி.என்.என் வழியாக உலகநாடுகள் மத்தியில் சித்தரித்தது.

ஆயினும் அணு ஆயுதங்களை ஈராக் பதுக்கி வைத்திருக்கவில்லை என ஐ.நா நிபுணர்கள் குழு ஆய்வு செய்து அவ்வாறு இல்லை என்று உறுதிபடக் கூறியுள்ளது. எனினும் ஐ.நா வின் சொல்லையும் மீறி அமெரிக்கா தன் தனி அதிகாரத்தைப் பயன்படுத்தி 2003இல் ஈராக் மீது போர் தொடுத்தது.

அப்போது ஈராக்கை பலவீனப்படுத்த முதன் முதலில் அமெரிக்கா தன் ஏவுகணைகளை ஈராக்கின் தகவல் தொடர்புக் கட்டிடத்தின் மீது வீசி அதை முற்றிலுமாக அழித்தது. காரணம், ஈராக்கினுள் தான் நடத்தப்போகும் அராஜக மனித மீறல்கள் உலகத்திற்குத் தெரிந்து விடக் கூடாது என்று ஊடகங்களின் வாசல்கள் அனைத்தையும் அடைத்தது.

ஈராக்கில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவி மக்களை கொன்று குவித்தது அமெரிக்கா. இச்செய்திகளை அல்ஜசீரா மற்றும் சில இணைய ஊடகங்கள் வெளியுலகிற்குக் கொண்டு வந்தபோது அமெரிக்கா மற்றும் பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த மக்கள் கூட மனித நேய அடிப்படையில் அமெரிக்காவை எதிர்த்துப் போர் நிறுத்தம் செய்யக் கூறி ஆர்ப்பாட்டங்கள் நடத்தினார்கள்.



இவையெல்லாம் இணைய ஊடகங்கள் வாயிலாகக் புகைப்படங்களாக வெளிவந்த போது, அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ் பெல்ட் இத்தகைய இராணுவ வரம்புமீறல்களுக்கு மன்னிப்புக் கோரினார். இழந்த உடமைகளும், உயிர்களும் இவரின் மன்னிப்பின் மூலம் மீட்டிட முடியாது. ஆயினும் இத்தகைய ஊடகப் போரை அமெரிக்கா மீள மீள நடாத்தி வருகிறது.

# கனடாவில் மனைவியை கொலை செய்த இலங்கைத் தமிழருக்கு ஆயுள் தண்டனை

றொரன்ரோ, ஒக். 22

**கனடாவில் முன்னாள் மனைவியை கொடூரமாக கொலை செய்த இலங்கை தமிழர் ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.**

27 வயதான தர்ஷிகா ஜெகநாதன் ஸ்காபரோவில் பஸ்ஸில் இருந்து இறங்கி வீட்டுக்கு நடந்து சென்று கொண்டிருந்த போது கொடூரமாக தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

2019 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து உயிரிழந்த பெண்ணின் முதல் கணவரான சசிகரன் தனபாலசிங்கம் மீது முதல் நிலை கொலை குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, சசிகரன் தனபாலசிங்கத்துக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

"தர்ஷிகா ஜெகநாதன் இறந்த விதத்திற்கு தகுதியான வள் அல்லர், ஆனால் இன்று நீதி வழங்கப்படுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்," என்று அவரின் குடும்பத்தினர் கூறியுள்ளனர்.

தர்ஷிகா ஜெகநாதனின் குடும்பத்தினர் ஜூம் வழியான இலங்கையில் இருந்து விசாரணையைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

தர்ஷிகாவுடன் 2019 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி தொலைபேசியில் கடைசியாகப் பேசியதாக நீதிமன்றில் கூறிய பரமேஸ்வரன், அவர் தனது கடைசி மூச்சைக் கேட்டதாகக் கூறினார்.

"அவளுடைய அலறல் குரலால் நான் பயந்தேன். அது என்றென்றும் என் தலையில் மீண்டும் ஒலிக்கும்,"என்று பரமேஸ்வரன் கூறினார்.

தர்ஷிகா இறந்த முதல் ஒரு மாதத்துக்கு தன்னால் தூங்க முடியவில்லை என்று அந்த அலறல் அதிர்ச்சியை ஏற்படுத்தியதாக அவர் கூறினார்.

அவளது துயரத்தைச் சமாளிக்க சிகிச்சையையும் நாடவேண்டியிருந்தது என்று பரமேஸ்வரன் கூறியிருந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட நீண்ட விசாரணைகளின் பின்னர் சசிகரன் தனபாலசிங்கம் முதல் நிலைக் கொலைக் குற்றவாளி என கடந்த மே மாதம் நீதிபதி தீர்ப்பளித்தார்.

ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை அறிக்கையின்படி, எல்லெஸ்மியர் சாலை மற்றும் மோரிஷ் சாலைக்கு அருகில் தர்ஷிகா ஜெகநாதன் சிசிரிவி கண்காணிப்பில் பதிவாகியுள்ளார்.

அப்போது பஸ்ஸில் இருந்து இறங்கிய நபர் ஒருவர் கத்தியுடன் தர்ஷிகா ஜெகநாதனை துரத்தியுள்ளார். தர்ஷிகாவை தாக்கியவர் தனபாலசிங்கம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை.

தண்டனை வழங்கப்படுவதற்கு முன்னர் குற்றவாளிக்கு நீதிமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

குற்றவாளிக்கு வாழ்நாள் ஆயுத தடை விதிக்கப்பட்டதுடன், அவரது டிஎன்ஏவை தேசிய டி.என்.ஏ. தரவு வங்கிக்கு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

தர்ஷிகா ஜெகநாதன், இலங்கையில் மானிப்பாய் பகுதியை சேர்ந்தவர். சசிகரன் தனபாலசிங்கம், முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்தவர்.

இவர்கள் இருவருக்கும் இடையில் 2015ஆம் ஆண்டு இந்தியாவில் திருமணம் நிகழ்ந்தது.

2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி தர்ஷிகா ஜெகநாதன் கனடா சென்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# முல்லைத்தீவில் உயிரிழந்து கரையொதுங்கியது சுறா!



முல்லைத்தீவு, ஒக். 22

முல்லைத்தீவு - அளம்பில் கடற்கரையில் உயிரிழந்த நிலையில் சுறா ஒன்று நேற்று சனிக்கிழமை கரையொதுங்கியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முல்லைத்தீவு அளம்பில் கடற்கரையில் 15 அடி நீளமுடைய சுறா ஒன்றே இவ்வாறு உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இலங்கைக் கடற்கரையில் தொடர்ச்சியாக கடல்வாழ் உயிரினங்கள் இறந்த நிலையில் மீட்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு இறந்த நிலையில் கரை ஒதுங்கிய டொல்பின் கடலாமைகள் மற்றும் ஏனைய கடல்வாழ் உயிரினங்கள் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் பகுப்பாய்வு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பதுளை-கொழும்பு வீதியில் பல இடங்களில் மண் சரிவு

கொழும்பு, ஒக். 22

பதுளை-கொழும்பு பிரதான வீதியில் ஹப்புத்தளைக்கும் பெரகலைக்கும் இடைப்பட்ட பகுதியில் பல மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

இதன் காரணமாக பதுளை - கொழும்பு பிரதான வீதியின் போக்குவரத்து தடைப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மூன்று இடங்களில் பிரதான வீதிக்கு மண் மற்றும் கற்கள் வீழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக நேற்று பிற்பகல் 2.30 மணி முதல் ஹப்புத்தளைக்கும் பெரகலைக் கும் இடைப்பட்ட பகுதியில் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாக மண் அகற்றும் பணிகளும் பாதிக்கப்பட்டன.

(அ)

# டயனா கமகே, ரோஹன பண்டார, சுஜித் சஞ்சய ஆகியோரின் முறைப்பாடுகள் விசாரணைக்கு!

கொழும்பு, ஒக். 22

பாராளுமன்றத்தில் ஏற்பட்டதாக கூறப்படும் மோதல் சம்பவம் தொடர்பில், இராஜாங்க அமைச்சர் டயனா கமகே, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ரோஹண பண்டார மற்றும் சுஜித் சஞ்சய பெரேரா ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வெலிக்கடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் டயனா கமகே வெலிக்கடை பொலிஸ் நிலையத்திலும், பாராளுமன்ற உறுப்பினர்களான ரோஹண பண்டாரவும் சுஜித் சஞ்சய பெரோராவும் மிரிஹான பொலிஸ் நிலையத்திலும் தங்களது முறைப்பாட்டை அளித்துள்ளனர்.

எனினும், குறித்த மோதல் சம்பவம் வெலிக்கடை பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளமையினால் அந்த முறைப்பாடு வெலிக்கடை பொலிஸ் நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

அதன்படி, வெலிக்கடை பொலிஸ் நிலையம், பாராளுமன்ற பொலிஸ் நிலையத்துடன் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாராளுமன்றில் தாக்குலுக்கு உள்ளானதாக தெரிவித்த இராஜாங்க அமைச்சர் டயனா கமகே, ஸ்ரீஜயவர்தனபுர வைத்தியசாலையில், அனுமதிக்கப்பட்டு சில மணித்தியாலங்களின் பின்னர் அங்கிருந்து வெளியேறினார்.

இதனையடுத்து, பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா பாராளுமன்றத்தில் உள்ள நூலகத்துக்கு அருகில் வைத்து தம் மீது தாக்குதல் நடத்தியதாக இராஜாங்க அமைச்சர் டயனா கமகே பாராளுமன்றில் தெரிவித்திருந்தார். (அ)

# மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக விரைவில் வழக்கு?

கொழும்பு, ஒக். 22

மின் கட்டண அதிகரிப்பிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என மின் பாவனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு பொது பயன்பாடுகள் ஆணைக்குழு வழங்கிய அனுமதி சட்டவிரோதமானது என அந்த சங்கத்தின் செயலாளர் சஞ்ஜீவ தம்மிக சுட்டிக்காட்டினார்.

மேலும், வருடமொன்றுக்கு மூன்று தடவைகள் மின் கட்டணத்தை அதிகரிக்க மின்சார சபை சட்டத்தில் இடமில்லை என அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், மின் கட்டணத்தை அதிகரிக்க மின்சார சபை முன்வைத்த 04 காரணங்களும் பொய்யானவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன் தினம் முதல் மின் கட்டணத்தை அதிகரிக்க பொது பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதியளித்துள்ளது.

இந்நிலையில், 18 வீதத்தில் இருந்து 20 வீதம் வரையான மின் கட்டண அதிகரிப்பை மேற்கொள்ள இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எசமானரின் குரல்...

என்று அவர் ஏற்கெனவே கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி தேர்தலுக்காக 2024 பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்தால் அரசாங்கத்தினால் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் போகும் என்று கடந்த மாதம் அபேவர்தன கூறியிருந்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தனியொரு உறுப்பினராக பாராளுமன்றத்தில் இருந்த விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவானதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே அபேவர்தன நியமிக்கப்பட்டார். ஜனாதிபதி நினைத்திருந்தால் தனது கட்சியின் வேறு உறுப்பினரை அந்த வெற்றிடத்துக்கு நியமித்திருக்க முடியும்.

அபேவர்தனவை அவர் நியமிக்க விரும்பியதற்கு ஒரு பிரத்தியேக காரணம் இருந்திருக்கிறது என்பதை அவர் அண்மைக்காலமாக வெளியிட்டுவரும் (அபத்தமான) கருத்துக்களை நோக்கும்போது புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

முன்னாள் பொதுநிருவாக அமைச்சரான அவரின் கருத்துக்களை தான்தோன்றித்தனமாக பேசுகின்ற ஒரு அரசியல்வாதியிடம் இருந்து வருகின்றவையாக அலட்சியம் செய்துவிட முடியாது. ஏனென்றால் ஜனாதிபதி விக்கிரமசிங்க தனது அரசியல் தந்திரோபாயங்களுக்கு அரசியல் கட்சிகள் மற்றும் மக்களிடமிருந்து வெளிவரக்கூடிய பிரதிபலிப்புக்களை அறிந்துகொள்வதற்கு தனது கட்சியின் தவிசாளரைப் பயன்படுத்துகிறார் என்று நம்ப வேண்டியிருக்கிறது.

அபேவர்தன அண்மைக்காலத்தில் வெளியிட்ட பல கருத்துக்கள் அரசாங்கம் முன்னெடுத்த சில ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு முன்னோடியாக அமைந்ததை காணக்கூடியதாக இருந்தது.

நாட்டை நிலையுறுதிப் படுத்துவதற்கான தேசிய கொள்கைக் கட்டமைப்பு ஒன்றை தயாரித்த பின்னரே தேர்தல்கள் நடத்தப்படும் என்றும் அடுத்த சில மாதங்களுக்கு தேர்தல் எதையும் நடத்த முடியாது என்றும் ஜனாதிபதியும் அரசாங்கமும் உள்ளூராட்சி தேர்தல்களை எவ்வாறு ஒத்திவைப்பது என்று சிந்தித்துக்கொண்டிருந்த வேளையில் கடந்த வருடம் அக்டோபரில் அபேவர்தன கூறினார். தேர்தல்களை நடத்துவதற்கு இது நேரம் அல்ல. தேர்தல்களை நடத்த வேண்டும் என்று கோருபவர்கள் நாட்டை நிலைகுலைய வைக்கவே விரும்புகிறார்கள் என்றும் அவர் கூறியது பதிவில் இருக்கிறது.

ஐரோப்பிய பெண்கள் இலங்கைக்கு வந்து வீட்டுப்பணிப் பெண்களாக பணியாற்றக்கூடிய அளவுக்கு இலங்கையை பொருளாதார சுபிட்சமுடைய நாடாக ஜனாதிபதி விக்கிரமசிங்க மாற்றிக்காட்டுவார் என்றும் விக்கிரமசிங்கவை எந்தவொரு உலகத் தலைவரும் மதிக்காமல் இருக்கமுடியாது. அந்தளவுக்கு சர்வதேச சமூகத்தின் மத்தியில் செல்வாக்கைக் கொண்டவராக அவர் விளங்குகிறார் என்றும் அபேவர்தன கூறினார்.

கடந்த வருடம் இன்னொரு தடவை அதுவும் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கு ஒரு சில நாட்கள் முன்னதாக, 2019 ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ச 69 இலட்சம் வாக்குகளுடன் பெற்ற மக்கள் ஆணையை கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி 250,000 வாக்குகளுடன் பெற்ற ஆணை விஞ்சிவிட்டது. தற்போது நடைமுறைப் படுத்தப்படுவது அந்த ஆணையே என்று கூட அபேவர்தன கூறினார்.

நாட்டு மக்கள் என்ன நினைப்பார்கள் என்பதை பொருட்படுத்தாமல் இவ்வாறாக அபத்தமான கருத்துக்களை கூறும் ஒருவர்தான் இன்று நாட்டின் பழம் பெரும் கட்சியின் தவிசாளராக இருக்கி றார். அவரை எசமானரின் குரல் என்ப தை தவிர வேறு எவ்வாறு அழைக்க முடியும்?

இறுதியாக கடந்தவாரம் அபேவர்தன ஜனாதிபதி தேர்தலில் எவரும் போட்டியிட முன்வரக்கூடாது என்று கூறிய கருத்தின் பின்னணி என்ன என்பதை நாளடைவில் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும்.

# மின் நுகர்வோரை துக்கத்தில் ஆழ்த்தும் ரணில் அரசாங்கத்தின் இரட்டை வேடம்

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 22

வரி செலுத்தவேண்டிய மக்களிடம் இருந்து முறையாக வரியை அறவிடாது அரசாங்கம் மூன்றாவது தடவையாகவும் மின் கட்டணத்தை சட்டவிரோதமாக அதிகரித்துள்ளதாகவும், இந்த செயலால் இந்நாட்டு மின்சார நுகர்வோர் நிர்க்கதியாகியுள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பொரளை பௌத்த இளைஞர் சங்க கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற இலங்கை மதுபாவனைக்கெதிரானோர் சங்கத்தின் 111 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிகரெட் நிறுவனங்கள்,அரச அதிகாரிகள் சிலருக்கு சந்தோச அன்பளிப்புகளை அளித்து,குறித்த ஒரு சில அரச அதிகாரிகள் மகிழ்ச்சியுடன் வீடுகளுக்குச் செல்லும் போது நாட்டின் ஏழை மக்கள் மின்கட்டணத்தைச் செலுத்த முடியாமல் சோகத்தில் மூழ்கியுள்ளனர்.

எதிர்கால ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் புகையிலை, போதைப் பொருள் மற்றும் மதுவின் பயன்பாட்டை யதார்த்தமாக குறைக்கும் அல்லது முழுமையாக இல்லாதொழிக்கும் திட்டத்தைத் முன்னெடுக்க தாம் உறுதியளிக்கின்றோம்.

இந்தக் கொள்கையால் வாக்குகள் குறையும் என்ற அச்சம் தனகில்லை. பொய் சொல்லாத,மக்களை ஏமாற்றும் ஊழல் அரசியல் கலாசாரத்திற்கு முடிவு கட்ட வேண்டும்.

தற்போது,கிராம மட்டத்தில் வறுமையை ஒழிப்பதற்கு பதிலாக, ஆளும் கட்சி உறுப்பினர்களது கையொப்பத்துடன் பியர் உரிம பத்திரம் வழங்கும் திட்டம் நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நாட்டை குடிகாரர்களின் சொர்க்கமாக மாற்ற முயற்சிக்கின்றனர். எதிர்க்கட்சித் தலைவராக பார் உரிம பத்திரம் வழங்குவதற்கு நபர்களின் பெயர்களை சிபாரிசு செய்யாதது குறித்து தான் பெருமைப்படுகிறேன்.

பாடசாலை கட்டமைப்பு கூட போதைப்பொருள் கடத்தலால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.இவ்வாறான நிலையில்,நேரடியான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். இந்த அழிவைப் பார்த்துக் கொண்டு நாம் இனியும் செயலற்றிருக்க முடியாது.சின்னஞ் சிறார்களின் நலனுக்காக கடு ஸ்ரீமையான தீர்மானங்களை எடுக்க வேண் ஸ்ரீடும்.

நாட்டு மக்களின் விழிப்புணர்வை திசை திருப்பும் வகையில் புகைபிடித்தல்,மதுபானம்,கஞ்சா போன்றவை ஊக்குவிக்கப்படுகின்றன.

மது,போதைப்பொருள்,சிகரெட் போன்றவற்றின் பயன்பாடு நமது நாட்டின் கலாசாரத்தில் எவ்வாறு பதிந்துள்ளது என்பதைப் பார்க்கும் போது மிகவும் பரிதாபமாக உள்ளது.இதற்கு சட்ட கட்டமைப்பு மட்டுமின்றி தேவையான நடைமுறை ரீதியான ஏற்பாடுகளும் நாட்டில் செயல்படுத்தப்பட வேண்டும் - என்றார்.

## 2024இல்...

கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

“ஸ்மார்ட் நாடு - 2048ஐ வெல்வோம்” என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாட்டில், திருத்தப்பட்ட கட்சியின் புதிய யாப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஒன்லைன் மூலம் அமைப்புக்களை உருவாக்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு சந்தர்ப்பம் வழங்கி கட்சியை டிஜிற்றல் மயமாக்குவது தொடர்பில் இந்த திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஸ்மார்ட் நாட்டிற்கு முன், ஐக்கிய தேசியக் கட்சி ஸ்மார்ட் கட்சியாக கட்டியெழுப்பப்பட வேண்டுமென ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இந்த மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

ஸ்மார்ட் நாட்டைக் கட்டியெழுப்ப சகல துறைகளிலும் ஊழலை ஒழிக்க வேண்டும் என்றும், அதற்காக அரச நிறுவனங்களிலும் அரசியல் கட்சிகளிலும் ஊழலைக் கட்டுப்படுத்த பல கட்டளைச் சட்டங்கள் கொண்டு வரப்படும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் கட்சி என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பலத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, எதிர்காலத்தில் நாட்டுக்கான பரந்த பங்களிப்பை வழங்குவதற்கு ஸ்மார்ட் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி முன்வர வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

தேர்தல்முறை மறுசீரமைப்பு யோசனை ஊடாக ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் முயற்சிகள் எடுத்துவருதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுவரும் பின்புலத்திலேயே ஜனாதிபதி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். (அ)

## ஐ.தே.க...

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட சம்மேளனத்தில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“எமது கட்சிக்கு, நாட்டுக்கு தற்போது ‘ஸ்மார்ட்’ தலைவர் ஒருவர் இருக்கின்றார். அவரை உலகம் ஏற்கின்றது. தூர நோக்கு சிந்தனை அவரிடம் இருக்கின்றது. எனவே, நாட்டில் எல்லா துறைகளும் நவீனமயப்படுத்தப்படும். அந்தவகையில் எமது நாடு ஸ்மார்ட் நாடாக மாறும். ” எனவும் ஐ.தே.க. செயலாளர் கூறினார். (அ)

## தூத்துக்குடி...

சர்வதேச கடல்சார் மாநாட்டின் போது, டுபாய் நிறுவனமொன்றுடன் தூத்துக்குடி துறைமுக ஆணையம் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனம் கப்பல் போக்குவரத்துக்காக இலங்கையில் அனுமதி பெறும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக துறைமுக அதிகாரிகளை மேற்கோள் காட்டி தமிழக செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

இதன் மூலம் தூத்துக்குடி துறைமுகத்தை மையமாகக் கொண்டு பல் வேறு இடங்களுக்கு கப்பல் போக்குவரத்தை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த கப்பலில் 300 பயணிகள் பயணிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான கப்பல் இன்னும் 2 மாதங்களில் தூத்துக்குடி துறைமுகத்தை வந்தடையவுள்ளதாக துறைமுக ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

அதன் பின்னர் உடனடியாக தூத்துக்குடி - காங்கேசன்துறை கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட உள்ளது.

தொடர்ந்து, கொழும்பு - இராமேஸ்வரம் - தூத்துக்குடி - கன்னியாகுமாரிக்கு இடையே கப்பல் சேவை முன்னெடுக்கப்படும் எனவும் தமிழக செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை, நாகபட்டினம்-காங்கேசன்துறை இடையே ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட பயணிகள் கப்பல் சேவை கடந்த சில தினங்களுக்கு முன்னர் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி மூடி மறைக்கப்படுமா என்று சந்தேகம்!

## சுட்டிக்காட்டுகின்றார் ரவிகரன்

முல்லைத்தீவு, ஒக். 22

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி மூடி மறைக்கப்படுமா என்ற சந்தேகம் தற்போது எழுகின்றது என வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி இடத்தை நேற்று பிற்பகல் நேரில் சென்று பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொக்குதொடுவாய் புதைகுழி தொடர்பான விடயத்தை பார்க்கும் போது ஏற்கனவே இறுதி நாளன்று 17 உடலங்கள் புதைகுழியின் ஊடாக கண்டுபிடிக்கப்பட்டதாகவும், நிறுத்தப்பட்ட தினத்தின்போது ஒக்ரோபர் மாதம் நடுப்பகுதி அல்லது பிற்பகுதி அடுத்த அகழ்வு ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அண்மையில் நிதி போதாத நிலைமை சுட்டிக்காட்டி காலதாமதம் ஆகலாம் என்று ஒரு தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

எங்களுக்கு இதில் ஒரு ஐயம் ஏற்படுகின்றது. என்னவென்றால் காலதாமதங்கள் , நிதி இல்லை என்று கூறுவதும், ஒக்ரோபர் மாதத்திற்கு பிற்போடப்பட்டதும், குறித்த காலப்பகுதி மழை காலமாக இருப்பதாலும் இப்படியே மூடி மறைக்கப்பட்டு விடுமோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தாங்கள் ஒப்படைத்த பிள்ளைகளை தருமாறு கூறி 2000 நாட்களுக்கு மேலாக போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். உறவுகளை தவிர மக்கள் என்ற வகையில் தங்கள் உறவுகளுக்கு இறுதி யுத்தத்தில் சரணடைந்த உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்று தெரியாமல் திண்டாடிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அரசாங்கத்தின் இவ்வாறான ஒரு அறிவித்தலானது இனப்படுகொலை என்று கூறி உண்மைத்தன்மையோடு வெளிவர வேண்டிய இந்த சந்தர்ப்பங்கள் அரசாங்கத்தினால் மூடி மறைக்கப்படுகின்றதா என்ற கேள்வி மக்களிடத்தில் எழுகின்றது.

தயவு செய்து உண்மைத் தன்மையோடு செயற்படுத்துங்கள். சட்டத்தின் ஆட்சியை நடத்துங்கள். வெளிப்படைத் தன்மையை மக்களோடு பேணுங்கள். இந்த வகையில் நடந்தால் உங்கள் நடவடிக்கைகள் அத்துமீறிய இனப்படுகொலையை செய்ததற்கான சாட்சியாக கூட அமையும் - என்றார். (அ)

## புதிய...

சி.டி.விக்ரமரத்னவின் நியமனம், அரசியலமைப்புக்கு முரணானது என எதிர்க்கட்சிகளும், சிவில் அமைப்புகளும் குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளன.

ஆனால், ஜனாதிபதிக்கு அரசியலமைப்பு ரீதியாக உள்ள அதிகாரத்தின் பிரகாரம்தான் சேவை நீடிப்பை வழங்கினார் என சபாநாயகர் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

என்றாலும், இந்த விவகாரத்தில் ஜனாதிபதிக்கும் சட்டவாக்க சபைக்கும் இடையில் சர்ச்சைக்குரிய சூழ்நிலை உருவாகியுள்ளதால் புதிய பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் வாரம் புதிய பொலிஸ்மா அதிபரை நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அரசதரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது பொலிஸ் திணைக்களத்தில் உள்ள மூன்று மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் இடையே இந்தப் பதவிக்காக கடும் போட்டிநிலை ஏற்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது. (அ)

## நவம்பர் 12...

சமர்ப்பிக்கப்பட உள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு தொடர்பான விவாதம் நவம்பர் 14ஆம் திகதி முதல் 7 நாட்களுக்கு நடைபெறவுள்ளதுடன் அது தொடர்பான வாக்கெடுப்பு எதிர்வரும் 21ஆம் திகதி மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் தொடர்பான குழு நிலை விவாதம் நவம்பர் 22ஆம் திகதி முதல் 19 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

வரவு-செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்குப்பதிவு டிசம்பர் 13ஆம் திகதி மாலை 6 மணிக்கு நடைபெற உள்ளது.

அடுத்த ஆண்டு தேர்தல் ஆண்டாக இருப்பதால் மக்களை கவரும் வகையில் பல்வேறு அறிவிப்புகளை ஜனாதிபதி வெளியிட உள்ளார்.

குறிப்பாக வாகன இறக்குமதிக்கான கட்டுப்பாடுகளை நீக்கும் அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோன்று மக்களுக்கு சில மானியங்களை வழங்கும் அறிவிப்புகளையும் ஜனாதிபதி வெளியிட உள்ளதாக அரசதரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. (அ)

## ஆதிவாசிகள்...

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியொன்றில் ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னிலஅத்தோ தலைமையிலான குழுவினருக்கான வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

இரண்டு நாட்கள் யாழ்ப்பானத்தில் தங்கியிருக்கும் இவர்கள் பல்வேறு இடங்களுக்கும் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கட்சியை...

கொழும்பு சுகததாச விளையாட்டரங்களில் நடைபெற்றது. இதில் வரவேற்புயை நிகழ்த்துகையிலேயே ரவி கருணாநாயக்க இவ்வாறு கூறினார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைய காத்திருக்கும் இளைஞர்களுக்கும் அவர் அழைப்பு விடுத்தார்.

நாடு தொடர்பில் சிந்தித்து முக்கியமான முடிவுகளை எடுக்க போய்தான் ஐக்கிய தேசியக் கட்சி பின்னடைவை சந்தித்தது, ஆனால் ஐ.தே.கவின் முடிவுகள் சரி என்பதை மக்கள் இன்று ஏற்றுள்ளனர். ரணில் விக்கிரமசிங்கவால்தான் இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும் எனவும் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டார். (அ)

## பலஸ்தீனத்துக்கு...

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் யாழ் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இஸ்ரேலின் தொடர்ச்சியான நில ஆக்கிரமிப்பினால் பலஸ்தீன மக்கள் மேற்கு கரையிலும் காஸாவிலும் சுருக்கப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் அரசினதும் அதன் மேற்குலக கூட்டாளி நாடுகளினதும் அரசியல் பொருளாதார நலன்களுக்காக காஸா மக்கள் பலியாக்கப்பட்டுவருகின்றனர்.

குறிப்பாக குழந்தைகளும், பெண்களும் அதிகமாகக் கொல்லப்பட்டுள்ளனர். இத்தகைய மக்களுக்கு எதிரான கொடூர தாக்குதலைக் கண்டிக்கின்றோம் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவித்தனர்.

இதன்போது பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பொது அமைப்புகள், சிவில் சமூகத்தினர் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு செலவாகும் பணம் முற்றிலும் வீணானது!

## மூத்த அதிகாரி ஒருவர் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, ஒக். 22

**இலங்கை மின்சார சபையின் 23,000 இற்கும் அதிகமான ஊழியர்கள் மற்றும் வெளி நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட ஊழியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் பணி நடைபெறாத காரணத்தினால் அவர்களுக்காக செலவழிக்கப்படும் பணம் முற்றிலும் வீணானது என மின்சார சபையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.**

**குறித்த செலவை அமைச்சினால் தாங்க முடியாது என்றும் அவர் கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இவ்வளவு அதிக எண்ணிக்கையிலான பணியாளர்கள் பணிபுரிந்தாலும் அவர்களின் செயல்திறன் குறித்து பல சிக்கல்கள் உள்ளன.

மின்சார சபையின் இவ்வளவு பெரிய ஊழியர்களை பராமரிப்பதற்கு அமைச்சு மாதாந்த செலவு செய்தமையே மின்சாரக் கட்டண உயர்வை மறைமுகமாகப் பாதித்துள்ளது.

பெரும்பாலான ஊழியர்கள் தேவையில்லாத இடங்களில் கடமைகளைச் செய்ய நியமிக்கப்படுகின்ற நிலையில் அத்தகைய ஊழியர்களிடமிருந்து சபை எதிர்பார்க்கும் கடமைத் திறனைப் பெற முடியாது.

பணியாளர்களை சரியான முறையில் பயன்படுத்தினால் அதிக எண்ணிக்கையிலான பணியாளர்கள் தேவையில்லை.

23,000 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் இருந்தாலும் பெரும்பாலான பணிகள் மற்ற மூன்றாம் தரப்பினரிடம் இருந்து பெறப்பட்ட ஊழியர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

நிறுவனத்தில் அதிக பணியாளர்கள் இருக்கும்போது, ஆண்டுதோறும் வெளி நிறுவனங்களில் இருந்து பணியாளர்களை அழைத்து வந்து அவர்களுக்கு சம்பளம் வழங்குவது பெரும் பிரச்னையாக உள்ளது.

ஒவ்வொரு மாதமும் இதே முறையில் இப்பணி நடைபெற்று வருகிறது.

செலவு முகாமைத்துவம் தொடர்பில் அமைச்சு பல தடவைகள் அறிவுறுத்தல்களை வழங்கிய போதிலும், அதற்கான தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதற்கு இது வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை - என்றார். (அ)

# சாவகச்சேரியில் கிளைமோர் மீட்பு!



யாழ்ப்பாணம், ஒக். 22

தென்மராட்சி பிரதேசத்தில் இரு கிளைமோர் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

தென்மராட்சி சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலுக்கும் பொருளாதார மத்திய நிலையத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் வீதியில் இருந்து சுமார் 15 மீற்றர் தொலைவில் வயல் பகுதியில் இரு கிளைமோர் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் கூறினர்.

பழைய இரும்பு சேகரிக்கும் வியாபாரி ஒருவர் இதனை கண்டு வழங்கிய தகவலின் அடிப்படையில் சாவகச்சேரி பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டு விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அருகில் நீரோடும் பகுதி காணப்படுகிறது. நீரில் அடித்து வரப்பட்டதா அல்லது யாரேனும் அவற்றை கொண்டு வந்தார்களா என்பது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# இஸ்ரேல் விவசாயத்துறையில் இலங்கையர்களுக்கு வேலை!



கொழும்பு, ஒக். 22

இஸ்ரேல் விவசாயத் துறையில் ஆயிரக்கணக்கான புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், அந்நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைமையை மதிப்பிட்டதன் பின்னர், குறித்த வேலை வாய்ப்புகளுக்கு இலங்கை பணியாளர்களை பணியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இஸ்ரேலில் நடந்த மோதலில் உயிரிழந்த அனைத்து தொழிலாளர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

இலங்கை தொழிலாளர்களும் உயிரிழந்துள்ளனர் என எங்களுக்கு அறியக் கிடைத்தது.

அதற்காக நாங்கள் வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், சிரமத்தில் உள்ளவர்கள் இருப்பின் அவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன.

இஸ்ரேலுக்கு வேலைக்குச் செல்ல தயாராக உள்ளவர்களை அவர்களின் விருப்பத்தின் பேரில் அனுப்ப தேவையான ஏற்பாடுகளை செய்து வருகிறோம்.

இஸ்ரேல் அரசுடன் நீண்ட நாட்களாக பேச்சுவார்த்தை நடத்தி விவசாய துறையில் 1000 வேலை வாய்ப்புகளை பெற்றுள்ளோம். பாதுகாப்பு நிலவரத்தைப் பார்த்து அவர்களைப் பரிந்துரைப்போம்-என்றார். (அ)

# இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட 21 வைத்தியசாலைப் பணியாளர்களுக்கு அஞ்சலி!





யாழ்ப்பானம், ஒக். 22

இந்திய இராணுவத்தினரால் சுட்டு படுகொலை செய்யப்பட்ட யாழ் போதனா வைத்தியசாலை பணியாளர்களின் 36 ஆவது நினைவு தினம் நேற்று நினைவு கூரப்பட்டது.

1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவம் யாழ். போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்து வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியசாலைப் பணியாளர்கள் 21 பேர் உள்ளிட்ட 68 பேரை சுட்டு படுகொலை செய்தது. இதில் பலரும் காயமடைந்தனர்.

சுட்டுக்கொல்லப்பட்டவர்களின் 36 ஆவது நினைவு தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று நினைவு கூரப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட



வர்களின் உறவினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நினைவேந்தலின்போது பொதுச்சுடர் ஏற்றப்பட்டு உயிரிழந்தோருக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு உயிரிழந்தவர்களின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (அ)

# அவுஸ்திரேலியாவில் பெரும் தொகை பணத்தை மோசடி செய்த இலங்கையர்

கான்பரா, ஒக். 22

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கையர் ஒருவர் தனது பணியிடத்தில் பணத்தை மோசடி செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நவிஷ்ட டி சில்வா என்ற 36 வயதுடைய நபருக்கு எதிராகவே இந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. 250,000 டொலர்களை அவர் மோசடி செய்துள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருடப்பட்ட பணம் சர்வதேச கிரிக்கெட் வீரர்களை அவுஸ்திரேலியாவுக்கு வரவழைத்து அவர்களது விளையாட்டுக் கழகத்தில் விளையாடப் பயன்படுத்தப்பட்டது தான் இந்தச் சம்பவத்தின் விசேட அம்சமாகும்.

எவ்வாறாயினும், இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளதாக அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, அவர் தனது விளையாட்டுக் கழகத்தில் சேர்த்துக்கொண்ட கிரிக்கெட் நட்சத்திரங்களில் இலங்கையின் திலகரத்ன டில்ஷான், லஹிரு திரிமான்ன, மேற்கிந்திய தீவுகளின் கிறிஸ் கெய்ல் மற்றும் பாகிஸ்தான் வீரர் சொகைப் மாலிக் ஆகியோர் அடங்குவதாக ஊடகங்கள் மேலும் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நபரின் சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து வீரர்கள் அறிந்திருக்கவில்லை என்ற மேலதிக உண்மைகள் நீதிமன்றத்தில் வெளியாகியுள்ளன.


அத்துடன், டில்ஷானுக்குச் சொந்தமான விளையாட்டு நிறுவனம் ஒன்றின் கணக்கில் 37,250 டொலர்களும், இலங்கை வீரர் லஹிரு திரிமன்னவின் கணக்கில் 5,800 டொலர்களும், பெயர் குறிப்பிடப்படாத ஏனைய வீரர்களுக்கு 28,950 டொலர்களும் அவர் செலுத்தியுள்ளதாக நீதிமன்றில் தெரியவந்துள்ளது.

சொத்துக்குவிப்பு குற்றச்சாட்டில் குற்றத்தை ஒப்புக்கொண்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நவிஷ்ட டி சில்வாவுக்கு தண்டனை வழங்கப்படவுள்ளதாக அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சாந்தா அக்கா!

வ.ந.கிரிதரன்



‘டேய் கேசவா, சாந்தா அக்கா செத்துப் போய்விட்டாவாம். தெரியுமா?’

சின்னம்மா வாட்ஸ் அப்பில் செய்தி அனுப்பியிருந்தார். அவர் என் அம்மாவின் கடைசிச் சகோதரி. இன்னும் உயிருடனிருக்கும் சகோதரி. வயது எண்பதைத்தாண்டி விட்டது. பார்த்தால் ஐம்பதைத்தாண்டாத தோற்றம். மனுசி இன்னும் காலையில் ஒரு மணி நேரம் நடை , யோகா , மரக்கறிச் சாப்பாடு, நிறைய பழங்கள் என்று வாழும் மனுசி.

‘என்ன சின்னம்மா, சாந்தா அக்கா செத்துப் போய் விட்டாவா? எப்ப சின்னம்மா?’

“இன்றைக்குத்தான் விடிய ஜேர்மனியிலை போய்விட்டாவாம்.”

“என்ன அவ ஜேர்மனியிலையா இருந்தவா? இவ்வளவு நாளும் நான் நினைச்சுக் கொண்டிருக்கிறன் அவ ஊரிலைத்தான் இன்னும் இருக்கிறா என்று. அவ எப்ப ஜேர்மனிக்குப் போனவா சின்னமா?”

“அட உனக்கு விசயமே தெரியாதா? அவ ஜேர்மனிக்கு எயிட்டியிலேயே போய் விட்டாவே”

‘அப்படியா சின்னம்மா, எனக்கு உண்மையிலேயே அவ ஜேர்மனிக்குப் போன விசயம் தெரியாது.”

சாந்தா அக்காவின் பற்றிய நினைவுப் பறவைகள் சிறகு விரிக்கின்றன. சாந்தா அக்கா லலிதா அக்காவின் நெருங்கிய சிநேகிதி. லலிதா என் ஒன்று விட்ட அக்கா. அவவுடைய பதின்ம வயதுகளிலை அவவைச் சுற்றி எப்போதும் சிநேகிதிகள் பட்டாளமொன்று சூழந்திருக்கும். நானோ பால்யத்தின் இறுதிக்கட்டத்தில் நின்ற சமயம். அக்காவின் சிநேகிதிகள் பலரையும் அவரவர் வீட்டுக்குக் கொண்டு சேர்க்கும் ‘பொடி கார்ட்’ வேலை அதாவது பாதுகாவலன் வேலை என்னுடையதாகவிருக்கும். அவர்கள் சில வேளைகளில் நகரத்துத் திரையரங்குகளில் மாட்னி ஷோ பார்த்து வருவார்கள். லலிதா அக்காவுடன் அக்கா வீட்டுக்கு வந்து ஆடிப்பாடிச் செல்வார்கள். அவ்விதம் செல்கையில் மாறி மாறி ஒவ்வொருவரையும் அவரவர் வீட்டுக்குக் கொண்டு சேர்க்க வேண்டும். இவை தவிர யாழ் பொது நூலகத்துக்குச் சில சமயங்களில் லலிதா அக்காவும் சாந்தா அக்காவும் செல்வார்கள். அப்போதெல்லாம் என்னையும் துணைக்கு அழைத்துச் செல்வார்கள். நானோ விரைவாக நடையைக் கட்டுவேன். அவர்களால் என் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாது. மூச்சிரைக்க என் வேகத்தைப் பிடிப்பதற்காக ஓட்டமும் நடையுமாக வருவார்கள். ‘இவனோடை நடக்க ஏலாது. ஏன்டா இப்பிடி நடக்கிறாய். கொஞ்சம் ஸ்லோவாக நடடா’ என்று லலிதா அக்கா அவ்வேளைகளில் கெஞ்சுவா. நானோ அவவின் கெஞ்சலைப் பொருட்படுத்தாமல் வேகத்தை இன்னும் சிறிது அதிகரித்து நடையைப் போடுவேன். அதைப் பார்த்து சாந்தா அக்கா இலேசாகச் சிரிப்பா. அவ அவ்விதம் இதழோரத்தில் சிரித்தபடி என்னைப் பார்க்கும் தோற்றம் இன்னும் பசுமையாக என் நெஞ்சிலை இருக்குது.

இவர்களில் சாந்தா அக்கா என்னைப் பொறுத்தவரையில் தனித்துத் தெரிந்தா. அவவுக்கு நான் ஒரு புத்தக்கப் புழு என்பது நன்கு தெரியும். அவவும் ஒரு வகையில் புத்தக்கப்புழுதான். கூடவே கதை எழுதும் திறமையும் அவவிடமிருந்தது. இதனால் எனக்கு அவவை வீட்டுக் கொண்டு போறதென்றால் நல்ல விருப்பம். முக்கிய காரணம் அவவை வீட்டுக்கும் கொண்டு போற சமயங்களில் அவவிடமிருந்து ஏதவாது புத்தகமொன்றை வாசிப்பதற்குத் தருவா. அதற்காகவே அவவுக்குப் பாதுகாவலாகச் செல்வதை நான் எதிர்பார்த்து விரும்பிச் செய்தேன்.

சாந்தா அக்கா கல்கி, குமுதம், விகடன், கல்கண்டு, ராணி போன்ற சஞ்சிகைகளில் வெளியான தொடர்கதைகள் பலவற்றை அழகாக பைண்டு செய்து வைத்திருந்தா. ஒருமுறை அவவிடமிருந்து அரு.ராமநாதனின் ‘குண்டு மல்லிகை’ யை எடுத்து வந்து வாசித்தேன். குண்டு மல்லிகை என்றதும் எனக்கு எப்பொழுதும் சாந்தா அக்காவின்ற நினைவுதான் தோன்றும்.அவவும் ஒரு வகையில் குண்டு மல்லிகைதான். சிறிது பருமனான, நடிகை குஷ்பு போன்ற உடல் வாகு. செந்தளிப்பான முகத்தில் இரு பெரிய அழகான வட்டக் கருவிழிகள். எப்பொழுதும் புன்னகை தவழும் வதனம். இருக்குமிடத்தைக் கலகலப்பாக்கிக்கொண்டிருக்கும் ஆளுமை. இதனால் லலிதா அக்காவுக்கும் அவ மேல் அதிகப் பிரியம் இருந்தது.

சாந்தா அக்கா இலங்கைத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவைக்கு அடிக்கடி இசையும் , கதையும் எழுதி அனுப்பிக்கொண்டிருந்தா. அவவின்ற கதைகள் பல ஒலிபரப்பப்பட்டன. நானும் சிலவற்றைக் கேட்டிருக்கின்றன். அவவின்ற வயதுக்கேற்ற காதல் கதைகளே அவை.

ஒரு சமயம் அக்கா அவவை வீட்டுக்குக் கொண்டு விடேக்கை தான் எழுதி வைத்திருந்த எடுத்து வாசிக்கத் தந்தா. என்ன அழகான கையெழுத்து! சாந்தா அக்காவின் கையெழுத்தும் அவவைப் போல் அழகானதுதானென்று அச்சமயம் எண்ணிக்கொண்டேன். அவ்விதம் அச்சமயத்தில் எண்ணிக்கொண்டதும் இன்னும் என் நெஞ்சில் இருப்பதை இத்தருணத்தில் உணர்கின்றேன்.

சில சமயங்களில் இவ்விதம் அடிக்கடி சாந்தா அக்காவை அவவின்ற வீடு வரை கூட்டிச் செல்வது எனக்குச் சிரமமாகவிருக்கும். வேறு ஏதாவது எனக்குப் பிடித்த விடயங்களில் ஈடுபட்டிருக்கும் தருணமொன்றாக அந்நேரம் இருக்கும். அவ்விதமான சமயங்களில் நான் அவவைக் கூட்டிச்செல்வதற்கு எனக்கு விருப்பமில்லாதிருக்கும். அவ்விதமான சமயங்களில் என் மனநிலையை மாற்றுவதற்குச் சாந்தா அக்கா ஒரு தந்திரம் செய்வா. அக்காலகட்டட்த்தில் நான் சாண்டியல்யனின் ‘கடல் புறா’ நாவலைத் தேடி அலைந்துகொண்டிருந்தேன். யாழ் நூலகத்தில் நாவலின் மூன்று பாகங்களுமிருந்தன. ஆனால் அதற்கான ‘டிமாண்ட்’ அதிகமாகவிருந்ததால் அதற்காகப் பதிவு செய்து வைத்திருப்பவர்களுக்கே முன்னுரிமை. நானும் பதிவு செய்திருந்தேன். இரண்டு வருடங்களாகியும் கிடைத்த பாடில்லை. இதனால் அது என் கைக்கெட்டாத தூரத்தில் இருந்ததால் அதன் மீதான வெறியும் எனக்கு அதிகமாகிக்கொண்டே சென்றது. அதன் முதலிரு அத்தியாயங்களைப் பழைய குமுதம் இதழ்களில் பார்த்ததிலிருந்து, அவற்றுக்கான ஓவியர் லதாவின் இளைய பல்லவனின் ஓவியங்களைப் பார்த்ததிலிருந்து வெறி இன்னும் அதிகமாகிக்கொண்டே சென்றது. நகரிலிருந்த புத்தகக்கடையொன்றின் ‘ஷோகேசில்’ மூன்று பாகங்களுமிருந்தன. ஆனால் அவற்றை வாங்கும் நிலையில் நானில்லை. அப்போது அத்தொகுதியின் விலை ரூபா 115. அது எனக்குப் பெரிய தொகையாகவிருந்தது.

கடல்புறா மீதான எனது ஆர்வத்தைச் சாந்தா அக்கா அறிந்து வைத்திருந்தார். அதற்காக அவர் கூறுவார் ‘கேசவா, வீடு மட்டும் வாறியா. கட்டாயம் உனக்கு என்ர மாமியிடமிருக்கும் கடல் புறாவை வாங்கித்தருவன்.”

“என்ன? உங்கள் மாமியிடம் கடல் புறா இருக்குதா?”

“ஓமடா. சித்தங்கேணி மாமியிடம் இருக்குது. அவவிட்ட கடல்புறா மூன்றுபாகங்களும் குமுதத்திலை வந்தது இருக்கு. வடிவாக் கட்டி வைத்திருக்கிறா. வடிவான படங்களுடன் இருக்கு.” என்பார்.

எனக்கோ கடல்புறாவை உடனடியாக வாசிக்க வேண்டும்போலிருக்கும்,

“கட்டாயம் அடுத்த கிழமை அவவிடமிருந்து எடுத்த வாறன்” என்பார். ஆனால் இறுதிவரை அவர் கடல் புறாவைச் சித்தங்கேணி மாமியிடமிருந்து எடுத்து வந்ததேயில்லை. என் ஆசையும் நிறைவேறினதேயில்லை. ஆனால் கடல் புறாவை காரணம் காட்டியே அவரை அவர் வீடு மட்டும் பல தடவைகள் கொண்டுபோய் விட்டிருப்பேன்.

இப்பொழுதும் சாந்தா அக்காவை நினைத்ததும் முதலில் நினைவுக்கு வருவது என் பால்ய பருவத்தில் சாந்தா அக்கா கடல் புறாவைக் காரணம் காட்டி என்னை ஏமாற்றியதுதான். அந்த சாந்தா அக்காதான் இப்போது போய்விட்டதாகச் சின்னம்மா கூறுகின்றா.

நான் பால்ய பருவத்திலிருந்து பதின்ம வயதுக்குள் அடியெடுத்து வைக்கும் போது லலிதா அக்கா கனடா சென்று விட்டா. அவ கனடா சென்றதுமே அவவு டைய சிநேகிதிகளைக் காண்தும் குறைந்து விட்டது. அவ்வப்போது சாந்தா அக்காவை வீதிகளில் காணும் போது சிரித்தபடியே ‘இப்படி எப்படியடா இருக்கிறாய் கேசவா’ என்பார். பதிலுக்கு நண்பர்களுடன் நகரிலில் ‘சுழட்’டித் திரியும் நானும் ‘நல்லாயிருக்கிறன் சாந்தா அக்கா” என்று கத்தியபடியே செல்வேன். இவ்விதமாகக் காலம் சென்று ஓடிக்கொண்டிருக்கையில் ஒரு நாள் வழியில் சாந்தா அக்காவை இன்னுமொரு நடிகரைப்போன்ற இளைஞர் ஒருவருடன் கண்டேன்.

என்னைக் கண்டதும் சாந்தா அக்கா “இங்கை வாடா கேசவா” என்றா.

சைக்கிளில் சென்று கொண்டிருந்த நான் இறங்கி அவ அருகில் சென்றேன்.

“கேசவா, இவர் என்ர ஹஸ்பண்ட்” என்றவ தன் கணவர் பக்கம் திரும்பி “நான் சொல்லுவனே, எங்கட பொடி கார்ட் கேசவனென்று . அவன் இவன் தான். “ என்றா.

பதிலுக்கு ஒரு புன்னகையைத் தவள விட்டார் நடிகர்.

அதுதான் நான் சாந்தா அக்காவைக் கடைசியாகப் பார்த்தது. நாட்டின் நிலைமை கலவரம்,போர்ச்சூழலுக்குள் சென்று விட்டது. அவ பற்றிய நினைப்பே எனக்கு வருவதில்லை. போர் முடிவுக்கு வந்து ஆண்டுகள் பல சென்று விட்ட நிலையில் சாந்தா அக்கா பற்றிச் சின்னம்மா கூறியதும் ஆழ் மனக் குளத்தின் ஆழத்தில் புதையுண்டு கிடந்த சிந்தனை மீன்கள் மீண்டும் மீளுயிர் பெற்று எழுந்து வந்து நீச்சலடிக்கத் தொடங்கின. சாந்தா அக்கா பற்றிய நினைவுகள் எல்லாம் பசுமையாக மீண்டும் நினைவுக்கு வந்தன. பால்ய பருவத்து அழியாத கோலங்கள் எப்பொழுதும் இன்பம் தருபவை. சாந்த அக்கா பற்றிய நினைவுகளும் அத்தகையவைதாமே.

“டாடி”

என் சின்னவள் அழைத்தாள்.

பதிலுக்கு “ என்னம்மா” என்றேன்.

“டாடி, டோண்ட் ஃபொர்கெட் டு பிக் மி அப் டு நைட்?” என்றாள்.

இன்றைக்கு என் சின்ன மகள் தன் சிநேகிதிகள் சிலருடன் , ‘டொரோண்டோ’மாநகரின் ‘டவுன் டவுனி’லுள்ள இத்தாலிய உணவகமொன்றுக்குச் செல்கிறாள். அவளைப் போய் பாதுகாப்பாக அழைத்து வரவேண்டும். அதைத்தான் அவள் நினைவூட்டுகின்றாள்.

எனக்குப் பால்ய பருவத்தில் சாந்தா அக்காவின் ‘பொடி கார்ட்டா’கச் சென்று திரிந்தது நினைவுக்கு வந்தது. இலேசானதொரு புன்னகையும் முகத்தில் படர்ந்தது. எதற்காக அப்பா இப்படிப் புன்னகைக்கின்றார் என்பது தெரியாமல் சிறிது வியப்புடன் நோக்கினாள் என் இளைய மகள்.

girinav@gmail.com

திரைப்படம் - லியோ
இயக்கம் - லோகேஷ் கனகராஜ்
இசை - அநிருத்
நடிப்பு - விஜய், த்ரிஷா, சஞ்சய் தத், அர்ஜுன்




தமிழ் திரையுலகில் நடிகர்கள் அவர்களின் நிஜ வயதுக்குரிய கதாபாத்திரங்களில் அதிகமாக நடிக்க மாட்டார்கள். ஐம்பது வயதைக் கடந்த நாயகனாக இருந்தாலும் கல்லூரிக்கு போகும் நாயகியை காதலித்த பல படங்களைப் பார்த்திருக்கிறோம். முன்னணி நடிகரான ரஜினிகாந்த் கடந்த சில படங்களாக அவருடைய வயதுக்குரிய கதாபாத்திரங்களில் நடித்து வருகிறார். அதைத் தற்போது விஜயும் தொடர்கிறார். ஒரு டூயட் பாடல் இல்லாமல், ஒரு நாயக அறிமுகப் பாடல் இல்லாமல் விஜய் படத்தைப் பார்ப்பது நிச்சயமாக வித்தியாசமாக உள்ளது. இதை, இனி வரும் காலங்களிலும் விஜய் தொடர்ந்தால் அவருக்கும் நல்லது.

தனது முந்தைய படங்களில் போதைப் பொருட்களை மையப்படுத்திய கதையாகக் கொடுப்பது இயக்குநர் லோகேஷ் கனகராஜின் வழக்கமாக இருந்தது. இந்தப் படத்திலும் அப்படித்தான் கொடுத்திருப்பார் என்று எதிர்பார்த்தால் அதை ஒரே ஒரு காட்சியுடன் நிறுத்தி விட்டார். ஒரு குடும்ப பாசக் கதைதான் முழு படமும். இப்படிப்பட்ட ஒரு படத்தின் ட்ரெய்லரில் அப்படியான ஒரு 'கெட்ட' வார்த்தையை எதற்காக வைத்தார் என படம் பார்க்கும் போது யோசிக்க வைக்கிறது.


இமாச்சல பிரதேசத்தில் தியோக் என்ற இடத்தில் ஒரு கோப்பி ஷொப் நடத்தி வருகிறார் விஜய். மனைவி த்ரிஷா, மகன் மேத்யு தாமஸ், ஒரு மகள் என அன்பான குடும்பம். அவருடைய கடைக்கு வந்து தகராறு செய்யும் சிலரை கொல்கிறார். சீக்கிரமே விடுதலையாகி வரும் விஜயைத் அவரை தேடி சிலர் வந்து மீண்டும் பிரச்னை செய்கிறார்கள். சஞ்சய் தத்தும் விஜயைத் தேடி வந்து அவரைத் தன் மகன் 'லியோ' என்கிறார். ஆனால், விஜய் தன்னுடைய பெயர் பார்த்தீபன் என அமைதியாகப் பேசி அனுப்புகிறார். கணவர் விஜய் மீது சந்தேகப்படும் த்ரிஷாவும் அவர் யார் என்பதை விசாரிக்க ஆரம்பிக்கிறார். பார்த்தீபன் யார், லியோ யார் என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

வித்தியாசமான தலை அலங்காரம், கொஞ்சம் நரைத்த தாடி, மீசை என நடுத்தர வயது அப்பா கதாபாத்திரத்தில் விஜய். அப்படியிருந்தால் அவரின் ரசிகர்களைத் திருப்திப்படுத்த முடியாது என்பதற்காக பின்னணி கதையில் ஓர் இளமையான அதிரடியான வில்லத்தனமான விஜயைக் காட்டி சரி செய்திருக்கிறார்கள். விஜய் படம் என்றாலே சண்டைக்குக் குறைவிருக்காது, இந்தப் படத்திலும் அப்படியே. அதோடு உணர்ச்சிகரமான காட்சிகளிலும் அசத்துகிறார். தன்னை ஏன் லியோ, லியோ எனத் தேடி வருகிறார்கள் என த்ரிஷாவிடம் அழும் காட்சியில் அனுதாபத்தை அள்ளிக் கொள்கிறார்.

இப்படி ஓர் அம்மா கதாபாத்திரத்தில் நடிக்க த்ரிஷா சம்மதித்திருப்பது ஆச்சரியம்தான். நீண்ட இடைவெளிக்கு பிறகு விஜய்யுடன் இணைவதால் நடிக்க சம்மதித்திருப்பார் போலிருக்கிறது. இருந்தாலும் அந்த முத்தக் காட்சிகள் எல்லாம் ஓவர்.

படத்தின் இரண்டு முக்கிய வில்லன்களாக சஞ்சய் தத், அர்ஜுன். இடைவேளைக்கு சற்று முன்பாகத்தான் அவர்களின் கதாபாத்திரங்கள் வருகின்றன. இருப்பினும் அர்ஜுனை விட சஞ்சய் தத் அழுத்தமாக நடித்திருக்கிறார். மிஷ்கின், சாண்டி கதாபாத்திரங்கள் படத்தின் ஆரம்பத்திலேயே வரும் தேவையற்ற கதாபாத்திரங்கள். விஜயின் குடும்ப நண்பராக வன பாதுகாப்பு அதிகாரியாக கௌதம் மேனன், அவரது மனைவியாக பிரியா ஆனந்த்.

அநிருத் இசையில் 'நா ரெடிதான்' பாடல் மட்டுமே ரசிக்க வைக்கிறது. பின்னணி இசையில் கூடுதல் கவனம் செலுத்தியிருக்கிறார். மனோஜ் பரமஹம்சா




ஒளிப்பதிவும் படத்திற்குப் பலம்.

படத்தின் ஆரம்ப பத்து நிமிடங்களைத் தவறாமல் பாருங்கள் என்றார் இயக்குநர் லோகேஷ். அந்த பத்து நிமிடங்கள் மட்டுமல்ல முதல் அரை மணி நேரக் கதையை தூக்கிவிட்டால்கூட படத்துக்கு எந்த பாதிப்பும் இருக்காது. அந்த 'ஹைனா'வைப் பிடிக்கும் காட்சி, மிஷ்கின் சம்பந்தப்பட்ட காட்சிகள் பொறுமையை சோதிக்கின்றன. பின்கதை காட்சிகள் எல்லாம் வழக்கமான தமிழ் சினிமா 'டெம்ப்ளேட்'தான். ஆனால், மூடநம்பிக்கைக்காக தனது மகளையே கொலை செய்யத் துடிக்கும் அப்பா கதாபாத்திரத்தை என்னவென்று சொல்வது ?. இடைவேளைக்குப் பின் இருக்கும் திரைக்கதைதான் படத்தைக் காப்பாற்றியிருக்கிறது.

லோகேஷ் கனகராஜின் முந்தைய படமான 'விக்ரம்' படத்துடன் ஒப்பிடும் போது இதில் 'ஸ்கிரிப்ட்'ன் வேகம், அழுத்தம் குறைவே.

# இலங்கை தமிழராக சசி

நடிகரும் இயக்குநருமான சசிகுமார் நடிப்பில் இறுதியாக வெளியான, 'அயோத்தி' திரைப்படம் அவருக்கு நல்ல படமாக அமைந்ததுடன் நீண்ட கழித்து வசூல் ரீதியான வெற்றியையும் பெற்றார்.

அடுத்ததாக, இணையத் தொடரையும் இயக்கவுள்ளார். இந்நிலையில், இயக்குநர் சத்யசிவா இயக்கத்தில் சசிகுமார் நடித்து வரும் புதிய படத்தின் பணிகள் கிட்டத்தட்ட முடிந்துவிட்டன என்று இயக்குநர் தெரிவித்துள்ளார்.

பெயர் வைக்கப்படாத இப்படத்தில் இலங்கை தமிழராக சசிகுமார் நடிக்கிறார். 1950 - 1980 இடைப்பட்ட காலத்தில் நடைபெறும் கதை என்பதால் மூன்று தோற்றங்களில் சசிகுமார் நடித்திருக்கிறாராம்.

இப்படத்தில் லிஜோ மோல் ஜோஸ், சுதேவ் நாயர், போஸ் வெங்கட் உள்ளிட்டோர் நடித்து வருகின்றனர்.





# மிருணாளின் முத்தம்

'சீதா ராமம்' படத்தில் பிரபலமான நடிகை மிருணாள் தாக்கூர், தெலுங்கு, ஹிந்தியில் நடிக்கிறார். இணைய தொடரிலும் கவர்ச்சி யாக நடிக்கிறார். தற்போது நானி உடன் 'ஹாய் நான்னா' என்ற தெலுங்கு படத்தில் நடித்துள்ளார். சமீபத்தில் இதன் டீசர் வெளி யானது. அதிலும் உதட்டு முத்தக்காட்சியிலும் நடித்து இருந்தார். இந்த படம் தமிழ் உள்ளிட்ட மொழிகளிலும் வெளியாக உள்ளது.

# தீபாவளி படங்கள்

தீபாவளி பண்டிகைக்கு ஒவ்வொரு வருடமும் முன்னணி நடிகர்களின் திரைப்படங்கள் வெளியாவது வழக்கம். இந்த வருடம் ரஜினி, கமல், விஜய், அஜித் ஆகிய முன்னிலை நாயகர்களின் படங்கள் தீபாவளிக்கு வெளியாகவில்லை.

இருந்தாலும் ராஜு முருகன் இயக்கத்தில் கார்த்தி, அனு இமானுவேல் நடிக்கும் 'ஜப்பான்', கார்த்திக் சுப்புராஜின் 'ஜிகர்தண்டா 2', விக்ரம் பிரபுவின் 'ரெய்டு' ஆகிய படங்கள் வெளியாகவுள்ளன. இதற்கிடையே அறிமுக இயக்குநர் ரா.வெங்கட் இயக்கத்தில் உருவாகியுள்ள 'கிடா' படமும் தீபாவளிக்கு வெளியாக இருக்கிறது. இதில் பூ ராமு, காளிவெங்கட், மாஸ்டர் தீபன், பாண்டியம்மா, லோகி, கமலி




ஆகியோர் நடித்துள்ளனர். நடிகை தமன்னா மலையாளத்தில் முதன் முறையாக நடித்துள்ள 'பாந்த்ரா' படமும் தீபா வளி அன்று வெளியாக இருப்பதாக கூறப்படுகிறது. இதில் திலீப் ஹீரோவாக நடித்துள்ளார்.

# அஜித்துடன் பிரியா



நடிகர் அஜித்குமார் "விடாமுயற்சி" படத்தில் நடித்து வருகிறார். இதனை மகிழ்திருமேனி இயக்குகிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு துபாயில் உள்ள அஜர்பைஜான் நாட்டில் கடந்த சில வாரங்களாக நடைபெற்று வருகிறது.

இதில் த்ரிஷா, ரெஜினா கசண்ட்ரா ஆகியோர் கதாநாயகிகளாக நடிக்கின்றனர் என தகவல்கள் வெளியானதை தொடர்ந்து இப்போது இப்படத்தில் மூன்றாவது கதாநாயகியாக நடிகை பிரியா பவானி சங்கர் இணைந்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

சமீபத்தில் தனுஷ், சிம்பு ஆகிய முன்னனி நடிகர்களுடன் இணைந்து நடித்ததை தொடர்ந்து இப்போது அஜித்துடன் இணைந்து நடிக்க போகிறார் பிரியா பவானி சங்கர்.



# அஜித்துடன் நடிக்க மறுப்பு

தமிழ் திரையுலகின் நாயகர்களுக்கு அடுத்தபடியாக முக்கியமான வேடங்களில் நடிக்கவோ அல்லது வில்லனாக நடிக்கவோ மற்ற மொழிகளில் இருந்து நடிகர்களை அழைத்து வரும் போக்கு அதிகரித்து வருகிறது. மற்ற மொழி நடிகர்களும் இவ்வாறான தமிழ் படங்களில் நடிக்க ஆர்வம் காட்டி வருகின்றனர். இதற்கு சமீபத்திய உதாரணமாக ஜெயிலர் படத்தில் வெறும் பத்து நிமிட காட்சிகள் மட்டுமே வந்து செல்லும் நடிகர் சிவராஜ் குமாருக்கு மிகப்பெரிய வரவேற்பு கிடைத்ததை சொல்லலாம்.

ஜெயிலர் படத்தை தொடர்ந்து கேப்டன் மில்லர், அடுத்து தெலுங்கில் ஒரு படம் என சிவராஜ்குமார் மற்ற மொழிகளில் நடிக்க தொடர்ந்து ஆர்வம் காட்டி வருகிறார். ஆனால் ஆறு வருடங்களுக்கு முன்பே தமிழில் அஜித் படத்தில் முக்கிய வேடத்தில் நடிக்க அழைப்பு வந்தபோது அதை ஏற்க மறுத்துவிட்டார் சிவராஜ் குமார்.



# பாகிஸ்தான் ரசிகர்கள் என்மீது ஆணி எறிந்தனர்

பாகிஸ்தான் பயணித்து கிரிக்கெட் தொடரில் விளையாடிய போது தன்னை ரசிகர் ஒருவர் இரும்பு ஆணியை எறிந்ததாக முன்னாள் இந்திய சகல துறை வீரர் இர்பான் பதான் தெரிவித்துள்ளார்.

கடந்த 14ஆம் திகதி இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டியின் போது பாகிஸ்தான் வீரர்களை குறிவைத்து பார்வையாளர்கள் விரும்பத்தகாத செயலில் ஈடுபட்டதாக சர்வதேச கிரிக்கெட் சபையிடம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முறைப்பாடு தெரிவித்தது. இந்த சூழலில் இர்பான் பதான் இதனை தெரிவித்துள்ளார்.

2003 முதல் 2012 வரையில் இந்திய அணிக்காக சர்வதேச கிரிக்கெட் விளையாடியவர் பதான். டெஸ்ட், ஒருநாள் மற்றும் இருபது - 20 வடிவப் போட்டிகளில் விளையாடி 2,821 ஓட்டங்கள் மற்றும் 301 விக்கெட்களை கைப்பற்றி உள்ளார்.

“பாகிஸ்தானின் பெஷாவரில் நாங்கள் போட்டி ஒன்றில் விளையாடிக் கொண்டு இருந்தோம். அப்போது திடீரென ரசிகர் ஒருவர் ஆணியை என் மீது எறிந்தார். அது எனது கண்ணுக்கு கீழே பட்டது. அதை நாங்கள் பெரிது செய்யவில்லை. அவர்களது விருந்தோம்பலை பாராட்டி இருந்தோம். இந்தியாவில் பார்வையாளர்கள் நடந்து கொள்ளும் விதத்தை பிரச்சினையாக மாற்றுவதை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும்” என பதான் தெரிவித்துள்ளார். 2004 மற்றும் 2006 என இரண்டு முறை பாகிஸ்தான் பயணித்து கிரிக்கெட் தொடரில் விளையாயடிய இந்திய அணியில் பதான் இடம் பெற்றிருந்தார்.

# புத்தகம் எழுதும் செரீனா

விளையாட்டிலிருந்து விடைபெற்று விட்ட புகழ்பெற்ற டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் விரைவில் தன் வரலாற்று நூல்கள் இரண்டை எழுதப் போகிறார்.

இதுதொடர்பாக ரேண்டம் ஹவுஸ் பதிப்புக் குழுமத்துடன் செரீனா உடன்பாடு செய்துகொண்டுள்ளார்.

தன்னுடைய தனிப்பட்ட, அந்தரங்கமான நினைவுகளையும் திறந்த மனதுடன் எழுதவிருப்பதாகக் கூறப்படும் இந்த நூலில், குழந்தை பருவ நினைவுகள் தொடங்கி எல்லாவற்றையும் அவர் கூற விருக்கிறார்.

தொடக்க கால ரென்னிஸ் பயிற்சி, அசாதாரணமான தன்னுடைய பயணத்தில் நேரிட்ட தடைகள், பின்னடைவுகள் பற்றியெல்லாமும் தெரிவிக்கவுள்ள இந்த நுலுக்கு இன்னும் தலைப்பிடப்படவில்லை. வெளியீட்டுத் திகதியும் அறிவிக்கப்படவில்லை.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில்தான் செரீனாவுக்கு இரண்டாவது பெண் குழந்தை பிறந்தது.

நீண்ட காலமாக வெற்றி என்பதை மட்டுமே இலக்காக ஓடிக்கொண்டிருந்தேன். கொஞ்சம் அமர்ந்து, வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்க நேரமில்லை என்று குறிப்பிட்டுள்ளார் செரீனா வில்லியம்ஸ்.

இன்னமும் தலைப்பிடப்படாத இரண்டாவது நூலில் பொது வாழ்க்கை அனுபவங்களை, வழக்கறிஞராக, முதலீட்டாளராக, இளம் பெண்களின் ஊக்குவிப்பாளராக எழுதவிருக்கிறார் செரீனா.

42 வயதான செரீனா வில்லியம்ஸ், 2022 அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடருக்கு முன்பாக ஓய்வு பெற்றார்.

ஒற்றையர் ஆட்டங்களில் 23 கிராண்ட் ஸ்லாம் பட்டங்கள், சகோதரி வீனஸ் வில்லியம்ஸுடன் இணைந்து இரட்டையர் ஆட்டங்களில் 14 பட்டங்கள், 4 ஒலிம்பிக் தங்கப் பதக்கங்கள் பெற்றவர் செரீனா வில்லியம்ஸ்.



# 48 சதம்



உலகக் கிண்ணத்தில் பங்களாதேஷுக்கு எதிரான போட்டியை இந்திய அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வென்றிருக்கிறது. 257 ஓட்டங்களை இந்திய அணி துரத்தியது.

வெற்றிக்கு ஓர் ஓட்டம் மட்டுமே தேவை என்ற நிலையில் வின்னிங் ஷொட்டாக சிக்ஸர் அடித்து தனது அணியை வெல்ல வைத்ததோடு தனது சதத்தையும் நிறைவு செய்தார் விராட் கோலி. ஒருநாள் போட்டிகளில் கோலி அடித்த 48ஆவது சதம் இதுவாகும்.

விராட் கோலிதான் ஆட்டநாயகன் விருதையும் வென்றிருந்தார். விருதை வாங்கிவிட்டு அவர் பேசுகையில்,

“ஜடேஜாவிற்கு செல்ல வேண்டிய விருதை நான் அபகரித்துக் கொண்டதற்காக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். அணிக்காக பெரிதாக பங்களிப்பு செய்ய எண்ணினேன். நடப்பு உலகக் கிண்ணத்தில் இரண்டு போட்டிகளில் அரைச்சதம் அடித்திருந்தேன். ஆனால், அதை சதமாக மாற்ற முடியவில்லை. இந்த முறை அதை சரியாக செய்துவிட வேண்டும் என நினைத்தேன். ஆரம்பத்தில் சில முறையற்ற பந்துகளை எதிர்கொண்டு ஃப்ரீ ஹிட்டோடு இன்னிங்ஸை தொடங்கியதெல்லாம் ஒரு கனவு போன்றுதான் இருந்தது.

ஆடுகளம் சிறப்பாகவே இருந்தது. என்னுடைய ஆட்டத்தை ஆடுவதற்கான வழிவகையை ஆடுகளம் உருவாக்கிக் கொடுத்தது. அணிக்குள் நல்ல மகிழ்வான சூழலே நிலவுகிறது. அத்தனை வீரர்களுமே துடிப்போடு உற்சாகமாக அணிக்காக ஆடிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒரு ரசிகர் கூட்டத்துக்கு மத்தியில் ஆடுவதில் பெரும் மகிழ்ச்சி!” என்றார்.

இடையில் வர்ணனையாளர் கேள்வி கேட்கும் போது, “2011 உலகக் கிண்ணத்தை வென்ற வீரர்களில் நீங்கள் மட்டும்தான் இப்போது அணியில் இருக்கிறீர்கள். உங்களுக்கு இந்த உலகக் கிண்ணத்தைப் பற்றிய சூழல் அதிகம் தெரியுமே?” எனக் கேட்டார்.

கேள்வி வந்து விழுந்த அடுத்த நொடியே தாமதமின்றி, “நான் மட்டும் இல்லை. அஸ்வினும் 2011 உலகக் கிண்ணத்தில் ஆடினார். ஆக, நாங்கள் இரண்டு பேர் உலகக் கிண்ணத்தை வென்ற அனுபவத்தோடு இருக்கிறோம்.” என்றார். கோலியின் இந்த செயல் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

வர்ணனையாளர் மறந்தாலும் எந்த தயக்கமுமின்றி அஸ்வின் பெயரையும் கோலி உச்சரித்து அங்கீகரித்தது அவரை ஒரு “Team Man“ என கூறுவதன் அர்த்தத்தை மீண்டும் உணர வைத்தது.

# பலஸ்தீனர்களின் சுதந்திர போராட்டத்துக்கான ஆதரவை நாம் தொடர்ந்தும் உறுதி செய்வோம்!

## புளொட் அமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 22

பலஸ்தீன தேசத்தின் மீது, அங்குள்ள பொதுமக்களின் நிலைகள் மீது, இஸ்ரேல் தொடர்ச்சியாக நடத்திவரும் கனரக படைக்கருவிகளிலான தாக்குதல்களை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) வன்மையாகக் கண்டிப்பதோடு பலஸ்தீன தேசத்து மக்களின் சுதந்திரத்திற்கான போராட்டத்திற்கு தொடர்ச்சியான எமது ஆதரவையும் உறுதிப்படுத்துவதாக தெரிவித்துள்ளது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழக (புளொட்) ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்,

பலஸ்தீன தேசத்தின் ஒரு பகுதியாயினும், பலஸ்தீன அதிகார சபையின் ஆளுகைக்குட்படா காசாப் பிரதேசத்தில் இருந்து கடந்த ஏழாம் திகதி ஹமாஸ் அமைப்பினர் மேற்கொண்ட தாக்குதலைக் காரணம் காட்டி, பலஸ்தீன மக்கள் அனைவரையும் காவு கொள்ளும் கொடூரமான தாக்குதல்களையும், வாழ்வாதாரத் தடைகளையும் செயற்படுத்த முனையும் இஸ்ரேலின் நோக்கம் உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும். ஹமாஸ் அமைப்பினால் பிடிக்கப்பட்ட பணயக் கைதிகள் விடுவிக்கப்படும் வரை உணவு மற்றும் மருந்து விநியோகங்களை தடை செய்து பலஸ்தீன மக்களை அடிபணிய வைக்க எத்தணித்த இஸ்ரேல் பல்வேறு புற அழுத்தங்களினால் தற்போது நட்பு நாடான எகிப்து ஊடாக மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட விநியோகம் நடக்க அனுமதித்துள்ளது.

ஒரு இஸ்ரேலியர் காயப்படுத்தப்பட்டால் பதிலுக்கு பல பலஸ்தீனியர்களின் உயிர்களைக் காவுகொள்ளும் கொள்கையை நடைமுறைப்படுத்தி பலஸ்தீன மக்களுக்கு அச்சத்தையும் இஸ்ரேலிய மக்களுக்கு அதீத நம்பிக்கையையும் கொடுத்து வைத்திருந்த இஸ்ரேலின் புலனாய்வில் ஏற்பட்டுள்ள தோல்விக்கு ஒட்டுமொத்த பலஸ்தீன மக்களைப் பலிக்கடாவாக்கும் நோக்கத்தை அனுமதிக்க முடியாது. மேற்குக் கரையில் ஆட்சியை வைத்திருக்கும் முகமட் அப்பாஸ் தலைமையிலான பலஸ்தீன அதிகார சபை 1960 களில் உலக நாடுகளால் இணக்கம் காணப்பட்டிருந்த 'இரு நாடு' எனும் தீர்வை ஏற்றுக் கொண்டிருந்தாலும், காஸாவின் ஆட்சியை வைத்திருக்கும் ஹமாஸ் அமைப்பு அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை இஸ்ரேல் நடைமுறையில் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

காஸாவில் உள்ள ஹமாஸ் அமைப்பு உறுப்பினர்களை முற்றாக அழிப்பதென்பது காஸாவில் உள்ள அனைத்து பலஸ்தீன மக்களையும் படுகொலை செய்வதன் மூலமே சாத்தியமாகும். அத்துடன் ஹமாஸ் அமைப்பினரை அழித்தொழிக்க கங்கணம் கட்டி நிற்கும் இஸ்ரேல், ஏழாம் திகதித் தாக்குதலில் சம்பந்தப்பட்டிராத மேற்குக்கரையின் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் படைப்பலத்தை பிரயோகித்து தாக்குதல்களை நடாத்தி நூற்றுக்கணக்கான பலஸ்தீனர்களைக் கொன்று வருகிறது.

பலஸ்தீன தேசமானது, 2012.11.29 அன்று ஐ.நா. சபையின் 67/19 இலக்க தீர்மானத்தின் பிரகாரம் 'பார்வையாளர் நாடு' எனும் வகையில் 127 உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2016.03.24 அன்று, ஐ.நா. பாதுகாப்புச் சபையில் பதின்நான்கு நாடுகளால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், பலஸ்தீனப் பிராந்தியத்தில் இஸ்ரேலியக் குடியேற்றங்கள் நிறுவப்படுவது தடை செய்யப்படுகிறது. பதினைந்தாவது நாடான அமெரிக்கா வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

இத்தனை ஏற்பாடுகளும் உலகின் உச்ச சபையில் இருந்தும்கூட, மொசப்பத்தேமிய நாகரீகத்தின் தொட்டில் என குறிப்பிடப்படும் மேற்படி பிராந்தியத்தின் உரித்தாளர்களில் ஒரு பகுதியினரான பலஸ்தீன மக்கள் மீது 1948 ஆம் அண்டில் நேச நாடுகளால் புதிதாக, பலவந்தமாக சிருஷ்டிக்கப்பட்ட இஸ்ரேலின் ஆக்கிரமிப்பும் அடாவடித்தனங்களும் நிறுத்தப்பட முடியாமல் இருக்கின்றன.

தன்னிடம் உதவி கேட்கும் நாடுகளுக்கு மனித உரிமை நிலவரங்களை நிபந்தனையாக்கும் மேற்குலகமும், உலக நாடுகளின் பொது அமைப்பான ஐ.நா வும் இஸ்ரேலின் மனித உரிமை மீறல்களை, பொதுமக்கள் மீதான படுகொலைகளை, யுத்தக் குற்றங்களை கண்டு கொள்ளாமலிருப்பதுடன் அதன் செயற்பாடுகளை நியாயப்படுத்திக் கொண்டிருப்பதனை நாமும் எம் வரலாற்றுடன் ஒப்பிட்டு உணர்ந்து கொள்ள வேண்டும்.

2009 இல் வன்னியின் கிழக்கு கரையில் சிறு நிலப்பரப்பில் அடைபட்ட நிலையில் இருந்த மக்கள், புலிகளைக் காரணம் காட்டி ஆயிரக்கணக்கில் கொன்றொழிக்கப்பட அனுமதிக்கப்பட்டதைப் போலவே இன்று பலஸ்தீனத்திலும் ஹமாஸைக் காரணம் காட்டி அங்குள்ள மக்கள் கொல்லப்படுகின்றனர்.

மறைந்த பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் அவர்களின் தலைமையில் பலஸ்தீன விடுதலை இயக்கமும் அதன் அங்கத்துவப் போராளிகள் அமைப்புகளும் சுதந்திர பலஸ்தீனத்திற்காக போரிட்ட போது அவர்களுடன் இணைந்து பணியாற்றிய அனுபவங்களைக் கொண்டிருந்தவர்கள் நாங்கள். அன்று பலஸ்தீன மக்களின் போராட்டம் மதங்களைக் கடந்து தேசத்தின் விடுதலையையே இலக்காகக் கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் பெரும்பாலான பலஸ்தீனர்களும் கணிசமானளவு இஸ்ரேலியர்களும்கூட இரு நாடுகள் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக் கொண்டவர்களாகவே இருந்தனர்.

ஆனால் இன்று, மேற்குலக நாடுகளின் ஆதிக்க உணர்வும் பொருளாதார நலன்களும் அதற்கெதிரான பிராந்திய சக்திகளின் அதிகார முனைப்புகளும் பலஸ்தீன தேசத்தை சிதைத்து குறுக்கிவிட்டதோடு, அம் மக்களின் சுதந்திரப் போராட்டமும் அடிப்படைவாதப் போராட்டம் போல அணுகப்படுகிறது. முற்போக்கு சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் கொண்டிருந்த பலஸ்தீன சக்திகள் பிராந்திய போட்டிச் சுழியில் சிக்கி கடும்போக்கு இஸ்லாமிய அமைப்புகளுடன் இணங்கி, இணைந்து செயற்படும் நிலைக்கு சென்று விட்டன.

சமாதான வலைக்குள் பலஸ்தீன அதிகார சபையை சிக்க வைத்து இஸ்ரேலிற்குப் பலத்தையும், பலஸ்தீனத்திற்கு வெறும் பார்வையாளர் தகுதியையும் வழங்கி, எழுச்சி கண்டு வந்த 'இன்பாடிடா' போராட்டத்தை மழுங்கடித்த நோர்வே நாட்டு மத்தியஸ்தம் குறித்து பலஸ்தீனத் தலைவர் அரபாத் அவர்கள் அன்று ஈழப் போராளிகளுக்கு விடுத்திருந்த எச்சரிக்கைக் குறிப்பை நாம் இன்று மட்டுமல்ல என்றும் நினைவிற் கொள்ளவேண்டும்.

பலஸ்தீன மக்களை விரட்டியும் பலஸ்தீனப் பிரதேசங்களை ஊடறுத்தும் உருவாக்கப்பட்ட இஸ்ரேலியக் குடியேற்றங்கள் விலக்கப்பட்டு குறைந்த பட்சம் 1967 இல் உலக நாடுகளால் இணக்கம் காணப்பட்ட எல்லைக்கோட்டுக்கு இஸ்ரேலியப் படைகள் மீள அழைக்கப்பட்டு உருவாக்கப்படக்கூடிய 'இரு நாடுகள்' தீர்வே பலஸ்தீனத்தின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும். கூடவே இஸ்ரேலிய மக்களுக்கு பாதுகாப்பையும் நிம்மதியையும் கொடுக்கும்.

பலஸ்தீன மக்களுக்கெதிரான இஸ்ரேலியர்களின் ஆக்கிரமிப்பு வடிவங்களையே இஸ்ரேலுடன் மிக நெருக்கமான உறவினைக் கொண்டிருந்த அன்றைய ஜே.ஆர் அரசு தமிழர் தாயகத்தில் நடைமுறைப்படுத்தத் தொடங்கியது. குடியேற்றங்களை நிறுவுதல், தேசத்தை துண்டாக்குதல், பண்பாட்டினை மாற்றியமைத்தல், குடிப்பரம்பலை மாற்றியமைத்தல் என அனைத்தையும் படைபலத்தின் துணையுடன் நிறைவேற்றிக் கொண்டது. இன்று வரை அது தொடர்ந்து கொண்டே வருகிறது.

ஏறக்குறைய நூறாண்டுகளாக ஆக்கிரமிப்பாளனின், ஆயுதக் குழுக்களுக்கும் கட்டமைக்கப்பட்ட படைகளுக்கும் எதிராக விடாது போராடும் பலஸ்தீன மக்கள் தமது போராட்டத்தின் நியாயங்களை தார்ப்பரியங்களை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு கடத்தவும் தவறவில்லை. பலஸ்தீன மக்களின் போராட்டத்துடன் ஒத்த பரிணாமங்களைக் கொண்டிருக்கும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு இவையெல்லாம் படிப்பினைகளே.

பலஸ்தீன மக்களினது, அவர்களது தேசத்தினது சுதந்திற்கான நியாயமான தீர்வுக்காக நாம் என்றும் அவர்களுடன் உறுதியாய் நிற்போம் - என்றுள்ளது. (அ)

